26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

Issue: 1366

Friday June 10, 2022

## “முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைகளுக்கு முன்னும் பின்னுமாக அந்த மண்ணை தரிசித்தவன் என்றவகையில் எனது பிறப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு பூரிப்படைகின்றேன்”

### தலைவர் பிரபாகரனால் நன்கு நேசிக்கப்பெற்ற தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் புகழேந்தியின் உணர்வுமிகு உரையில் அவர் தெரிவிப்பு




- (ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

“ஈழப்போர் மிகவும் தீவிரமாக இடம்பெற்ற காலத்தில் நான் வன்னி மண்ணை நேரடியாக தரிசிக்கும் பாக்கியம் பெற்றவன். தலைவர் அவர்களை சந்தித்து அவரோடு பல நாட்களை பயனுள்ள வகையில் கழித்தவன் என்ற வகையில் அவருடைய தலைமைத்துவத்தில் நடந்தேறிக்கொண்டிருந்த ஈழப்போரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவன். அவரது போராளிகள் அணியினர், மண் மீதும் இனத்தின் மீதும் மொழியின் மீதும் கொண்டிருந்த ஆழமான பற்றைப் புரிந்து கொண்டவன் நான்”



இவ்வாறு தலைவர் பிரபாகரனால் நன்கு நேசிக்கப்பெற்ற தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் புகழேந்தி, கடந்த சனிக்கிழமையன்று மாலை கனடா மார்க்கம் நகரில் நடைபெற்ற அவரது *‘நான் கண்ட தமிழீழம் - முள்ளிவாய்க்காலுக்கு முன்பும் பின்பும்’* என்னும் நூல் அறிமுகவிழாவில் இணைய வழி ஊடாக பதிலுரை வழங்கிய போது தெரிவித்தார்.

தமிழ் இன உணர்வாளரும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவருமான திரு நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் மேற்படி நூல் அறிமுகவிழா நடைபெற்றது.

*(உள்ளே விபரமான செய்தி ம் பக்கத்தில்)*



LOGAN
KANAPATHI
MPP, MARKHAM – THORNHILL

*அனைவருக்கும் அன்பான நன்றிகள் .*

என் அன்பார்ந்த தமிழ் உறவுகளே!
ஜூன் மாதம் 2ம் திகதி நடந்த மார்க்கம் தொர்ன்ஹில் *(Markham-Thornhill)* மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் என்னை தேர்வு செய்து ஆதரவு தந்த அனைவருக்கும் அன்பான நன்றிகள்.

தொடர்ந்தும் உங்கள் குரலாக ஒண்டாரியோ பாராள மன்றத்தில் ஒலிப்பேன்.

ONTARIO PC

Authorized by the CFO for the Logan Kanapathi Campaign



# இலங்கையிலிருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் அகதிகளாக தமிழகம் சென்றடைந்துள்ளனர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் அகதிகளாக தனுஷ்கோடி அடுத்த கோதண்டராமர் கடற்கரையை புதன்கிழமை (1) அதிகாலை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் மீட்ட மெரைன் போலீசார் ராமேஸ்வரம் மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் இருந்து இது வரை தமிழகத்திற்கு 83 இலங்கை தமிழர்கள் அகதிகளாக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி




கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் - 6 தொடக்கம் தரம் - 11 வரையிலான மாணவர்களினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் அவர்களும், பிரதிக்கல்விப் பணிப்பாளர் டீ.ஹிகானா அலீப் அவர்களும், உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) எம்.எஸ் சாதுல் அமீன் அவர்களும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ் சரவணமுத்து அவர்களும் இளம் கண்டுபிடிப்பாளர் சோ. வினோஜ்குமார் அவர்களும் மேலும் விஞ்ஞான பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



இக்கண்காட்சியில் சுமார் 250க்கு மேற்பட்ட மாணவர்களின் படைப்புக்கள் பிரயோக ரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு கருத்து தெரிவிக்கையில் பாடசாலை விடுமுறைக்கு முன்னரே மாணவர்களுக்கு இக்கண்காட்சிக்கான படைப்புக்களை உருவாக்குவது பற்றிய விழிப்புணர்வுகளை நடாத்தியிருந்தோம். அதனால் மாணவர்களும் தங்களது விடுமுறைக்காலத்தை இவ்வாறான ஆக்கப்படைப்புக்களுக்காக செலவளித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் புதிய கண்டுபிடிப்புக்கள் மிக முக்கியமானவை. இக்கண்காட்சியில் உள்ள புத்தாக்கங்களைத் தெரிவு செய்து அவர்களை பயிற்றுவித்து, அக்கண்டுபிடிப்புக்களை தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு அனுப்புவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்திற்காக எங்களுடன் இணைந்து பணியுரியும் அனைவருக்கும் நன்றிகளை கல்லூரி சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

# மன்னாரில் பெற்றோலை பெற்றுக்கொள்ள எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முன் ஒன்று கூடிய மக்கள்



நள்ளிரவு முதல் மீண்டும் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட உள்ளதாக வெளியான செய்தியை தொடர்ந்து மன்னாரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் வாகனங்களுக்கான பெற்றோலை கொள்வனவு செய்ய செவ்வாய்க்கிழமை (7) மதியம் முதல் நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

மன்னார் நகர் பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோலை பெற்றுக் கொள்ள மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் கார் ரக வாகனங்களில் வருகை தந்தவர்கள் நீண்ட வரிசையில் நின்று தமது வாகனங்களுக்கு தேவையான பெற்றோலை பெற்றுக் கொண்டனர்.

மேலும் நாட்டில் நள்ளிரவு முதல் பெற்றோலின் விலை பாரிய அளவில் அதிகரிக்கப்பட வுள்ளதாக வெளிவந்த செய்தியை தொடர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை மதியம் பெற்றோலை பெற்றுக் கொள்ள மன்னாரில் வாகன உரிமையாளர்கள் முந்தி அடித்துக் கொண்டனர்.

மேலும் மன்னாரில் லிற்றோ எரிவாயு விநியோகம் கடந்த பல நாட்களுக்கு முன்னர் இடை நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் பாவனையாளர்கள் எரிவாயுவை பெற்றுக் கொள்ள நாளாந்தம் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன் ஒன்று கூடி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மன்னாரில் உள்ள லிற்றோ எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நூற்றுக்கணக்கான முடிவடைந்த எரிவாயு சிலிண்டர்களை வீதிக்கு அருகில் வைத்து கண்காணித்து வருகின்றனர்.

ஏனைய மாவட்டங்களில் பல முகவர்கள் ஊடாக பல நூற்றுக்கணக்கான லிற்றோ எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு வினியோகிக்கப்பட்டது. எனினும் மாவட்டத்தில் ஒரு தடவை மாத்திரமே எரிவாயு வினியோகிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உயர் அதிகாரிகள் அசமந்த போக்குடன் நடந்து கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

# உலக சமுத்திர தினத்தையொட்டி மன்னார் தோட்டவெளி கடற்கரை பகுதியில் இடம்பெற்ற தூய்மையாக்கல் நிகழ்வு



உலக சமுத்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக கடல் வளங்களை பாதுகாக்கும் கருப்பொருளுக்கு அமைய மன்னார் தோட்டவெளி கடற்கரை பகுதியில் தூய்மைப் படுத்தும் நிகழ்வு புதன்கிழமை (8) காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற கடற்கரை தூய்மையாக்கல் நிகழ்வில் அப்பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு தூய்மையாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் கடல் சூழல் பாதிப்பு மற்றும் கடல் வள முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு வழங்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் சிலாவத்துறையில் தாய் – சேய் நிலையம் திறந்து வைப்பு




சிலாவத்துறையில் மிக நீண்ட காலத் தேவையாக காணப்பட்ட தாய்-சேய் நிலையம் புதன்கிழமை (8 திகதி) அன்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

LDSP விசேட வேலைத் திட்டத்தின் கீழ் முசலிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கட்டிடம் இதுவாகும்.

முசலி பிரதேச சபைத் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், முசலி பிரதேச செயலாளர், முசலி சுகாதார வைத்திய அதிகாரி, சிலாவத்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள், சிலாவத்துறை அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தாய்மார்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



சிலாவத்துறை தாய் - சேய் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு முசலி பிரதேச சபையினால் இன்று முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1366 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 10, 2022

# கலாநிதி வசந்தகுமார் கனடிய தமிழர் சமூகத்தின் ஒரு விசேட அடையாளமாகத் திகழ்ந்தவர்

## ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவிப்பு

"எம் மத்தியில் பல ஆளுமைகள் நிறைந்தவராகவும் சமூகப்பற்றும் அனுபவப் பகிர்விற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட்டவருமான கலாநிதி வசந்தகுமார் கனடிய தமிழர் சமூகத்தின் ஒரு விசேட அடையாளமாகத் திகழ்ந்தவர். அவருடைய இழப்பினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு எமது சமூகம் நீண்ட போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியிருக்கும்"

இவ்வாறு, கனடாவில் பல ஆண்டு காலம் வாழ்ந்த வண்ணம் பல்வேறு துறைகளில் பிரகாசித்தவராக விளங்கியவரும் பொறியியலாளரும் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றிய கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 27ம் பக்கத்தில்)*




RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

# தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு என்ற தலைப்பில் கனடாவில் நடைபெறவுள்ள தமிழ் மொழி வாரம்- 2022



*தமிழ் மொழியின் வாழ்வே தமிழரின் வாழ்வு* என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள தமிழ் மொழி வாரம் தொடர் நிகழ்வுகள் கனடாவின் ரொறன்ரோ மாநகரிலும் அதனை அண்டியுள்ள ஏனைய சிறு நகரங்களிலும் நடைபெறவுள்ளன. 26-06-2022 அன்று ஆரம்பமாகவுள்ள இந்த தமிழ் மொழி வாரம் தொடர் நிகழ்வுகளை நடத்துவதன் நோக்கங்கள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் ஆகியவை தொடர்பாக கனடாவில் உள்ள தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அறியத்தரும் நோக்குடன் 3ம் திகதி வெள்ளிக்கிழமை கனடா தமிழ்ச் சங்கத்தின் தலைமையகத்தில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

கனடா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு சுப்பிரமணியம் இராசரத்தினம் மேற்படி நிகழ்விற்கு தலைமை தாங்கினார். மேற்படி தமிழ் மொழி வாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அமைக்கப்பெற்ற செயற் குழுவின் அங்கத்தவர்கள் பலரும் அங்கு கலந்து கொண்டு விபரங்களைப் பகிர்ந்து கொண்டனர். அங்கு கலந்து கொண்ட ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பத்திரிகைகளின் பிரதம ஆசியர்களும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

*(உள்ளே விபரமான செய்தி 27ம் பக்கத்தில்)*

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

MONEY PROBLEMS?™
உங்கள் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# LOOKING FOR YOUR Dream House?



Call **SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Manufacturing Workers & General Labour Needed

உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள்
முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை

**Manufacturing Workers and General Labour Needed**
**for Full-time Morning Shifts**
**Looking for Workers to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for long-term positions.**
**Located in Scarborough near Markham and Ellesmere.**
**Salary starting from $16.00 + with benefits.**

**Contact - Essan : 647-993-2872**


### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**



### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

### Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

**We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.**

**Responsibilities:**
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

**Qualifications:**
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

**Benefits:**
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

**Contact - Essan : 647-993-2872**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு
எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### முழு நேரப் பராமரிப்பாளர் ஒருவர் தேவை

ஸ்காபுறோவில் வசிப்பவரும் நடமாடக்கூடியவருமான முதியவர் ஒருவரை அதே வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக் கூடிய ஆள் ஒருவர் உடனடியாகத் தேவை. அனுபவம் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு:**
**647-540-9520**

### ACCOUNTING ASSISTANT WANTED

**Busy accounting firm in Scarborough, requires Accounting Assistant. Fluent in English and Tamil and computer literacy.**
**Required Accounting Graduates only, Experience not required, we will train**
**Interested applicants resume to acctgtrainee@gmail.com**

### உணவகத்தில் உடனடி வேலை வாய்ப்பு

**Line Cooks** மற்றும் **Dishwashers** ஆகியோர் தேவை.
**150 Water Street, Port Perry ON L9L 1C4** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Anchor Point Grill House & Bar** உணவகத்தில் அமைந்துள்ள இடம் **intersection of Water Street and Mary Street**

**உடன் அழைக்கவும்**
**647-680-4785**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தமிழர்களை நாட்டைவிட்டு 'துரத்திய' தென்னிலங்கை தற்போது சிங்களவர்களையும் 'துரத்துகின்றது'

கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக மாங்கனித் தீவு என்ற இலங்கையில் உரிமைகள் மறுக்கப்பட்டும் உடைமைகள் அழிக்கப்பட்டும் உயிர்கள் பறிக்கப்பட்டும் தொடர்ச்சியாக. இன்னல்களை அனுபவித்த ஒரு இனமான ஈழத் தமிழ் இனம் அங்கு அடையாளம் காணப்படுகின்றது. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்று நாம் எமது விரல்களால் எழுதுவதற்கு கூட ஒரு துளி சான்று எம்மிடத்தில் இல்லை இந்த விடயம் எமக்கு மட்டுமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தென்னிலங்கை பெரும்பான்மை இனத்தின் அரசியல்வாதிகள் அனைவரும் நன்கு அறிந்த விடயம் என்பதே உண்மை.

தமிழர்கள் என்ற மொழி அடிப்படையிலான காரணத்தால் வடக்கு கிழக்குத் தமிழர்கள் மாத்திரமல்ல. மலையகத் தமிழர்களும் தாக்கப்பட்டார்கள். கடந்த காலங்களில் இலங்கையின் சில பகுதிகளில் இஸ்லாமிய சகோதர சகோதரிகளும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த தீவிர இனவாதிகளாலும் காடையர்களாலும் தாக்கப்பட்டார்கள். கொன்றழிக்கப்பட்டார்கள்.

எமது மக்கள் பேசுகின்ற மொழியின் காரணமாகவும் நாம் கடைப்பிடிக்கின்ற பண்பாட்டு முறைகள் காரணமாகவும். கல்வியில் ஆர்வம் காட்டி முன்னேற்றம் கண்ட ஒரு சமூகம் என்ற காரணத்தாலும் எமது ஈழத்தமிழினம் சிங்கள இனவாதிகளாலும் அரசியல் இலாபம் தேட முற்பட்ட அரசியல்வாதிகளாலும் 'குறி' வைக்கப்பட்டார்கள் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறாக பாதிக்கப்பட்ட எம் மக்கள் மத்தியில் கிளர்ந்தெழுந்த இளைஞர்கள் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்ற காரணத்தால் எமது இனம் மீண்டும் 'குறி' வைக்கப்பெற்றது.

இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான எமது இனத்தின் சொந்தங்களான உயிர்கள் பறிக்கப்பட்டன. இதனை இன்னொரு வரியில் சொல்வதனால் " ஈழத் தமிழ் மக்கள் தென்னிலங்கை இனவாதிகளால் நாட்டைவிட்டு துரத்தப்பட்டார்கள்" என்று கூறலாம்.

இவ்வாறு எம் இன மக்கள் இலங்கையை விட்டு 'பறந்து' செல்லத் தொடங்கி நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் இலங்கையை 'அப்பே ரட்ட' என்ற அர்த்தம் கொண்ட 'எங்கள் நாடு- சிங்களவர்களின் நாடு" என்ற வெற்றுக்கோசத்திற்கு கட்டுப்பட்டு நின்ற சிங்கள மக்கள் தற்போது தங்களை வழி நடத்திய தலைவர்கள் 'பொய்யர்கள்' மட்டுமல்ல 'திருடர்கள்' நாட்டைச் சூறையாடியவர்கள்' என்று அடையாளம் கண்ட காரணத்தால் அங்கு போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள். இவ்வாறாக பசி, பட்டினி. விலைவாசி உயர்வு, கல்வி கற்கும் நிலை மறுக்கப்பட்டமை ஆகியவை நாட்டின் பெரும்பான்மை மக்களையும் பாரதூரமாக பாதிக்கத் தொடங்கியுள்ளன. இதனால் அவர்கள் நாட்டை விட்டு 'பறந்து' செல்லத் தயாராகின்றார்கள் என்ற செய்தி அங்கிருந்து 'பறந்து' வந்துள்ளது.

கடந்த நாட்களாக இலங்கையில் கடவுச்சீட்டுகளின் தேவை பாரிளளவு அதிகரித்து, பிராந்திய அலுவலகங்களில் நிலைமையை கட்டுப்படுத்த முடியாத அளவிற்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சிங்கள மக்கள் பெருமளவில் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள 'முண்டியடிப்பதாக' தெரிகின்றது.

வரிசையில் நிற்கும் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்குவதற்காக திணைக்களம் தனது சேவைகளை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நீட்டித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சேவை காலத்தை அதிகரித்த போதிலும் பிராந்திய அலுவலகங்களில் நிலைமை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இவற்றைப் பார்க்கும் போது தமிழ் மக்களை 'துரத்தியடித்த' தென்னிலங்கை, தற்போது, தனது சொந்த மக்களையே 'துரத்துவதற்கு' தயாராகிவிட்டது என்று நிதர்சனமாகத் தெரிகின்றது.

# கனடா 'உதயன்' திரு.லோகேந்திரலிங்கத்தைப் பாராட்டும் இயக்குனர் மற்றும் நடிகர். ஏ. வெங்கடேஸ் அவர்கள்



**அனைத்து நண்பர்களுக்கும்**
**தமிழ்நாட்டிலிருந்து இயக்குனர் மற்றும் நடிகர். ஏ . வெங்கடேஸின்.**

**வணக்கம்.**

---

கனடா "உதயன்" நிறுவனர் திரு.லோகேந்திரலிங்கம்.! ஒரு முறை இவர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த பொழுது என்னை "கனடா உதயன் " என்ற பத்திரிக்கையின் விழா ஒன்றுக்கு அழைத்தார். சென்னையில் இந்த விழா நடைபெற்றது. நானும் நட்பின் நலம் கருதி அந்த விழாவுக்குச் சென்றேன். வழக்கம்போல,திரு. லோகேந்திர லிங்கம் அவர்களின் எல்லா பங்க்சன் போலவே அதுவும் சிறப்பாக நடந்து முடிந்தது அதன் பின்னர் அவர் என்னை கனடாவுக்கு ஒரு விழாவுக்கு அழைத்தார்.

அதுவும் கனடா உதயன் பத்திரிகையின் விழாதான். அந்த விழா முடிந்த பின்னர் நான் கனடா வாழ் நம் தமிழ் மக்களை எல்லாம், சந்தித்து விட்டு இந்தியா திரும்பினேன். அந்த வருகையின் போது லோகேந்திரலிங்கம் அவர்களின் அறிமுகத்தின் மூலம்,கனடாவில் எனக்கு கிடைத்த தயாரிப்பாளர் திரு. பரராஜசிங்கம் அவர்கள். அவருடன் இணைந்து நான் நேத்ரா என்ற ஒரு தமிழ் படத்தை தயாரித்து அது வெளியாகி நல்ல வரவேற்பையும் பெற்றது. குறைந்த செலவில் எடுத்து அந்த படம் எல்லோருக்கும் பிடித்த ஒரு " க்ரைம் த்ரில்லராக" அமைந்தது. எனக்கு லோகேந்திரலிங்கம் மூலம் நிறைய நண்பர்கள் கிடைத்தார்கள்,அதுவும் கனடாவில். இது ஒருபுறமிருக்க, கனடாவில் நான் வந்திருந்த பொழுதும் இந்தியா திரும்பிய பின்பும் கூர்ந்து கவனித்த வி' யம் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் கடினமான உழைப்பும், தமிழ் மீது அவர் வைத்திருக்கும் பற்றும். அந்தப் பற்று தான் , அவரை கலைதுறையில் , இந்த ஐம்பதாவது ஆண்டு வரை,பொன் விழாவுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

நான் கனடா வந்திருந்த பொழுது அவர் என்னை அழைத்துக் கொண்டு அங்கு உள்ள பெரிய மனிதர்களை சந்திக்க கூட்டிச் செல்வார். அப்போதெல்லாம் அவர்களது வாகனத்தில் அன்றைக்கு ரிலீசான கனடா உதயன் பத்திரிகை பிரதிகள் இருக்கும் .அதை ஒவ்வொருவர் இடமும் அவரே கையில் கொடுப்பார். அப்பொழுதெல்லாம் நான் கேட்பேன்.அவர்கள் தான் உங்கள் பத்திரிகையில் சந்தாதாரர் ஆயிற்றே !கனடா போன்ற நாடுகளில் எளிதாக நீங்கள் டெலிவரி செய்யலாமே? ஏன் நேரில் வந்து கொடுக்கிறீர்கள் என்று கேட்பேன். அவர் கூறுவார், "இவர்கள் தமிழை வாசிக்கவில்லை சுவாசிக்கிறார்கள்.. அதனால் நான் கொடுப்பதுதான் மரியாதையும், முக்கியஸ்தர்களுக்கு நான் கொடுக்கும் ஒரு கௌரவம் ஆகும்" என்பார். அப்படிப்பட்ட அவரிடம் இரண்டு நாட்கள் முன்பு, தொலைபேசியில் கலைத்துறையில் அவரது சேவையின்பொன்விழா ஆண்டுக்கான வாழ்த்துகளை தெரிவித்த பொழுது, அப்படியே கதைத்துக்கொண்டு இருந்தோம். அப்பொழுது நான் கேட்டேன், தமிழை நேசிக்கும் நீங்கள் முதலில் எழுதிய கவிதை என்ன என்றேன். அவர் அந்தக் கவிதையை எனக்கு கூறினார். அது அவரது இளவயதில், அதாவது 1976 அல்லது 77 எழுதியது எனக் கூறினார். அந்தக் கவிதை இதோ

..."அந்தப் பதவிக்கு அவர்களுக்கு கேட்டிருந்த
ஆகக்குறைவான உயரம் எனக்கு இல்லை ...
வந்திருந்த நண்பன் வழி சொன்னான்--
5000 பணம் கட்டின் ஒன்றின் மேல் ஏறி நின்ற வண்ணம்
என்னை அளக்க விட்டேன்..
அப்போது உயரம் சரியாக இருந்தது!"

ஆஹா! என்ன ஒரு கவிதை பார்த்தீர்களா..!

லஞ்சம் வாங்குவதை அழகிய கவித்துவமாய், சொன்ன அந்த தமிழ் இன்று கனடாவில், ஐம்பதாவது அதாவது பொன்விழா ஆண்டில் கலைக்காக,தன் உழைப்பையும் திறமையையும் அர்ப்பணித்து கொண்டாடும் இந்த ஆண்டில், திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் தமிழ் நேசிப்பையும், கலைக்கான உழைப்பையும் பாராட்ட உண்மையில் வார்த்தைகள் இல்லை.,இருப்பினும், இங்கிருந்தே எழுந்து கைதட்டி, அவரது தமிழில் பற்றையும் ,உழைப்பின் உயர்வையையும் பாராட்டி மகிழ்கிறேன். ஒரு ரசிகனாக மட்டுமல்ல, அவரைப் போன்றே கலியையும்,தமிழையும் நேசிக்கும் ஒரு உழைப்பாளியாக..!

*என்றும் உங்கள் அன்பு, ஏ . வெங்கடே".*
*இயக்குனர் மற்றும் நடிகர்.*

# தற்போதைய நெருக்கடிக்கு பொதுமக்களையும் குற்றம் சுமத்த வேண்டும்



## பதவி விலகிய 'திருடர்'களில் ஒருவரான பசில் ராஜபக்ச தெரிவிப்பு

இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்கள் இந்நாட்டின் மக்கள் தான். எனவே அவ்வாறு ஆட்சி அமைக்க வழிசமைத்தமையால் தற்போதைய நெருக்கடிக்கு பொதுமக்களையும் குற்றம் சுமத்த வேண்டும். இதை நான் முக்கியமாக வலியுறுத்துகின்றேன்" இவ்வாறு தெரிவித்தார் பதவி விலகிய நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ச.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை கூறியுள்ளார். அதிகாரத்தை அரசாங்கத்திடம் கையளித்தமைக்கு பொது மக்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர்கள் தற்போது அனுபவிக்கும் அனைத்து கஸ்டங்களும் தோன்றுவதற்கு அவர்களும் காரணகர்த்தாக்கள் ஆவார்கள் என்றும் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது பின்வருமாறு தெரிவித்தார்.

"நான் இனி நாடாளுமன்றத்திற்கு தேவையில்லை. நிதியமைச்சராக பதவியேற்கவே நாடாளுமன்றத்திற்கு வந்தேன், தற்போது அமைச்சர் பதவியில் இருந்து விலகியதன் காரணமாக நான் நாடாளுமன்றத்திற்கு செல்லவில்லை" என்று தெரிவித்த அவர் தான் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் தான் ஆற்றிய பணி குறித்து தனக்கு வருத்தம் இல்லை என்றும், அதே சமயம் தலையாட்டுவதை விட இறுதியான அமைப்பு மாற்றத்தை தான் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கட்சி வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உண்டு. எனது இராஜினாமாவால் வெற்றிடத்திற்கு தேசியப் பட்டியல் மூலம் பொருத்தமான ஒருவர் நாடாளுமன்றத்திற்கு வருவார் என நான் எதிர்பார்க்கிறேன், சிறிலங்கா பொதுஜன பெரமுன் தேர்தலுக்கு தயாராக உள்ளது, கட்சி வெற்றிபெறும் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது," என்று அவர் கூறினார். தற்போது நடைபெற்று வரும் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் உட்பட, வெளியில் உள்ள எவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அனுமதிக்க கட்சி தயாராக உள்ளது. எனினும் இதனை மேலிடம் தான் தீர்மானிக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே பொருளாதார நெருக்கடி நீடித்ததாகவும், நிதியமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்ததாகவும் பசில் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்கள் அனைத்தும் தன்னையும் தனது சகோதரர்களையும் காப்பாற்றும் வகையிலேயே அமைந்ததாகவும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்ட தமிழ் பேசும் ஊடகவியலாளர் ஒருவர் கருத்து வெளியிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியா செய்திகள்
India News

# இந்தியாவை முதலிடத்துக்கு கொண்டு வருவது இளைஞர்கள் கையில் தான் உள்ளது என்கிறார் இஸ்ரோ சிவன்

ராமேஸ்வரத்தில் உள்ள மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் வீட்டிற்கு இஸ்ரோ முன்னாள் தலைவர் டாக்டர். சிவன் வருகை தந்து முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் உறவினர்களை சந்தித்து நலம் விசாரித்தார். இதன் பின்னர் மறைந்த அப்துல் கலாம் இல்லத்தில் பள்ளி மாணவ, மாணவிகளின் பல்வேறு அறிவியல் சம்பந்தமான கேள்விகளுக்கு பதிலளித்து கலந்துரையாடினார்.

இதையடுத்து, செய்தியாளர் சந்தித்த டாக்டர் சிவன், இந்தியாவை உலகத்தில் முதலிடத்தில் கொண்டு வருவது இளைஞர்கள் கையில் தான் உள்ளது என்றும் அதனால் தான் நான் செல்லுமிடமெல்லாம் கிராமப்புற மாணவர்களை அதிக அளவில் தொடர்பு வைத்து வருவதாகவும் தெரிவித்தார். இஸ்ரோ மற்றும் நாசா இணைந்து உருவாக்கி கொண்டிருக்கின்ற நைஸா என்ற செயற்கைக்கோள் இந்தியாவிலிருந்து ஏவப்பட உள்ளது. இந்த செயற்கை கோளால் பூமியில் நிலவக்கூடிய காலநிலை மாற்றங்களான இயற்கை சீற்றங்கள், வெப்ப நிலை, பருவமழை, புயல், சுனாமி, பனிக்கட்டி சறுக்கு போன்றவற்றை முன்கூட்டியே அறிய முடியும். இது இந்தியாவிலிருந்து ஏவப்பட்டுவதால், உலகநாடுகளுக்கு பயனளிக்கும் நாடாக இந்திய இருக்கும் என்று தெரிவித்தார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் விண்வெளி ஏவுதளம் அமைய உள்ளதற்கு, 2200 ஏக்கர் நிலம் தேவைப்படுவதாகவும். இஸ்ரோ தமிழக அரசிடம் கேட்கப்பட்டதை அடுத்து முதல்கட்டமாக 1750 ஏக்கர் இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் முழுமையான இடங்கள் கையகப்படுத்திய பின்னர் கட்டுமான பணிகள் தொடங்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழ்நாடு "கஞ்சா விற்பனைக் கூடமாக" மாறிவருவதைத் தடுக்க திமுக அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## - சீமான் வலியுறுத்தல்



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழ்நாட்டிலுள்ள பெருநகரங்கள் முதல் சிறுகிராமங்கள் வரை கஞ்சா விற்பனை கட்டுக்கடங்காது அதிகரித்து வருவது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. ஏற்கனவே, மதுபானங்களை அரசே விற்பதன் மூலம் தமிழகக் குடும்பங்களைச் சீரழித்தது போதாதென்று, தற்போது கஞ்சா பயன்பாட்டினை கட்டுப்படுத்த தவறி, வளரிளம் தலைமுறைகளின் எதிர்காலத்தையே அழித்தொழிக்கும் திமுக அரசின் அலட்சியப்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது.

தமிழ்நாட்டில் ஒவ்வொருநாளும் கிலோ கணக்கில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதும், அதனால் அதிகளவில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர் என்பதும் மிகுந்த கவலையையும், வேதனையையும் அளிக்கிறது. மேலும், அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாட்டால் கொலை, கொள்ளை, வழிப்பறி, கூட்டுப் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட கொடுங்குற்ற நிகழ்வுகளும் பெருமளவு அதிகரித்து தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு முற்றுமுழுதாகச் சீரழியவும் காரணமாகியுள்ளது.


திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஓராண்டில் மட்டும் ஒரு இலட்சம் கிலோ அளவிற்கு கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், 2200 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசே தெரிவித்துள்ளது, போதைப்பொருட்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும், பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்த காவல்துறையினர் கைதாகியுள்ளதும், கஞ்சா விற்பனை தொடர்பாகப் பொதுமக்கள் அளிக்கும் ரகசியத் தகவல்களைக் கசியவிடும் காவல்துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுப்பதும், கஞ்சா விற்பனையில் தமிழ்நாடு எந்த அளவுக்கு மோசமான நிலையை எட்டியுள்ளது என்பதையே காட்டுகிறது.

கடந்த காலங்களில் பெருநகரங்களில் மிகமிக ரகசியமாக மட்டுமே கஞ்சா விற்பனை மற்றும் பயன்பாடு என்றிருந்த நிலைமாறி, தற்போது தமிழ்நாட்டின் சிறிய கிராமங்களில்கூட மிக சாதாரணமாக கஞ்சா விற்பனை செய்யப்படுவது தமிழிளந்தலைமுறையினரின் எதிர்காலம் குறித்த மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆந்திராவிருந்தே நாள்தோறும் தமிழ்நாட்டிற்குள் கஞ்சா பொட்டலங்கள் மொத்தமாக கடத்தப்படும் நிலையில், அதனைத் தடுக்க திமுக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

தமிழ்நாட்டில் கஞ்சா மற்றும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர், கடத்துவோர், பதுக்குவோர், விற்போர் மீது மட்டுமே அவ்வப்போது கண்துடைப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இடைத்தரகர்கள் மீது எடுக்கப்படுமளவுக்கு, கஞ்சா உற்பத்தி முதலாளிகள் மீது தமிழகக் காவல்துறையால் எவ்வித உறுதியான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தினால்தான் தமிழ்நாட்டில் இன்றுவரை கஞ்சா பயன்பாட்டினை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. மேலும், போதைப்பொருள் குற்றங்களைத் தடுக்கும் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு காவலர்கள் பிரிவில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறையும் தமிழ்நாட்டில் கஞ்சா விற்பனையை முழுவதுமாகத் தடுக்க முடியாததற்கு மற்றுமொரு முக்கியக் காரணமாகும்.

ஆகவே, காவல்துறையைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா. மு.க.ஸ்டாலின் அவர்கள், சீரழிந்து வரும் தமிழக இளந்தலைமுறையினரின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டிய அதிமுக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சனையில் உடனடியாகச் சீரிய கவனமெடுத்து தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை முழுவதுமாக ஒழிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே, போதைப்பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் "சிறப்பு ஆலோசனை வகுப்புகளை" உடனடியாக நடத்த வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# 1330 திருக்குறளையும் ஒப்புவித்து உலக சாதனை புரிந்த விழுப்புரம் அரசு பள்ளி மாணவிகள்

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த கோனேரிக்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அதே பகுதியை சேர்ந்த சாதனா மற்றும் சத்யா ஆகிய இரு மாணவிகள் 8ம் வகுப்பு படித்து வருகின்றனர். கொரோனா விடுமுறையின் போது சத்தியா மற்றும் சாதனா ஆகிய இருவரும், திருக்குறளை பயின்று சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். இவர்களின் இம்முயற்சிக்கு ஆசிரியர் ஆரோக்கியராஜ் வழிகாட்டி உறுதுணையாக இருந்துள்ளார். கடந்த 2 மாதத்திற்கு முன்பு ஒரு மணி நேரம் 40 நிமிடத்தில் 1330 திருக்குறள்களையும் கூறிய இம்மாணவிகள், கடுமையான முயற்சிக்குப் பிறகு 25 நிமிடங்களுக்குள் அனைத்து திருக்குறளையும் அசுர வேகத்தில் ஒப்புவித்து வருகின்றனர். இது குறித்து ஆசிரியர் ஆரோக்கியராஜ் கூறும்போது கடந்த பிப்ரவரி மாதம் மாவட்ட அளவில் இரண்டு மாணவிகளும் வெற்றி பெற்றுள்ளனர். மேலும் சாதனா 13 நிமிடத்தில் அனைத்து குறள்களையும், சத்தியா 25 நிமிடத்தில் அனைத்து திருக்குறளையும் ஒப்புவிக்கும் திறமையும் பெற்றுள்ளனர். எந்த திருக்குறளை கேட்டாலும் எண் மற்றும் அதிகாரம் கூறினாலும் அந்த திருக்குறளை கூறும் திறன் பெற்றுள்ளனர்.

இதனை அடுத்து கடந்த வாரம் வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற திருக்குறள் இரட்டை உலக சாதனை நிகழ்வில், இம்மாணவிகள் இருவரும் உலக சாதனை படைத்துள்ளனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மஸ்தான் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டினார். இவர்கள் இருவருக்குமான உலக சாதனை சான்றிதழை Unique World Records என்ற அமைப்பு (வெள்ளிக்கிழமை) வழங்கியது. மேலும், திருக்குறள் படிப்பது எல்லாருமே செய்வது போன்று தான், இருந்தாலும் மாணவிகள் தனித் திறமை என்னவென்றால் திருக்குறள் அதிகாரத்தின் எண்ணை கூறினால், அதோட அதிகாரத்துடன் திருக்குறளை அப்படியே ஒப்புவிக்கிறார்கள். இந்தத் திறமையை தான் இவ்விருவரையும் உலக சாதனை படைக்க வைத்தது. இந்த உலக சாதனை படைத்த இரு மாணவிகளையும் அப்பள்ளி சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் பாராட்டி வருகின்றனர்.

# இராமேஸ்வரம் கடலில் தற்கொலை செய்து கொண்ட வயதான தம்பதியினர்



கோவை மாவட்டம், பொன்னாபுரம் பகுதியை சேர்ந்தவர் 62 வயது நிறைந்த கோவிந்தராஜ். இவரது மனைவி தனலட்சுமி. இவர்களது மகன் கடந்த ஆண்டு கொலை செய்து உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் தொடர்ந்து மன விரக்தியில் இருந்து வந்த அந்த தம்பதியினர் கடந்த சில தினங்களுக்கு முன்பு ராமேஸ்வரம் வந்துள்ளனர். அப்பொழுது தற்கொலை செய்து கொள்ள எண்ணிய அவர்கள் தங்கள் இருவரது உடல்களையும் துணியால் கட்டிக்கொண்டு கடலில் ஆழமான பகுதிக்கு சென்று தற்கொலை செய்துள்ளனர். அதற்கு முன்பு அவர்கள் தங்களது சொத்தை விற்று, தங்களது மகன் பெயரில் அறக்கட்டளை அமைத்து அதன் மூலம் நலத்திட்ட உதவிகளை செய்யுமாறு உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடல்பகுதியில் கோவிந்தராஜ்-தனலட்சுமி தம்பதியினர் பிணமாக மிதந்துள்ளனர். இதனை கண்டு அங்கு புனித நீராடிய பக்தர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். பின்னர் இதுகுறித்து போலீசாருக்கு தகவலளிக்கப் பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அவர்கள் உயிரிழந்த தம்பதியினரின் உடல்களை மீட்டுள்ளனர். பின்னர் ஆதார் கார்டு மூலம் அவர்களைக் குறித்த தகவல் அறிந்த போலீசார் கோவிந்தராஜ் உறவினர்களிடம் இதுகுறித்து தகவல் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் அச்சங்குளத்தில் நாளை சுனாமி ஒத்திகை

## அயல் கிராம மக்கள் பதற்றமடைய தேவையில்லை-பிரதேச செயலாளர்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் வியாழக்கிழமை (9) காலை சுனாமி ஒத்திகை இடம்பெற்ற அயல் கிராம மக்கள் அச்சமடைய தேவையில்லை என நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்த குமார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம், அறுகுக்குன்று போன்ற கடற்கரையோர பிரதேசங்களில் எதிர் காலத்தில் சுனாமி சம்பந்தமான அனர்த்த நடவடிக்கைகளில் இருந்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமான ஒத்திகை நிகழ்வு 9/6/2022 காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரையான காலப்பகுதிக்குள் நடைபெற்றன.

சுனாமி நடைபெறும் போது எவ்வாறு தற்காத்துக் கொள்வது போன்ற ஒத்திகை நிகழ்வு மாத்திரம் இடம்பெறும்.இது ஒரு உண்மையான சம்பவம் அல்ல.

ஏனைய அயல் கிராமத்து மக்கள் இது குறித்த ஒத்திகை குறித்து பதற்றமடைய தேவையில்லை. என நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்த குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் நீண்ட நாட்களின் பின்னர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம்



மன்னார் நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட நாட்களின் பின்னர் வியாழக்கிழமை (9) காலை முதல் வாகனங்களுக்கான டீசல் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக மன்னாரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு டீசல் எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். மேலும் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் பேருந்துகளுக்கும் டீசல் இல்லாமையினால் பேருந்து உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள இரண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் இன்றைய தினம் வியாழக்கிழமை முதல் வாகனங்களுக்கான டீசல் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை (9) அன்று காலை முதல் மண்ணெண்ணை வழங்கப்பட்டது.

குடும்ப அட்டை பரிசீலிக்கப்பட்டு 500 ரூபாவிற்கு மண்ணெண்ணை வழங்கப்பட்டது. மேலும் பெட்ரோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# பொருளாதார நெருக்கடியால் மன்னாரில் மட் பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

நாட்டில் நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பொருளாதார தட்டுப்பாடுகள் பொருட்களுக்கான விலை ஏற்றம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றாக காணப்படும் மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தார்கள்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், மடுக்கரை, செம்மண் தீவு கருக்காய் குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மட்பாண்ட தொழிலாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருளுக்கான விலையேற்றம் காரணமாக சட்டி, பானை, அடுப்பு, சிட்டி விளக்குகள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்பு போல் வியாபாரிகள் எவரும் அவர்களிடம் வந்து பெற்றுக் கொள்வது இல்லை என மட்பாண்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதனால் தூர பிரதேசங்களுக்கு பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்தால் செலவு இரட்டிப்பாகிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் தேங்கி கிடப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

எனவே இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டு எரிபொருட்கள் உட்பட அனைத்து பொருட்களும் தடையில்லாமல் விலை குறைவாக கிடைத்தால் மட்டுமே எமது பாரம்பரிய தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியும்.

மேலும் பலர் இந்த தொழிலில் இருந்து விலகி வேறு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள். தங்களது காலத்தின் பின்பு தமிழர்களின் பாரம்பரிய தொழிலாக காணப்படும் இந்த மண்பாண்ட தொழிலை தொடர்ந்து செய்வதற்கு ஆட்கள் இல்லை.

காலப்போக்கில் மன்னார் மாவட்டத்தில் இந்த மட்பாண்ட தொழில் அழிந்து போகக் கூடும் என மட்பாண்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**


**MORTGAGE**

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் பி.ஞானராஜ் நியமனம்

இலங்கை செய்திகள் Sri Lanka News



இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக மன்னார் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளரும், மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் செயலாளருமான ப.ஞானராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பாடசாலை உதை பந்தாட்டத்தை திட்டமிட்டு வழி நடத்தி சர்வதேச மட்டத்தில் தரமுயர்த்த தகுதியான மேற்பார்வை மற்றும் பொறுப்பு கூறும் தரத்தில் அதிகாரியை புதிய 03/2021 சுற்று நிருபத்திற்கமைய நியமிக்க, இலங்கை மத்திய கல்வி அமைச்சு நாடளாவிய ரீதியாக SLEAS அதிகாரிகளிரமிருந்து விண்ணப்பம் கோரி, நேர்முகத் தேர்வு நடத்தியது.

குறித்த நேர்முகத் தேர்வில் இலங்கையிலிருந்து ஒரே ஒரு தமிழனும் மன்னார் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளரும், மன்னார் மாவட்ட உதைபந்தாட லீக் செயலாளரும், உதை பந்தாட்டத்தில் சகல துறை விற்பன்னருமாகிய ப.ஞானராஜ் விண்ணப்பித்து, நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, இலங்கை மத்திய கல்வி அமைச்சினால் இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# தமிழருக்கு எதிரான அடக்குமுறையை எதிர்த்து மாணவர் சக்தியாக தியாகி சிவகுமாரன் போராடினார்

## - வலி கிழக்கு தவிசாளர் நிரோஷ்



போராட்டப் பயணப்பாதையில் இனத் திற்கான மாணவர் எழுச்சியின் வடிவமாக சிவகுமாரனின் புரட்சியை என்றும் நினைவில் கொள்கின்றோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

தியாகி பொன் சிவகுமாரனின் 48 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இவ் அஞ்சலி நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தமிழ் மக்களுக்கு எதிரான அரச அடக்கு முறை இன்றும் நீட்சியாக காணப்படுகின்றது. எமது உரிமைகளுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த சிவகுமாரனின் அர்ப்பணிப்பினை ஒட்டுமொத்த தமிழ் இனமும் நினைவுகூர்கின்றது.

அரச அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் அகிம்சை வழிலான அணுகுமுறைகள் பயனற்றுப் போன சூழ்நிலையில் அரச அடக்குமுறையை எதிர்கொண்டாக வேண்டும் என்ற ஓர் நிர்ப்பந்தத்தில் மக்களின் மனநிலை நின்ற விடுதலைப்போராட்ட வீரனாகவே பொன். சிவகுமாரன் செயற்பட்டார்.

பொன் சிவகுமாரன் இனத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஓர் இளையவனாக மாணவர் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக கட்சி அரசியல் விடயங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசிய விடுதலையை இலக்காகக் கொண்டு போராட்ட அமைப்புக்கள் நிறுவனமயப்படுத்தப்படாத காலகட்டத்தில் தனது தியாகத்தினை நிலைநாட்டியுள்ளார். எதிரியிடம் விடுதலைப்போராளிகள் உயிருடன் அகப்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் தன் இன்னுயிரை சயனைட் அருந்தி மாய்த்துள்ளார்.

விடுதலைப்போராட்டம் ஒடுக்குமுறைகளுக்கு எதிரானது என்ற நியாயபூர்வமான யதார்த்தத்தினை பொன். சிவகுமாரன் அவர்களது தியாகம் என்றும் பறைசாற்றுகின்றது. தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட கல்வி ரீதியிலான தரப்படுத்தல்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் என நீண்டு செல்லும் இனத்திற்கு எதிரான அநீதிகளிற்கு எதிராக பொன். சிவகுமாரன் போராடியுள்ளார்.

எமது போராட்டங்களின் முன்னோடியாக தியாகி சிவகுமாரனை என்றும் நினைவில் கொள்கின்றோம். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# பொன் சிவகுமாரனின் 48 வது நினைவேந்தல் பிரதேச சபையினால் அனுஷ்டிப்பு



தியாகி பொன் சிவகுமாரனின் 48 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் உரும்பிராயில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமாக இன்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதேச சபையின் அவைத் தீர்மானத்தின் பிரகாரம், இன்று காலை உரும்பிராயில் உள்ள தியாகி பொன். சிவகுமாரன் உருவச்சிலை வளாகத்தில் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் பொது ஈகைச் சுடரினை தியாகி பொன் சிவகுமாரன் அவர்களது சகோதரி சிவகுமாரி ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தியாகி சிவகுமாரனின் சிலைக்கான மலர் மாலையினை பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்தன் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மலரஞ்சலியை அடுத்து தமிழ்த் தேசியத்தில் சிவகுமாரனின் பங்கு பற்றி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

வருடா வருடம் பொன். சிவகுமாரன் அவர்களது நினைவேந்தலை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் மேற்கொள்வது என பிரதேச சபையில் உறுப்பினர் இ.ஜங்கரனால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் அணிவகுக்கும் வெளிநாட்டு பறவைகள் கண்டம் விட்டு கண்டம் தாண்டி மன்னாருக்கு வருகை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலமை காரணமாக நாட்டுக்கு அண்ணிய செலாவனியை பெற்றுத்தரும் சுற்றுலாதுறையானது மிகவும் நலிவடைந்துள்ளது.

இந்த நிலையில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நூற்றுக்கணக்கான பிளமிங்கோ என சொல்லப்பட்டும் வெளிநாட்டுப்பறவைகள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளதுடன் சுற்றுலா பயணிகளுக்கும் சிறந்த அனுபவத்தை வழங்கி வருகின்றது.

தமிழில் இப்பறவை பெரும் பூநாரை என அழைக்கப்படுகின்றது.

இந்த பறவைகள் ஆழமற்ற ஏரிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மணல் தீவுகளில் வாழ்கின்றன. ஃபிளமிங்கோக்களில் 6 இனங்கள் உள்ளன அவைகள் இறால், ஆல்கா, ஓட்டுமீன்களை சாப்பிடுகின்றன.

இடம்பெயர்வின் போது, பிளமிங்கோக்கள் ஒரு மணி நேரத்திற்கு 37 மைல்கள் வரை பறக்கின்றன மற்றும் 300 மைல்களுக்கு மேல் பயணம் செய்து தங்கள் புதிய வாழ்விடத்திற்கு செல்லக்கூடியவை.

பிளமிங்கோக்கள் என்பது நாரைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவையாகும் இதன் அறிவியல் பெயர் பீனிகாப்டெரசு ரோசசு என்பதாகும்.

நம் வீடுகளில் வளரும் வாத்தின் பருமனுடைய இப்பறவைக்கு நீண்ட முடியற்ற சிவந்த கால்களும், நீண்டு வளைந்த கழுத்தும், குறுகிய வளைந்த அலகும் இருக்கும். கால் விரல்கள் வாத்துக்கு இருப்பது போலவே சவ்வினால் இணைந்திருக்கும். நிமிர்ந்து நின்றால் 1 1/2 மீட்டர் உயரம் இருக்கும்.

இப்பறவைகள் செந்நிறம் கலந்த வெள்ளையுடலும் கரு நிறமான இறக்கை ஓரமும் கொண்டவை. நிலத்திலும் அதிக உப்புத்தன்மை அதிகமுள்ள ஏரிகளில் கடும் வெப்பத்தையும் தாங்கி வாழும் பூநாரை, கூட்டம் கூட்டமாகப் பறந்து உயரச் செல்லும் காட்சி மனதைக் கவரும் தன்மை உடையது.

பூநாரைகள் எளிதாக நீந்தக் கூடியது இந்த பறவைகள் முக்குளித்தல் நிலையிலேயே புழுக்களை அரித்து உண்ணும். செங்கால் நாரைகள் வாத்து பறப்பது போன்ற அமைப்பிலோ அலையலையான நீண்ட சாய்வுக் கோடுகளாகவோ வேகமாகச் சிறகுகளை அடித்துப் பறந்து செல்லும்.

ஒடுங்கிய கழுத்தை நீட்டிப் பறக்கும்போது சிவந்த கால்களையும் சேர்த்துப் பின்னால் நீட்டிக் கொள்ளும்.

இவை சப்தமிடுவதில்லை. ஆனாலும் சில சமயங்களில் வாத்துகள் போன்று ஒலி எழுப்பக்கூடியவை. இரை மேயும்போது கூட்டத்தில் உள்ள அனைத்துப் பறவைகளும் தொடர்ச்சியாகப் பிதற்றிக் கொண்டிருப்பது போல் தோன்றும். பூநாரைகள் உண்ணும் கூனி போன்ற ஒரு வகை கிரத்தேசிய உயிரினம் தான் இவற்றின் இளஞ்சிவப்பு நிறத்துக்கு காரணமாகும்.

இவ் உயிரிணங்களின் அளவு குறைவதாலும் மாறிவரும் இயற்கை சமநிலை காரணமாகவும், கதிர்வீச்சுக்கள் காரணமாகவும் இப்பறவையினம் குறைந்து கொண்டே வருகிறது.

இருந்தாலும் இப்பறவைகள் ஒவ்வொரு ஆண்டும் நீண்ட தூரம் பயணித்து மன்னாருக்கு வருகின்றன இப்பறவைகளை பார்பதற்கு புகைப்படங்கள் எடுப்பதற்கும் என உள்ளூர் சுற்றுலா பயணிகள் மாத்திரம் இல்லாமல் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் தொடர்ச்சியாக வருகை தருகின்றனர்.

- மன்னார் நிருபர்

# "முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைகளுக்கு முன்னும் பின்னுமாக அந்த மண்ணை தரிசித்தவன் என்றவகையில் எனது பிறப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு பூரிப்படைகின்றேன்"

## தலைவர் பிரபாகரனால் நன்கு நேசிக்கப்பெற்ற தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் புகழேந்தியின் உணர்வுமிகு உரையில் அவர் தெரிவிப்பு



"ஈழப்பபோர் மிகவும் தீவிரமாக இடம்பெற்ற காலத்தில் நான் வன்னி மண்ணை நேரடியாக தரிசிக்கும் பாக்கியம் பெற்றவன். தலைவர் அவர்களை சந்தித்து அவரோடு பல நாட்களை பயனுள்ள வகையில் கழித்தவன் என்ற வகையில் அவருடைய தலைமைத்துவத்தில் நடந்தேறிக்கொண்டிருந்த ஈழப்போரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவன். அவரது போராளிகள் அணியிலிருந்த மண் மீதும் இனத்தின் மீதும் மொழியின் மீதும் கொண்டிருந்த ஆழமான பற்றைப் புரிந்து கொண்டவன் நான்.

இவ்வாறான 2006ம் ஆண்டிலும் பின்னர் 2018 இலும் இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பயணித்தும் தங்கியிருந்தும் அந்த மண்ணின் மைந்தர்களையும் அன்னையர்களையும் விடுதலைத் தாகம் கொண்ட மக்கைளயும் சந்தித்து உரையாடிய அனுபவத்தை எனது வாழ்வின் முக்கியமான அத்தியாயம ஒன்று என்று நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். இவ்வாறாக. முள்ளிவாய்க்கால் மனிதப் படுகொலைகளுக்கு முன்னும் பின்னுமாக அந்த மண்ணை தரிசித்தவன் என்றவகையில் எனது பிறப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு பூரிப்படைகின்றேன்".

இவ்வாறு தலைவர் பிரபாகரனால் நன்கு நேசிக்கப்பெற்ற தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் புகழேந்தி அவர்கள் சனிக்கிழமையன்று மாலை கனடா மார்க்கம் நகரில் நடைபெற்ற அவரது "நான் கண்ட தமழீழம்-முள்ளிவாய்க்காலுக்கு முன்பும் பின்பும்" என்னும் நூல் அறிமுகவிழாவில் இணைய வழி ஊடாக பதிலுரை வழங்கிய போது தெரிவித்தார்.




கனடாவில் கணக்காளராகப் பணியாற்றும் தமிழ் இன உணர்வாளரும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவருமான திரு. நிமால் விநாயகமூர்த்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி நூல் அறிமுகவிற்கு திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் அ. சந்திரகாந்தன், திரு எஸ். திருச்செல்வம் மற்றும் திரு வல்லிபுரம் சுகந்தன் ஆகியோர் மேற்படி நான் கண்ட தமழீழம்-முள்ளிவாய்க்காலுக்கு முன்பும் பின்பும்" என்னும் நூல் தொடர்பான கருத்துரைகளை வழங்கினார்கள்.

அங்கு இணைய வழி ஊடாக உரைகளின் பின்னர் உணர்வுமிகு பதிலுரையில் ஓவியர் புகழேந்தி அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில், "ஈழத்தமிழ் மண்ணில் நான் 2009க்குப் பின்னரும் முன்னரும் கண்ட காட்சிகள் சந்தித்த போராளிகள் இயக்கத்தின் தளபதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் நான் பெற்ற தகவல்கள் மற்றும் அபர்கள் பகிர்ந்து கொண்ட விடயங்கள் அணைத்து ஈழப்போர் தொடர்பான சாட்சிகளும் அடையாளங்களும் ஆகும். எனவே இவ்வாறன சாட்சியங்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு அடையாளங்களாகவும் சாட்சிகளாகவும் விளங்கக் கூடியன என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

விழாவை ஏற்பாடு செய்த நிமால் விநாயகமூர்த்தி நன்றியுரையாற்றினார்.







இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் யானையின் தாக்குதலில் உயிரிழந்த 6 மாத குழந்தை



யானை ஒன்றின் தாக்குதலில் 6 மாத குழந்தை ஒன்று புதன்கிழமை (08) மாலை உயிரிழந்துள்ளது. குறித்த சம்பவம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஒலுவில் பள்ளக்காடு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த 6 மாதக் குழந்தையே இவ்வாறு யானை தாக்குதலினால் உயிரிழந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பள்ளக்காடு பிரதேசத்தில் திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் மாட்டுப்பட்டி மாடுகளை பராமரிக்கும் வேலையை தங்கியிருந்து செய்து வருவது வழக்கம்.இந்நிலையில் சம்பவதினமான மாலை 5 மணியளவில் அந்த பகுதியிலுள்ள மரத்தின் கீழ் குழந்தையை படுக்க வைத்து விட்டு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர்.

இதன் போது அப்பகுதிக்கு திடீரென வந்த யானை மரத்தின் கீழ் படுத்திருந்த குழந்தையை தாக்கியதுடன் காயமடைந்த குழந்தை அங்கிருந்து மீட்கப்பட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குழந்தை யானை தாக்குதலினால் ஏற்கனவே இறந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுபவர்கள் சங்க பொதுக்கூட்டம்


மன்னார் மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர்கள் சங்க பொதுக்கூட்டம் வியாழக்கிழமை (9) காலை 9 மணியளவில் குறித்த சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

குறித்த கூட்டத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் புதிய நிர்வாகத்துக்கான தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் மற்றும் 2 நிர்வாக உறுப்பினர்கள் கொண்ட 7 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிகழ்வில் பிரதம கணக்காளர், சங்க உறுப்பினர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



- மன்னார் நிருபர்

# அம்பாறை மாவட்டம் மருதமுனையில் பழைய விலைக்கு அரிசி விற்பனை — நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிப்பு

பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரிசி தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு பழைய விலைக்கு பொதுமக்களுக்கு அரிசினை பெற்றுக்கொடுத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் அரிசி பதுக்கல் இடம்பெறுவதாக வியாழக்கிழமை (9) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய அவ்விடத்திற்கு சென்ற நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குழு அரிசி பதுக்கல் இடம்பெற்றதாக அடையாளம் காணப்பட்ட கடைக்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன் பழைய விலைக்கு அரிசிகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

மேலும் மருதமுனை பகுதியில் குறித்த கடையில் பொதுமக்களே உடனே விரையுங்கள். குறைந்த விலையில் அரிசினை பெறுங்கள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர் என அப்பகுதியில் உள்ள அந்நூர் பள்ளிவாசலின் ஒலிபெருக்கியிலும் அறிவிக்கப்பட்டது.



இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு அதிகளவான மக்கள் வருகை தந்து அரிசினை கொள்வனவு செய்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இவ்வாறு அரிசி பதுக்கல் செயற்பாட்டினை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் முறியடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியா செய்திகள்
India News

# சென்னையில் பற்றி எரிந்த கார், கருகி உயிரிழந்த தொழிலதிபர்



சென்னையில் கார் தீப்பற்றி எரிந்த விபத்தில் சிக்கி அதிகப்படியான தீக்காயங்களுடன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சென்னை மேற்கு அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்தவர் கணேசன் (42). இவர் கடந்த 5 ஆம் தேதி மேற்கு அண்ணா நகர் வடக்கு பிரதான சாலையில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு இனோவா காரில் சென்றுவிட்டு திரும்பி வந்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக இவரது கார் தீப்பற்றி எரிந்த நிலையில், இவ்விபத்தில் சிக்கி கணேசனுக்கு 80% தீக்காயம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து வானகரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கணேசன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கணேசனின் மனைவி பிரியா அளித்த புகாரின் அடிப்படையில் திருமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கணேசன் இன்று மதியம் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடல் உடற்கூறாய்வுக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ள நிலையில், போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இனோவா கார் தீப்பிடித்ததில் தானாக கார் கதவுகள் பூட்டப்பட்டதால் தொழிலதிபர் கணேசன் தீ விபத்தில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் இருந்து விமானத்தில் இந்தியா சென்ற இலங்கையர் அகதியாக பதிவு செய்ய படகில் வந்ததாக கூறி "நாடகம்"

ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி பகுதியில் உள்ள இரண்டாம் தீடை பகுதியில் இலங்கை திருகோணமலை பகுதியைச் சேர்ந்த தினேஷ்காந்த என்பவர் தஞ்சம் அடைந்துள்ளதாக மரைன் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன் போலீசார் அவரை மீட்டு விசாரணைக்காக மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

பின்னர் அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் முன்னுக்குப்பின் முரணான பதில் கூறி வந்ததோடு அவர் இலங்கையிலிருந்து தமிழகத்தில் அகதியாக தஞ்சமடைய வந்தாரா? அல்லது தமிழகத்தில் இருந்து இலங்கைக்குச் செல்ல தனு'கோடி தீடை பகுதிக்கு சென்றாரா அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக தீடை பகுதிக்கு சென்றாரா? என பல்வேறு கோணங்களில் மரைன் போலீசார், கியூ பிரான்ச் போலீசார் ஆகியோர் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் தனுஷ்கோடி அடுத்த தீடை பகுதியில் கடல் பகுதியில் கடல் நீரில் நனைந்த படியே தஞ்சம் அடைந்து இருந்தால் அகதியாக வந்து இருக்கிறார் என்று போலீசார் அழைத்து சென்று மண்டபம் அகதிகள் முகாமில் அடைத்து விடுவார்கள் என்ற நோக்கத்தோடு தீடை பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இதையடுத்து மரைன், கியூ பிரான்ச் போலீசாரின், மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணையில் அவர் விசா மூலம் இலங்கை கொழும்பில் இருந்து சென்னை வந்து பின்னர் அங்கிருந்து மதுரை வந்தடைந்து இன்று காலை ராமேஸ்வரம் வந்துள்ளார்.



தற்போது அவரை முழு விசாரணை நடத்தியதில் விசா மூலம் வந்தது உறுதியானதை அடுத்து அவருடைய விசாவின் கால அவகாசம் இன்னும் 90 நாட்கள் உள்ளது.

இந்த நிலையில் மத்திய புலனாய்வுத் துறையினர் இலங்கையில் இருந்து விசா மூலம் வந்தவரிடம் நடத்திய விசாரணையில் அவர் இலங்கை திருகோணம் பகுதியில் கடந்த 2012 ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை இலங்கை காவல் துறையில் பணியாற்றி வந்தது தெரியவந்தது.

இதையடுத்து கடந்த 2018 ஆம் ஆண்டு அவர் தனது பணியை விருப்ப ஓய்வு கேட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில் விசா மூலம் தமிழகம் வந்த இலங்கையை சேர்ந்த தினேஷ் காந்த் என்பவர் தமிழகப் பகுதிகளில் உளவு பார்க்க வந்தாரா என்ற கோணத்தில் மத்திய புலனாய்வு துறையினர் 5 மணி நேரம் தீவிரமாக விசாரணை நடத்தினர்.

பின்னர் அவர் முறையான ஆவணங்கள் வைத்துள்ளதை அடுத்து சந்தேகப்படும் படியாக வெளியிடங்களில் சுற்றக் கூடாது என்று அறிவுரை வழங்கி அனுப்பி வைத்துள்ளனர்.









# முடிசூடா மன்னர்களான ராஜபக்ஷக்கள் அரசியலில் இன்று 'கிங் மேக்கர்'கள்

**- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்**

**ரா**ஜபக்சக்கள் கோதாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி ஆக்குமாறு தென்னிலங்கையைக் கோரினர். 69 இலட்சம் வாக்குகளை அளித்து தென்னிலங்கை மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினர். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தாருங்கள் என்று ராஜபக்ஷக்கள் தென்னிலங்கையிடம் கோரினர். ஆந்தக் கோரிக்கையையும் தென்னிலங்கை மக்கள் நிறைவேற்றி வைத்தனர்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்துக்கான மக்கள் ஆணையை வைத்துக் கொண்டு 20வது திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மகுடம் சூட்டினர்..தென்னிலங்கை மக்கள் வெறும் பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ராஜபக்சக்கள் தமது குடும்பத்துக்கு ஏற்றாற் போல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தனர். அப்பொழுதும் தென்னிலங்கை பார்த்துக் கொண்டிருந்தது.

நாடு சூறையாடப்பட்டது. இலங்கையின் கஜானா காலியாகியது. எல்லாவற்றுக்கும் மக்கள் வரிசையில் நிற்க வேண்டியதாயிற்று. நாட்டை ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கமும் மீள முடியாத கடன் பொறியில் தள்ளினர். இறுதியாக முழு நாட்டையும் மக்களையும் “படடினிப் பொறிக்குள்” தள்ளினர்.

அப்பொழுதுதான் தென்னிலங்கை விழித்தது. விழித்து என்ன பயன் எல்லாமே கட்டு மீறிப் போய்விட்டது.

“கோதா கோ” என தென்னிலங்கை இளைஞர்களும் யுவதிகளும் களத்தில் இறங்கினர். காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக “கோதா கோ கம” என்ற கிராமத்தையே உருவாக்கினர். இந்த தென்னிலங்கை இளைஞர் யுவதிகளின் கருத்தியல் தென்னிலங்கை மக்களின் உணர்வுகளைக் கிளறியது. நாடு தழுவிய போராட்டம் மற்றும் தென்னிலங்கையில் பல இடங்களில் “கோதா கோ கம” கிராமங்கள் உருவாகின.

அலரி மாளிகைக்கு முன்பாக “மைனா கோ கம” உருவாகியது. இவைகளுடன் “கபுடா கா கா” வும் இணைந்து கொண்டது.

- பாசாங்கு அரசியல்

இதன் எதிரொலியாக பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ ராஜினாமா செய்தார். ராஜபக்ஷ குடும்பத்தினர் அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். 21 வது திருத்தம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் பற்றிப் பேசப்படும் நிலையில் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தனக்கு தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த நாடாளுடமன்றப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். இது 21வது திருத்தத்துடன் தொடர்புபட்ட வெளி நாட்டுப் பிரஜை குறித்த விடயத்தைப் போசாமல் இருப்பதற்கான காய் நகர்த்தலாகவே உள்ளது.

இவ்வாறு தோல்வியை ஒப்புக் கொள்வது போன்று ராஜபக்ஷக்கள் பாசாங்கு காட்டிய அதேவேளை மறு புறம்

- மக்கள் வழங்கிய ஆணையைக் கேடயமாக்கி அரசியலமைப்பு ரீதியில் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.
- தமக்கென ஒரு விசுவாசியை பிரதமராக்கி “மொட்டுக் கட்சியின்” அமைச்சரவையையும் அமைத்து “ஒரு சமாளிப்பு” ஆட்சியை நடத்தத் தொடங்கிவிட்டனர்.
- பதவி விலகப்போவதில்லையென ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். நாட்டையும் மக்களையும் படு குழிக்குள் வீழ்த்தியதை ஒப்புக் கொள்ளும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தான் தோல்வியுற்ற ஜனாதிபதியாக வெளியேறப் போவதில்லை. மக்கள் வழங்கிய ஆணைக்கேற்ப தொடர்ந்தும் பதவியில் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.
- பஷில் ராஜபக்ஷ நாடாளுமன்றப் பதவியைத் துறந்து சாதாரண பிரஜையாகியுள்ளதாக வியாழக்கிழமை (9 மே 2022) அறிவித்துள்ளார். அதேவேளையில் தான் தொடர்ந்தும் பொது ஜன பெரமுன கட்சியின் நலன்களுக்காக அரசியலில் இருக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

மொத்தத்தில் ராஜபக்‘க்கள் ஜனாதிபதி பதவி மற்றும் பொது ஜன பெரமுன கட்சியின் நடாளுமன்ற பலத்தைக் கைகளில் வைத்துள்ள பஷில் ராஜபக்ஷ மூலம் தொடர்ந்தும் இலங்கை அரசியலில் “கிங் மேக்கராக” கோலோச்ச காய்களை நகர்த்தியுள்ளனர்.

இலங்கை அரசியலில் இதுவரை முடிசூடா மன்னர்களாக இருந்த ராஜபக்ஷக்கள் இன்று “கிங் மேக்கர்” அரசியலை நடத்தத் தொடங்கிவிட்டனர்.

மக்களுக்கு ஆணை வழங்க அனுமதித்துள்ள அரசியலமைப்பு அந்த ஆணை மீறப்படும் போது: அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படும் போது அந்த ஆணையை மக்களால் மீளப் பெறுவதற்கான அனுமதியை அரசியலமைப்பு வழங்கவில்லை. மக்களின் ஆணை பெற்று ஆட்சியில் அமர்ந்துள்ள ஆளும் எதிர்க் கட்சிகளுக்கிடையிலான பலப் பரீட்சையிலேயே மக்கள் ஆணை தீர்மானிக்கப்படுகின்றது. அடுத்த தேர்தல் நடைபெறும்வரை “ஆணை வழங்கிய மக்கள்” வெறும் பார்வையாளர்களாக இருந்துவிட்டுப் போக வேண்டியதுதான் என்பதுதான் அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடாகவும் உள்ளது.

இலங்கை அரசியலில் இதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

“கோதா கோ கம” இளைஞர் யுவதிகளினதும் தென்னிலங்கை மக்களினதும் அரசியல் அபிலாஷைகளுக்கு தீனி போடுவதாக ஜதேக

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



# கோட்டா + ரணில் கூட்டு நாட்டை மீட்குமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ரனில் விக்ரமசிங்கவை இலங்கை கிறிக்கட் அணித்தலைவராக நியமித்தால்....
"அடுத்து வரும் போட்டிகளில் எமக்கு வீசுவதற்கு ஒரு பஞ்சு கட்டி கூட கிடைக்காது"
"இனி வரும் ஆட்டங்களில் இடை வேளையில் மூன்று மிடறு தண்ணீருக்கு பதிலா இரண்டு மிடறு தண்ணீரையே பருக வேண்டி வரும்"
"ஒக்டோபர் மாதம் வரும் போது கிறிக்கட் மட்டைக்கு பதிலாக நாங்கள் தென்னம் மட்டையே பயன் படுத்த வேண்டி வரும்"
"உக்ரேன் வீரர்களுடன் கிறிக்கட்டும் அதே விக்கட்டால் ரஷ்ய வீரர்களுடன் கிட்டிப்புள்ளும் விளையாடுங்கள்".......

இவ்வாறு முகநூலில் எழுதியிருப்பவர் ஒரு முஸ்லிம் நண்பர் ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி ஏற்றதிலிருந்து தொடங்கி நாட்டுமக்களுக்கு, நாட்டின் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக உண்மையான விவரங்களை தெரிவிக்கப்படுகின்றன என்ற ஒரு தோற்றத்தை படிப்படியாக கட்டி எழுப்பி வருகிறார். அவர் தெரிவிக்கும் தகவல்கள் உண்மையோ இல்லையோ அவர் மக்களுக்கு எதையும் மறைக்கவில்லை என்ற ஒரு தோற்றம் வெற்றிகரமாக கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. நாட்டில் எவ்வளவு டொலர் கையிருப்பில் உண்டு? எவ்வளவு எரிபொருள் எரிவாயு உண்டு? எரிபொருளும் எரிவாயுவும் எப்பொழுது வரும்? எவ்வளவு வரும்? எவ்வளவு அரிசி உண்டு? எவ்வளவு அரிசி தேவை? உரம் எப்பொழுது வரும்? பஞ்சம் எப்பொழுது வரும்? போன்ற எல்லாவற்றையும் அவர் வெளிப்படையாகப் பேசுகிறார்.

அவர் இவ்வாறு வெளிப்படையாக தகவல்களை தெரிவிப்பதன்மூலம் வியாபாரிகள் பொருட்களை பதறுகிறார்கள் என்று ஒரு விமர்சனம் எழுந்திருக்கிறது. நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக ரணில் தெரிவிக்கும் தகவல்கள் அதிகம் பீதியூட்டக் கூடியவை. அதனால் வியாபாரிகள் பொருட்களைப் பதுக்குகிறார்கள் என்று விமர்சிக்கப்படுகிறது. ஆனால் இது விடயத்தில் ரனில் தன்னை வெளிப்படையான ஒரு தலைவராக காட்டிக் கொள்ளப்பார்க்கிறார். நடப்பு நிலைமைகளுக்கு தான் பொறுப்பில்லை என்று காட்டிக்கொள்ள பார்க்கிறார். இந்த நிலைமை வரக்காரணம் ராஜபக்சக்கள் தான் என்பதனை மறைமுகமாக உணர்த்துகிறார். இந்த வெளிப்படைத் தன்மை உடனடிக்கு பதுக்கலை ஊக்குவித்தலும், காலப்போக்கில் அவர் கூறியதுபோல நிலைமைகள் நடக்கும் பொழுது மக்கள் அவர் மீது நம்பிக்கை வைக்க தொடங்குவார்கள். ராஜபக்சக்களைவிட ரணில் பரவாயில்லை என்பது ஒரு பொதுவான அபிப்பிராயம். மேற்கு நாடுகளையும் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களையும் கவர்வதற்கு அது உதவக்கூடும் என்று சிங்கள நடுத்தர வர்க்கம் கருதுகின்றது.

பிரதமராக பதவியேற்றதிலிருந்து தொடங்கி இன்றுவரையிலும் ரணில், மேற்கு நாடுகள், சர்வதேச நாணய நிதியம் போன்ற தரப்புகளை எப்படி திருப்திப்படுத்தலாம் என்று சிந்தித்து வருகிறார். அந்த அடிப்படையில் அவர் முன்னெடுத்த மாற்றங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்...

முதலாவதாக 21ஆவது திருத்தச்சட்டம். அது ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து அவரை நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வைப்பது. இதன்மூலம் ஜனாதிபதி கோட்டாபய பலவீனமாக்கப்பட்டுவிட்டார் என்று ஒரு தோற்றத்தை வெளியுலகத்திற்கு காட்டலாம். அதைத்தான் சர்வதேச நாணய நிதியமும் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. எனவே 21ஆவது திருத்தத்தின்மூலம் அப்படி ஒரு தோற்றத்தை கட்டியெழுப்ப கோட்டா ரணில் கூட்டு முயற்சிக்கின்றது.

இரண்டாவது, மேலோட்டமான ஒரு ராணுவ மயநீக்கம் நிகழ்ந்துவருகிறது. அதன்படி அமைச்சுக்களின் செயலர்களாக இருந்த சில ராணுவ பிரதானிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக வெளியுறவுச் செயலராக இருந்த முன்னாள் கடற்படை பிரதானி மாற்றப்பட்டு ஒரு பெண் ராஜதந்திரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறான நியமனங்களின்மூலம் நாடு ராணுவ மய நீக்கம் செய்யப்படுகிறது என்ற ஒரு தோற்றம் உருவாக்கப்படும்.

மூன்றாவது சவேந்திர சில்வாவின் பொறுப்புக்கள் மாற்றப்பட்டிருப்பது. அமெரிக்காவினால் பயணத் தடை விதிக்கப்பட்ட ஒரு தளபதி அவர். எனவே அவரை முன்னைய பொறுப்பிலிருந்து மாற்றியதன்மூலம் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியிருக்கும் நபர்களை பொறுப்புகளிலிருந்து நீக்கிவருவதாக ஒரு தோற்றத்தை காட்டலாம்.

நாலாவது பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலைக் குற்றவாளியான துமிந்தசில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 13வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஐந்தாவது கோட்டா கோகம, மைனா கோகம ஆகிய போராட்ட கிராமங்களின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆறாவது குறிப்பிட்ட ஒரு தொகுதி பொருட்களின் மீதான வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட மாற்றங்களின்மூலம் நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகிறது என்ற ஒரு தோற்றத்தையும், நாட்டில் ராணுவமய நீக்கம் நிகழ்கிறது என்ற ஒரு தோற்றத்தையும், ராஜபக்சவின் அதிகாரம் குறைக்கப்படுகிறது என்று ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்புவதே ரணில் கோத்தா கூட்டின் நோக்கமாகும்.

அப்படி ஒரு தோற்றம் கட்டி எழுப்பப்பட்டால் மேற்கு நாடுகளையும் ஐஎம்எப் போன்ற பன்னாட்டு நிறுவனங்களையும் கவரலாம் என்று ரணில் அரசாங்கம் சிந்திக்கிறது.

ஒருபுறம் இந்தியா நாட்டுக்கு சேலைன் ஏற்றிக்கொண்டிருக்கிறது. இந்தியா வேண்டுமென்றே திட்டமிட்டு சிறுகச்சிறுக உதவிகளைச் செய்துவருகிறது. உடனடியாக பெருமெடுப்பில் உதவிகளைச் செய்யாமல், சேலைன் ஏற்றுவது போல சிறு சிறுத்துளியாக இந்திய உதவிகள் கிடைக்கின்றன. இதன்மூலம் இந்தியா தனது அருமையை உணர்த்த முற்படுகிறது.

பெருமெடுப்பிலான உதவிகள் அடுத்தடுத்த மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கலாம் என்று ரணில் விக்ரமசிங்க எதிர்பார்க்கிறார். ஆனால் அதற்கிடையே அரிசிக்கு தட்டுப்பாடு வரலாம் என்றும் எச்சரிக்கிறார்.

மின்வெட்டு ஒப்பீட்டளவில் நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எரிபொருளுக்காக கிலோமீட்டர் கணக்கில் வாகனங்கள் வரிசையாக நிற்கின்றன. சிலவிடங்களில் 2எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கும் வரிசைகள் ஒன்று மற்றதை சந்திக்கும் நிலைமையும் ஏற்படுகிறது?

எரிவாயுவும் அனேகமாக இல்லை. பால் மாவையும் காணமுடியவில்லை. கோழி முட்டையின் விலை நாற்பத்து இரண்டு ரூபாயை தாண்டுகிறது. மரக்கறி, மீன், மாமிசம் போன்றவற்றின் விலைகளும் அதிகரித்துச் செல்கின்றன. ஏறிய விதைகள் எவையும் இறங்கவேயில்லை. ரணில் விக்ரமசிங்க எதிர்வு கூறும் ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னரான உணவுத் தட்டுப்பாட்டின்போது அரிசியின் விலை 500 ரூபாயை தாண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு உண்டு. இப்பொழுது ஒரு கிலோ அரிசி 2560 ரூபாய்க்கு மேல் போகிறது.

மிருகக்காட்சி சாலைகளில் பாதுகாக்கப்படும் மிருகங்களுக்கு சாப்பாடு கொடுக்க முடியாத ஒரு நிலை. அதனால் ஒரு தொகுதி மிருகங்களை காட்டுக்கு மாற்றுவது குறித்து அரசாங்கம் சிந்திப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மனிதர்களுக்கு மூன்று வேளை சாப்பாட்டை உறுதிப்படுத்த முடியாத ஒரு அரசாங்கம் எப்படி மிருகங்களுக்கு சாப்பாடு கொடுக்கும்?

பெண்கள் மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தும் சனிற்றரி நப்கின்களுக்கும் தட்டுப்பாடு வந்துள்ளதாக ஒரு கட்டுரை அண்மையில் "சவுத் சைனா மோர்னிங் போஸ்ற்" என்ற ஒரு இணைய சஞ்சிகையில் வெளிவந்திருந்தது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சனிற்றரி நப்கின்களுக்கு அரசாங்கம் அதிக வரிவிதிக்கின்றது. அதனால் அவற்றை கொள்வனவு செய்யும் வலிமை ஏழைகளுக்கு இல்லை. அதேசமயம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சனிற்றரி நப்கின்களுடைய விலைகளும் அதிகரித்துவிட்டன. இதனால் பாடசாலைக்குச் செல்லும் பெண்களும் வேலை பார்க்கும் பெண்களும் சனிற்றரி நப்கினா? சாப்பாடா? என்று சிந்திக்கும் ஒரு நிலைமை வந்திருப்பதாக அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சனிற்றரி நப்கின்களை வாங்கமுடியாத மாணவிகள் பாடசாலைகளுக்கு வருவதை தவிர்ப்பதாகக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.


இதுபோன்று கடந்த மாதம் 28ஆம் திகதி "தெ டெலிகிராப்" இணையத்தளத்தில் வெளிவந்த மற்றொரு கட்டுரையில், ஆடைத் தொழிற்துறையைச் சேர்ந்த ஒரு தொகுதி பெண்கள் வேலையின்மை, வறுமை காரணமாக பாலியல் தொழிலை நோக்கிச் செல்வதாக கூறப்பட்டுள்ளது.

இதுதான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரான நாட்டின் நிலை. எனினும், ஆர்ப்பாட்டங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன. மக்கள் அதிகரித்த அளவில், அதிகரித்த நேரம் எரிபொருள், எரிவாயு வரிசைகளில் நிற்பதனால், அவர்களுக்கு போராட நேரம் இல்லை என்று ஒரு ஊடகவியலாளர் நகைச்சுவையாக சொன்னார்.

கோட்டா கோ கம கிராமம் சோர்ந்து போய்விட்டது என்று ஒரு கருத்து உண்டு. அது உண்மையல்ல என்று அங்கிருப்பவர்கள் கூறுகிறார்கள். தொடக்கத்தில் அந்த ஆர்ப்பாட்ட கிராமத்தை நோக்கி ஆயிரக்கணக்கில் மக்கள் தினந்தோறும் வருகை தந்தார்கள். ஆனால் இப்போது அவ்வாறு வருபவர்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைந்துவிட்டதாக அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த வாரம் கோட்டாகோ கமவில் ஒரு வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அக்கிராமத்தைப் பற்றிய செய்திகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அந்த ஏற்பாடு என்று கூறப்படுகிறது. அதாவது காலிமுகத்திடலில் போராடும் தரப்புக்கள் தமது போராட்டத்தை இப்போதைக்குக் கைவிடப்போவதில்லை என்பதனை அது உணர்த்துகிறது.

ஆனால் கோத்தா+ரணில் அரசாங்கமானது அந்த ஆர்ப்பாட்டங்களை குறித்து அதிகம் அலட்டிக் கொள்வதாக தெரியவில்லை. அந்த ஆர்ப்பாட்டங்களின் மீது கை வைக்காமல் விட்டால் அவை தாமாக சோர்ந்து போய்விடும் என்று அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். அமெரிக்காவின் வோல்ற் ஸ்ட்ரீட் முற்றுகைப் போராட்டம் அப்படித்தான் தானாகச் சோர்ந்து போனது என்ற அடிப்படையில் அவர்கள் கோட்ட கோ கம கிராமமும் ஒருநாள் சோர்ந்து போய்விடும் என்று எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக வெளி உதவிகளின் மூலம் பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் பரவாயில்லை ஒரு நிலைக்கு நிமிர்த்த முடிந்தால் அதன் பின் கோட்டா கோ கமவில் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு மக்கள் ஆதரவு மேலும் குறைந்துவிடும் என்ற எதிர்பார்ப்பே அணில் போட்டா கூட்டிடம் காணப்படுகிறது.

எனவே போராட்டத்தை கொடுக்க முற்படாமல், அதை அதன் போக்கில் விட்டால் அது ஒரு கட்டத்தில் தானாகச் சோர்ந்து போய்விடும் என்று அவர்கள் எதிர்பார்ப்பது தெரிகிறது. நாட்டின் நிலைமையை மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிப்பதன்மூலம் ரணில் தான் ஒரு மந்திரவாதி இல்லை என்பதைக் காட்ட முற்படுகிறார். உண்மைதான் அவர் ஒரு மந்திரவாதி இல்லை. ஆனால் தந்திரசாலி.



# மன்னார் வங்காலை தோமஸ்புரி படுகொலை இன் 16 ஆம் ஆண்டு நினைவு இன்று!

## கொன்றொழிக்கப்பட்ட பாலகர்களும் குடும்பமும்

இலங்கை செய்திகள் Sri Lanka News



மன்னார் வங்காலையில் இரு குழந்தைகள் உற்பட கணவன், மனைவி ஆகிய நான்கு பேரும் படுகொலை செய்யப்பட்டு வியாழக்கிழமை (09) அன்று 16 வருடங்களைக் கடக்கின்றது.

மன்னார் வங்காலை தோமஸ்புரி கிராமத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை, இரு சிறுவர் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மிகக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலை பத்தாம் வட்டாரத்திலுள்ள தோமஸ்புரி கிராமத்திலேயே ஒரு வீட்டில் இந்தக் கோரக் கொலைகள் இடம் பெற்றுள்ளன.

படையினரே இந்த வீட்டினுள் நுழைந்து, வீட்டுக்காரரின் மனைவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி மிகக் கொடுமையாகச் சித்திரவதை செய்த பின்னர் அனைவரையும் மிகக் கொடூரமாக கொலை செய்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கொடூரச் சம்பவத்தால் வங்காலை மக்கள் மிகவும் விசனமடைந்திருப்பதுடன், குற்றவாளிகளைத் தங்களுக்குத் தெரியும் எனவும் அவர்களை உடனடியாக கைது செய்யுமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தச்சுத் தொழிலாளியான மூர்த்தி மார்டின் (வயது-35) என்பவரது வீட்டினுள் நுழைந்தவர்கலே இந்தக் கொடூரப் படுகொலைகளையும் சித்திரவதைகளையும் புரிந்து விட்டுச் சென்றுள்ளனர். இதன் போது தச்சுத் தொழிலாளியான மூர்த்தி மார்டின் (வயது-35), அவரது மனைவி மேரிமெட்டலின் (சித்திரா) (வயது 27) மற்றும் பிள்ளைகளான ஆன் லக்ஸிகா (வயது-9), ஆன் டிலக்ஸன் (வயது-7) ஆகிய நான்கு பேரும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் நடைபெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, இப்பகுதியில் கடந்த சில மாதங்களாக இடம் பெற்று வரும் அச்சமூட்டும் சம்பவங்களால், தோமஸ்புரி கிராம மக்களில் மிக பெரும்பாலானோர் இரவு நேரங்களில் வங்காலை புனித ஆனாள், தேவாலயத்திற்குச் சென்று தங்கி விட்டு அதிகாலையில் வீடு திரும்புவது வழமை.

எனினும், படுகொலை நடந்த வீட்டைச் சேர்ந்தவர்களும் இவர்களது உறவினர்களான நான்கு குடும்பங்களும் வேறு ஒரு சில குடும்பங்களும் இரவு நேரத்தில் இடம் பெயராது தங்கள் தங்கள் வீடுகளிலேயே தங்குவார்கள்.

இந்த நிலையில், 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நான்கு இராணுவத்தினர், கொலை நடைபெற்ற வீட்டை மையமாக வைத்து வந்து அங்கும் அருகிலிருந்த ஒரு சில வீடுகளுக்கும் மட்டும் சென்று அங்கு இருப்போர் பற்றி அறிந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்தே வியாழக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர், தச்சுத் தொழிலாளியான மூர்த்தி மார்டின் என்பவரது வீட்டினுள் நுழைந்தவர்கள் இந்தக் கொடூரப் படுகொலைகளையும் சித்திரவதைகளையும் புரிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை (09-06-2006) காலை ஏழு மணியாகியும் வீட்டில் இருந்து எவரும் வெளியே வராததால் பக்கத்து வீட்டிலிருந்த சகோதரி இவர்களது வீட்டுக்குச் சென்று முன் கதவைத் திறந்து பார்த்து அலறி உள்ளார். இவரது சகோதரி, வீட்டின் வரவேற்பறையில் ஆடைகள் அலங்கோலமான நிலையில் மேரிமெட்டலின் (வயது-27) இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

அப்பகுதி எங்கும் இரத்தம் உறைந்து போய்க் கிடந்தது. அவரது அலறல் சத்தத்தை ஏனையோர் அங்கு திரண்டு வந்து பார்த்தபோது, இறந்து கிடந்த பெண்ணின் உடலின் பல பகுதிகளிலும் பலத்த காயங்கள் காணப்பட்டதுடன் கூரான உளிகளால் குத்தி அவர் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

அத்துடன், இவர் கொலை செய்யப்பட முன்னர் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் இருந்தன.அதே நேரம், இவரது கணவரையும் இரு பிள்ளைகளையும் அங்கு தேடியபோது, அருகிலுள்ள அறையொன்றினுள் மூவரதும் சடலங்கள் சுருக்குக் கயிறு களில் தொங்கிக் கொண்டிருந்தன.

அறையின் தரையில் பெருமளவு இரத்தம் உறைந்து போயிருந்தது. மாட்டின் அவரது பிள்ளைகளான ஆன் லக்ஸிகா (வயது9), ஆன் டிலக்ஸன் (வயது-7) ஆகியோரின் சடலங்களே, கயிற்றில் சுருக்கிடப்பட்டு வீட்டுக் கூரையில் தொங்கவிடப்பட்டிருந்தன. இவர்களது உடல்களிலும் பல இடங்களிலும் உளிகளால் மிக ஆழமாக குத்தப்பட்ட பல காயங்கள் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் அப்பகுதி எங்கும் காட்டுத்தீ போல பரவவே அங்கு வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடியதுடன் அவர்கள் உணர்ச்சி வசப்பட்டும், கொந்தளித்தும் போயிருந்தனர்.

இது பற்றி அறிந்து அப்போதைய மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ரி.ஜே. பிரபாகரன், மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை, மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி. மேல், நானாட்டான் பிரதேச செயலர் என்.திருஞானசம்பந்தர், இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளென பெருமளவானோர் அங்கு திரண்டனர்.

இதன்போது அங்கு கூடியிருந்த அணைத்து மக்களும், இராணுவத்தினரே இந்தக் கொடூரங்களைச் செய்ததாகவும் அவர்களைத் தங்களுக்குத் தெரியுமென கோஸமிட்டதுடன் வீட்டிற்கு வெளியே பல இடங்களிலும் காணப்பட்ட இராணுவச் சப்பாத்து அடையாளங்களையும் அங்கு கிடந்த இராணுவப் பொருட்கள் சிலவற்றையும் அனைவருக்கும் காண்பித்தனர்.

இதையடுத்து அனைத்து தடயப் பொருட்களையும் சேகரிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்ட பின், சடலங்களை பிரேத பரிசோதனைக் குட்படுத்துமாறும் பணித்தார். அதே நேரம், இந்தக் கொடூரச் செயலால் ஆத்திரமுற்ற ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்ததால் அப்பகுதிக்கு பெருமளவு கலகத் தடுப்பு பொலிஸாரும் இராணுவத்தினரும் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டனர்.

எங்கும் பெரும் பதற்றம் நிலவிய அதேநேரம், தோமஸ்புரி மக்கள் கிராமத்திலிருந்து வெளியேறி வேறிடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். தொடர்ச்சியாக பல்வேறு கோணங்களில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. வங்காலை மக்களுக்கு குறித்த படுகொலையானது நினைவில் நீங்காத ஓர் அதிர்வலையாக காணப்பட்டது.

படுகொலை இடம் பெற்று இன்றுடன் 16 ஆவது வருடங்களாகின்ற போதும் குறித்த படுகொலைக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகள் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

**- மன்னார் நிருபர்**

# முடிசூடா மன்னர்களான ராஜபக்ஷக்கள் அரசியலில் இன்று 'கிங் மேக்கர்'கள்

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

*தலைவர் ரணில்விக்ரமசிங்கவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள "அரசியல் நாடகம்" மற்றும் "கிங் மேக்கர்" அரசியல் அமையப்போவதில்லை என தென்னிலங்கை உரத்துக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளது. கடந்த நல்லாட்சி காலத்தில் அன்றைய பிரதமரும் இன்றைய பிரதமருமான ரணில்விக்ரம சிங்க மற்றும் அவருடன் அமைச்சரவையில் அமர்ந்துள்ள அமைச்சர்களும் ராஜபக்ஷக்களை காப்பாற்றிய நகர்வுகளை நாடே அறியும்.*

*பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அரசியலில் "ஒட்சிசன்" தேவைப்படுகின்றது. ராஜபக்ஷ குடும்பங்கள் போட்ட "பிரதமர் பதவி பிச்சை" மாத்திரம் இலங்கை அரசியலில் தனக்கும் தான் தலைமையேற்றிருக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமான அரசியல் பாதையை அமைத்துக் கொள்ள போதுமானதல்ல என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே அவசரப்பட்டு விரைவில் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்க அவர் முன்வரமாட்டார்.*

*ராஜபக்ஷக்களுக்கும் நாட்டில் ஒரு தேர்தல் வருவதை விரும்பும் நிலையில் இல்லை. ராஜபக்'க்களைப் போன்றே அவர்கள் சார்ந்த பொது ஜன பெரமுன கட்சியும் ஆளும் வர்க்கமும் தேர்தலை எதிர் கொள்ளும் மன நிலையில் இல்லை.*

*மொத்தத்தில் ரணில் இலங்கை அரசியலில் மீண்டெழ துடிக்கின்றார். ராஜபகஷக்கள் தமக்கெதிராக தென்னிலங்கையில் திரண்டெழுந்து வருகின்ற எதிர்ப்பலைகளைக் கடந்து போய்விடத் துடிக்கின்றனர்.*

*அந்த வகையில் தென்னிலங்கை கோருவது போன்று ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறும் நிலையில் இல்லை. அவரை வெளியேற்றும் வல்லமை கொண்டதாக எதிர்க் கட்சிகள் இல்லை. அரசியலமைப்பு ரீதியிலும் ஜனாதிபதியை அகற்றுவதற்கான எந்த மார்க்கமும் இல்லை. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரான எந்த நகர்வுகளையும் தகர்த்தெறியும் சக்தி படைத்தவர்களாக ராஜபக்ஷக்கள் உள்ளனர்.*

*மொத்தத்தில் ராஜபக்ஷக்கள் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையை பொறியாக்கி அந்த பொறிக்குள் மக்களையே சிக்க வைத்துள்ளனர்.*

*இன்றைய நிலையில் நாடு பாராளுமன்றத் தேர்தலுக்குப் போவதே ஒரே வழி.பொதுத் தேர்தலுடன் ஜனாதிபதி முறை குறித்து தீர்மானம் எடுக்கும் வழிவகைகள் குறித்து சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*ஆனால் இப்போதைக்கு இது சாத்தியமாவதாகத் தெரியவில்லை. இந்த நிலைமை தொடர்வதும் மாற்றமடைவதும் தென்னிலங்கை இளைஞர் யுவதிகளினதும் மக்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.*

Email : vathevaraj@gmail.com
Mobil : 0094 777304145

**MOBILE CONSULAR SERVICES - 2022**
**SRI LANKA CONSULATE GENERAL, TORONTO**

25TH JUNE (SATURDAY)
FROM - 09.30 A.M.
TO - 04.30 P.M.

VENUE: INTER-CITI LOGISTIC
10 THORNMOUNT DRIVE
TORONTO ON M1B 3J4

YOU CAN OBTAIN THE FOLLOWING CONSULAR SERVICES

1. Apply for New Passport
2. Translation of Driving License
3. Attestation of Documents to Obtain Dual Citizenship
4. Handing over Dual Citizenship Applications
5. Attestation of Power-of-Attorney
6. Attestation of Affidavit/Notice of Marriage/Parental Consent/Docs. for Opening Second Bank Account
7. Apply for Registration of Births & Deaths
8. Any Other Consular Assistance

For Instructions And Documents Needed For The Service You Require Please Visit The Consulate Website - www.torontoslcg.org

Kindly Bring Originals and a Set of Photo Copies

Payments for Services to be Paid in Cash Only.

Inquiries : Phone - 416 323 9133 or E-Mail : srilanka@bellnet.ca

Thushara Rodrigo
Consul General
Sri Lanka Consulate General

# Discover the flavour of a legendary Sinha Stout from the exotic island of Sri Lanka




Lions have fascinated mankind since time immemorial. They form an integral symbol of strength and clan identities for tens of thousands of years. The mystery and allure of the king of the jungle pervaded civilizations for centuries and in the late 19th century, deep within central Sri Lanka, British explorer, Sir Samuel Baker, discovered a lion that would one day enliven palates around the world – but, it remained a secret.

Whilst on a hunting trip in the cool climes of Sri Lanka's (then Ceylon) salubrious central hills of Nuwara Eliya, situated 6000 feet above sea level, legend says Baker took aim at a magnificent stag in the distance. Baker hit his target, and as he strode to retrieve his price, he was struck with awe at the beauty and abundance that surrounded him including a sparkling spring flowing down to the lake below. There, Sir Samuel Baker set up what would become the Ceylon Brewery in 1881.

Since then, the Ceylon Brewery – now Lion Brewery (Ceylon) PLC,– produced golden brews that for long remained some of the best kept secrets from the rest of the world. Visitors to the golden isle and its dwellers savoured the exclusive flavours for decades, before Lion ventured out to the world in 1981 – more than a century after its inception.




Upon its discovery by global beer connoisseurs, its flagship product, Lion Lager, is now exciting drinkers around the world. With a unique flavour stemming from its century-old recipe, Lion Lager is now available at selected Beer Stores under the brand name Sinha Lager in Canada. The beer is available in 6 packs and retails for $17.45 for a 6 pack.

But the jewel in the crown of this King is its famous Stout – the indisputable king of dark beers. Lion Stout, known as Sinha Stout in Canada, is for long considered the best kept secret in beer. The traditional dark stout comes with sweet notes of chocolate, toffee, mocha, caramel and roasted barley, and trapped by its dense creamy head offers drinkers a burst of flavour that keeps them coming back for more.

The late Beer Hunter, Michael Jackson, officially endorsed this Stout as 'the best in the world'. During a visit to Sri Lanka, in 1986 to track down this cask-conditioned stout, Jackson savoured this legendary beer and fell in love with it immediately. This was definitely 'love at first sip'. What adds a real tang to this tale is that Jackson did not seek any form of compensation for his endorsement or review – he loved it so much.

It's difficult to detail the richness of a Sinha Stout. It is a flavour that must be indulged for a palatal experience that is unparalleled. Over the years Sinha Stout has earned the privilege of converting countless lager faithful towards dark beer, and it is all down to the most unique and rich flavour of this beer – what was once the best kept secret in beer. Now that the secret is out, it is waiting to be discovered by Canadian beer enthusiasts. Sinha Stout is available at selected LCBO outlets around Ontario.

Tipplers love this Stout. So-much-so, it enjoys a 97-99 rating on ratebeer.com and has acquired a loyal consumer base in many European markets for its distinct taste profile. It's not just the consumers, even quality agencies love Lion/Sinha Stout, winning multiple Gold Awards continuously from the prestigious Monde Selection over several years. The Lion Brewery works in partnership with Carlsberg AG, and is compliant with the latter's Global Quality Management System.

It happens it was a cocktail competition that drew the late Beer Hunter Michael Jackson to Sri Lanka back in the day. Sinha Stout was used in the competition, and mixing was evidently popular from the olden days. Jackson recounts his experience as below.

"The (Lion) brewery's principal product is lager, but it made a pale ale until the 1960s, and it still produces a stout. This pattern is typical in former British colonies. As golden lagers became more popular, the bronze or copper "middle" color vanished, but a black porter or stout survived for those who wanted something truly dark. All beers were stronger in colonial times, and these old black brews typically had between 6.0 and 9.0 per cent alcohol by volume.

Sinha Stout, a wonderfully sweet but assertive tropical gem, is bringing the rich heritage of Sri Lankan flavour to Canada's discerning drinkers. This legendary dark beer is presently served in 26 countries, brewed untouched by hand using nothing but the finest ingredients from around the world said Stefan Atton, Vice President International Business for Lion Brewery (Ceylon) PLC. True to the nation's historic penchant for quality and flavour, the Lion Brewery is reputed as one of the most advanced breweries in South Asia, adorned by global stamps for quality and process excellence. In Sri Lanka, the company represents brands from Carlsberg, Diageo, Brown-Forman, AB InBev and Warburn demonstrating its commitment to working with world-leading brands and serving nothing but the best.

Sinha Stout is a favourite on Sri Lanka's golden sun-bathed beaches, and even in the cool climes of the hills within which it was discovered. It is a beer that keeps connoisseurs coming back for more, with its soft, fresh and extraordinary chocolatey mocha character. Reach out for a Sinha Stout, a beer that is exotic as the island within which it was born.

Enjoy the best kept secret.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
Contains: Barley, Sulphites
Contient : Orge, Sulfites
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
SINHA
– 1881 –
SINHA
LAGER
IMPORTED
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020

# 1 PINE RIDGE ROAD

## NORLAND, KAWARTHA LAKES, ON


2 + 1 2

Beautiful all-season waterfront home/cottage situated on approx. 0.75 acres of land just 1.5 hours from Toronto!


CENTURY 21
PEOPLE'S CHOICE REALTY INC.
BROKERAGE


WATERFRONT COTTAGE!











## Uthayan Markandu

Real Estate Broker

(416) 818-5493

uthayan4realestate.com

CENTURY 21 People's Choice Realty Inc.



# ர.ஃபேல் நடால்: எனென்றும் ராஜா

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

**சி**வாஜி படத்தில் ரஜினி பேசும் ஒரு பஞ்ச் டயலாக்: "சும்மா பேரைக் கேட்டாலே அதிருதில்ல". இது இன்று சாதித்தவர்கள் அல்லது சாதிக்கத் துடிப்பவர்கள், தன்னைக் கண்டு அடுத்தவர்களை மிரளவைக்க ஒரு செலவடையாக மாறியுள்ளது. அந்த படத்தில் தனக்கு எதிராகவும் சமூகத்தில் தவறுகளைச் செய்யும் நபர்களை ஒடுக்கத் தனது பராக்கிரமத்தை நிரூபிக்கும் வகையில் அந்த வசனம் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த செலவடை இன்று அரசியல், விளையாட்டு, அடாவடித்தனம் போன்ற பல வி'யங்களில் பலரால் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாக உருவெடுத்துள்ளது. அதாவது ஒரு தனிநபரைக் கண்டாலோ அல்லது அவரது ஆளுமையைக் கண்டாலோ அடுத்தவர்கள் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்வதற்கான அறிகுறியாக அதுவுள்ளது. தேர்தல் ஒன்றில் மிகவும் பிரபலமாக வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகிறார் என்றால், அவரை எதிர்த்துப் போட்டியிட பலர் அச்சப்படுவது இயற்கையானது. ஆனால் விளையாட்டுக் களம் என்பது வேறு. அங்கு பாலோடு பால் மோதி, தோளோடு தோள் மோதி, பலம் வாய்ந்த காலோடு கால் மோதி, அரங்கில் குழுமியுள்ள ரசிகர்களின் ஆரவாரங்களோடு மோதி, ஆளுகளத்திலிருந்து எழும்பும் புழுதியோடு மோதி இறுதியாக அந்த வெற்றிக் கோப்பையை முத்தமிடும் தருணத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது. நேரில் கண்டால் மட்டுமே அதை அனுபவிக்க முடியும். அப்படியான அரிய வாய்ப்பு இந்த எழுத்தாளருக்குப் பலமுறை கிட்டியுள்ளது. அது உலகக் கோப்பை போட்டியானாலும்ம் சரி அல்லது உள்ளூர் போட்டியானாலும் சரி!

கடந்த ஞாயிறு (ஜூன் 5) மாலை தொடங்கி குறைந்தது 48 மணி நேரங்களுக்கு சமூக ஊடகங்களை ஆக்கிரமித்த ஒரு பெயர் ர.ஃபேல் நடால். அன்று உலகெங்கும் கோடிக்கணக்கான ரசிகர்களால் காணப்பட்ட பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு மிகவும் பரபரப்பு மற்றும் எதிர்பார்ப்பு மிகுந்ததாக இருந்தது. அவர் கால் இருந்த நிலையில் அவரால் முடியுமா முடியாதா என்கிற கேள்வி அனைத்திலும் பார்க்க மேலோங்கி இருந்தது. அவரால் 14 ஆவது முறையாக அந்த ரோலன் காரோ மைதானத்தில் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை வென்று கோப்பையை சர்வதேச பார்வைக்காக உயர்த்திப்பிடித்து சாதனைப்படைப்பாரா என்ற ஏக்கம் மேலோங்கியிருந்தது. அரையிறுதிப் போட்டியில் ஜெர்மனியின் "சாஷா" ஷெவரேவிற்கு எதிரான போட்டியில், திடீரென காலில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக ஷெவரேவ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்ததை அடுத்து நடால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். அந்த போட்டியில் ஷெவரேவிற்கு காலில் தசைநார்கள் கிழியாமல் இருந்திருந்தால் நடால் இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருப்பாரா என்ற கேள்விக்கு பதிலளிப்பது கடினமான விஷயம். ஆனால் இறுதிப் போட்டியில் அவர் நார்வேயின் காஸ்பர் ரட்டை எதிர்த்து விளையாடியவை பார்க்கும் போது, அரையிறுதி போட்டி குறித்த ஐயங்கள் களையப்பட்டன என்று நடால் ரசிகர்கள் கூறுகின்றனர்.

ர.ஃபேல் நடால் அந்த செம்மண் தரையில் பெற்ற வெற்றிகள் அபாரமானது மட்டுமல்ல டென்னிஸ் உலகில் காலமெல்லாம் ரசித்து மகிழக் கூடிய ஒன்றாகத் திகழ்கிறது. ஏன் அப்படி?

ஏனென்றால், அந்த ஆடுகளம் அப்படி. செம்மண் ஆடுகளத்தில் விளையாடுவது மிகவும் சவாலானது மட்டுமல்ல அதில் ஏராளமான அறிவியலும் உள்ளன. இதர ஆடுகளங்களைவிட செம்மண் ஆடுகளத்தில் ஆடுவதற்கு தனித்துவமான சிறப்பியல்புகள் உள்ளது. நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் செம்மண்ணால் ஆன ஆடுகளம் ரோலன் காரோ மைதானம் மட்டுமே உள்ளது. இந்த போட்டியானது உலகளவில் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் கடுமையானது என்று விளையாட்டு மருத்துவர்களும், தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக விளையாட்டுச் செய்திகளை நேரில் கண்டுவரும் செய்தியாளர்களும் கூறுகின்றனர். எனவே அந்த செம்மண் ஆடுகளத்தில் பெறப்படும் ஒவ்வொரு வெற்றியும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளில் செம்மண்ணில் ஆடப்படும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியே மிகவும் கடினமானது. மேலும் பந்து தரையில் பட்டதும் அது துள்ளி எழும்பும் வேகம், அது பயணிக்கும் திசை மற்றும் கோணம் ஆகியவை இந்த செம்மண் ஆடுகளத்தில் வித்தியாசமானது. எனவே அதைக் கணித்து கவனமாக ஆடுவதற்கு உடல் மற்றும் மனம் ஒரே நேரத்தில் சீராகச் சிந்தித்து செயல்பட வேண்டும். செம்மண் ஆடுகளம் மிகவும் மென்மையானது, எனவே பந்து அந்த தரையின் மீது பட்டவுடன் அது தனது ஆரம்ப வேகத்தை கணிசமானளவில் இழந்து ஒப்பீட்டளவில் கூடுதலான உயரம் எழும்பும். எனவே திருப்பியடித்து திணறவைக்கும் வகையில் பந்தை அடிப்பது இந்த ஆடுகளத்தில் சற்று சிரமமானது. அடிப்படையில் எல்லைக் கோட்டில் நின்று பிடித்து, நீண்ட நேரம் பந்தை மாறி மாறி அடிக்கும் உத்தியைக் கையாளும் வீரர்களுக்கே இங்கு வெற்றி வாய்ப்பு அதிகம்.

"பொறுமை இங்கு தேவைப்படும் மிகப்பெரிய விஷயம், செம்மண் ஆடுகளத்தில் உங்கள் காலின் லாவகம், கூர்மையான சிந்தனை மற்றும் பந்தை எதிராளிக்கும் போடும் முறை ஆகியவை மிகவும் முக்கியம், இங்கு வேகத்தை மட்டுமே வைத்துக் கொண்டு வெற்றிபெற முடியாது, இது கட்டாந்தரையில் ஆடுவது போல் கிடையாது" என்கிறார் ஏழு முறை பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் பட்டத்தை வென்றுள்ள கிறிஸ் எவர்ட் அம்மையார்.

அவ்வகையில் செம்மண் ஆடுகளம் உடல் வலிமையின் உச்சக்கட்டத்தை பரிசோதிக்கும். எனவே வலைக்கு அருகில் வந்து பந்தை மிகவும் மென்மையாக எதிராளியின் பக்கம் போடுவதற்கு கால்களிலுள்ள ஆடுசதை இடம்கொடுக்க வேண்டும். இளம் வயதில் செம்மண் ஆடுகளத்தில் வெற்றி பெறுவது சுலபம், ஆனால் வயதாகும் போது அதே உடல் வலிமையைத் தக்கவைத்து ஆடுவது சவாலுக்கே சவால் விடுவது போலாகும். "இந்த ஆடுகளம் உங்கள் புத்திக் கூர்மையை விழித்தெழச் செய்யும்" என்று கூறுகிறார் ஸ்பெயினின் முன்னாள் வீரர் ஹோசே ஹிகிரெஸ்.

ரோலன் காரோ மைதானத்தில் காணப்படும் ஆடுகள் சிவப்பு நிற கூறை ஓடுகளைப் பொடி செய்து சலித்து அந்த செம்மண்ணில் அமைக்கப்படும் ஆடுகளமாகும். அப்படியான களத்தில் பந்து வேகமாக அடிக்கப்படும் போது அது தரையில் பட்டவுடன் அழுத்தத்தைக் கொடுத்து சேலாக நசுங்கியது போன்ற சிறிய அமைப்பை ஏற்படுத்தும், அது பந்து முன்னேறிச் செல்வதிலிருந்து அதன் திசையை மாற்றி மேலே எழும்பும் வகையில் செய்கிறது. இவ்வகையில் பந்து திசைமாறி உயர எழும் போது, ஆடுகளத்தில் ஏற்படும் உராய்வு காரணமாகப் பந்தின் துள்ளி எழும்பும் வேகம் அதிகரித்து அது பயணிக்கும் வேகத்தைக் குறைக்கிறது. எனவே செம்மண் ஆடுகளத்தில் பந்தின் அந்த துள்ளிக்குதிக்கும் வேகத்தை அனுமானித்து அதற்கேற்ற வகையில் உடல் அசைவுகளை மாற்றியமைத்து பந்தை அடிக்கும் போது இடுப்பு மற்றும் கால்கள் உடலின் சக்தியில் பெரும்பங்கை எடுத்துக்கொள்ளும்.



அது மட்டுமல்ல, இளநீர் வெட்டுவது போன்று பந்தை மேல்வெட்டாக சீவும் போது கைகளில் மிகவும் உறுதி தேவை. பந்து நன்றாக மேலெழுந்து வரும் என்பதால் இந்த இளநீர் வெட்டு சாத்தியப்படும், ஆனாலும் பந்து எதிர்பார்க்கப்படும் வகையில் வேகம் குறைந்து வலையைத் தாண்டி தாழ்வாக விழுவது மிகவும் சவாலான சிக்கலான ஒன்றாகும். மேலும் ஒரு டென்னிஸ் விளையாட்டு வீரர் இப்படியும் அப்படியும் ஆடுகளத்தில் சுழலும் போது இடுப்பும் காலும் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகும், அதுவும் செம்மண் ஆடுகளத்திலுள்ள துகள்கள் மிகச்சிறிய உருளைகள்-பால் பியரிங்- போன்று செயல்படுவதால், உராய்வு காரணமாக ஒரு வீரர் பந்தை அடிக்கும் திசையில் தன்னை மாற்றிக்கொள்வது பெரும் சவாலானதாகும்.



இதற்கெல்லாம் அப்பாற்பட்டு செம்மண் ஆடுகளத்தில் விளையாடுவது இயற்கையுடன் விளையாடுவதற்கு ஒப்பாகும். அதிகமான வெயில் அல்லது லேசான மழை கூட ஆட்டத்தின் போக்கை மாற்றியமைக்கும். அதிகமான வெயில் நாட்களில் பந்து காற்றில் வேகமான பயணிக்கும் (பௌதிகம் படித்தவர்கள் இதை அறிவார்கள், அதாவது வெப்பமான காற்றில் ஈரமான காற்றைவிட அடர்த்தி குறைவாக இருக்கும்), அதேவேளை ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது- லேசான மழை அல்லது தூறல் காரணமாக- பந்தில் செம்மண் ஒட்டும், அதனால் வீரர்களால் தாங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு வேகமாக அடிக்க முடியாது.

பல வகைகளில் கடுமையான சவால்கள் நிறைந்த ரோலன் காரோ மைதானத்தில் 14 முறை வென்று சாதனை படைப்பது சாதாரண வி'யமல்ல அதைத்தான் 36 வயதான ர.ஃபேல் நடால் செய்துள்ளார். எனவேதான் உலகெங்குமுள்ள டென்னிஸ் வர்ணனையாளர்கள், விமர்சகர்கள், செய்தியாளர்கள், ரசிகர்கள் அனைவரும் நடாலை தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடுகின்றனர்.



ஜூன் 6 ஆம் திகதி சி என் என் செய்தி சேவையிடம் பேசிய நடால், "நோவாக் (ஜாக்கோவிச்) 23 முக்கியப் பட்டங்கள் (கிராண்ட் ஸ்லாம்களை) வென்று நான் 22 மட்டுமே பெற்று அதில் தங்கிவிட்டால், நான் கவலைப்பட மாட்டேன். எனது மகிழ்ச்சி மாறவே மாறாது, ஒரு சதவீதம் கூட" என்று கூறியிருந்ததைச் சுட்டிக்காட்டும் டென்னிஸ் செய்தியாளர் லுய்ஜி கட்டோ, அது அவரது பெருந்தன்மையைப் பெரியளவிற்கு எடுத்துக்காட்டுகிறது என்கிறார். தனது டிவிட்டர் பக்கத்தில் நடால் வயதானவர் போலிருக்கும் படம் ஒன்றைச் சித்தரித்து 2050 ஆம் ஆண்டு 40 ஆவது முறையாக ரோலன் காரோ மைதானத்தில் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியை வென்ற பிறகு நடால் செய்தியாளர்களிடம் பேசுகிறார் என்று ட்வீட் செய்துள்ளார். ர.ஃபேல் நடாலின் ஆளுமைக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு இருக்காது.

அவரது காலில் ஏற்பட்டுள்ள காயம் மிகவும் பாரதூரமானது. இரண்டு கால்களிலும், அதிலும் குறிப்பாக இடது காலின் ஆடுசதை தொடங்கி கணுக்கால் பாதம் வரை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ குறிப்புகளை மேற்கோள் காட்டி செய்திகள் கூறுகின்றன. இம்முறை பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகளை வென்ற பிறகு அவர் தொழில்சார் டென்னிஸ்லிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பார் என்று ஏகப்பட்ட ஊகங்கள் நிலவின. ஆனால் முடிந்தளவிற்குத் தொடர்ந்து களத்தில் இருப்பேன் என்று கோப்பையை கையில் வைத்துக்கொண்டு அவர் கூறினார்.

"இது வெற்றி தோல்வி தொடர்பான விஷயமல்ல, யாருக்கும் நிரூபிக்க வேண்டிய விஷயமல்ல, இது நாம் விரும்பும் ஒரு விஷயத்தைச் செய்வதாகும், நான் டென்னிஸை விரும்புகிறேன்".

இது தான் நடால், என்றென்றும் ராஜா





MORTGAGES & REFINANCES
WE WILL GET THE MORTGAGE FOR
• LOW INCOME
• BAD CREDIT
• CONSUMER PROPOSAL
அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!
PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS
WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU
Shan Thayaparan
Mortgage Architect
M08009140
MORTGAGE ARCHITECTS
416-826-7426
shan@shan123.com

SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION

# RADIOTHON
# ரேடியோதோன்

## June 11, 2022 | 8AM to 8PM

Live-to-air on CMR 101.3FM

PROUDLY CO-PRESENTED BY

Canadian Tamils' Chamber of Commerce

NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS

IN PARTNERSHIP WITH

cmr

EVENT SPONSORS

DEVADAS LAW PROFESSIONAL CORPORATION

RBC Royal Bank

JC's BANQUET & CONVENTION CENTRE

Chapel Ridge

Life100 INSURANCE & INVESTMENTS INC.

Sri Lankan Accountants Association of Canada

SCARBOROUGH CONVENTION CENTRE

PRINT FAST

SPC Suntharalingam Professional Corporation

Monsoon Journal

tvi HD

In collaboration with CMR 101.3FM, the SHN Foundation Tamil Radiothon will air live on June 11, 2022, and will feature interviews with patients, physicians, nurses, staff, volunteers, and business leaders to inspire the community to help shape the future of health care in Scarborough by showing their support through donations.

**Help us raise over $300,000 to support our *Love, Scarborough* campaign and our key priorities including removing barriers to mental health care, managing and preventing chronic kidney disease, and treating heart disease in Scarborough.**

## DONATE TODAY

## SHNFoundation.ca/**Tamil**


GENERAL | CENTENARY | BIRCHMOUNT

416-431-8130 | foundation@shn.ca

CHARITABLE REGISTRATION NUMBER 11914 2263 RR0001

SHN SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION | Love, Scarborough

# லண்டன் மலையக இலக்கிய மாநாடு தொடரவேண்டும்!



- எச். எச். விக்கிரமசிங்க

"நாங்கள் லண்டனுக்கு வந்திருந்த போது, மலையகத்தின் மறைந்த எழுச்சித்தலைவர் பெ.சந்திரசேகரம் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் மலையகத் தமிழர்கள் அனைத்துலக ரீதியில் ஓர் அமைப்பாக உருப்பெற வேண்டும் என்று மு.நித்தியானந்தன் அவர்களுடன் லண்டனில் பலதடவைகள் கலந்துரையாடி இருந்தார். அனைத்துலக ரீதியில் அத்தகைய அமைப்பு உருவாக இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்று கூறத்தெரியவில்லை. ஆனால், அத்தகைய அமைப்பிற்கு லண்டனில் நடைபெறும் "மலையக இலக்கிய மாநாடு" ஒரு அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை." என்று பதிப்பாளரும் மலையக ஆய்வாளருமான எச். எச். விக்கிரமசிங்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு 1996, 1997 ஆம் ஆண்டுகளில் கண்டியில் சிறப்பாக நடைபெற்று, அம்மாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டது. அம்மாநாடு நடந்து இன்று 25 ஆண்டுகள் கடந்து போய்விட்டன. ஆனால், அதன் தொடர்ச்சி பேணப்படவில்லை. இன்றோ இலங்கைச் சூழல் மிக துயரமான கட்டத்தை அடைந்து விட்டநிலையிலும், லண்டனில் இம்மாநாடு திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெறுவது மலையக இலக்கியவாணர்களுக்கும், இலக்கியச் சுவைஞர்களுக்கும் பெரும் உற்சாகத்தைத் தந்துள்ளது.

மிகச் சிறந்தமுறையில் திட்டமிடப்பட்டு, முறையாக நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆற்றல்மிக்க விமர்சகர்களை உள்வாங்கி, ஐரோப்பா தழுவிய நிலையில் இம்மாநாடு நடைபெறுவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கையிலிருந்து பல நூல்களை எழுத்தாளர்களிடமிருந்து சேகரித்து லண்டனுக்கு அனுப்பி வைக்கும் பொழுதில் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் காட்டிய அக்கறையினை நேரில் பார்த்து அனுபவித்தேன். பாரபட்சமின்றி மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று அனைவரையும் அனைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இம்மாநாட்டு ஒழுங்கு முறை பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

இலக்கிய நிகழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதே வேளை, ஓவியர் கே.கிருஷ்ணராஜா மலையகத்தில் 2019 ஆம் ஆண்டு நிகழ்த்திய ஓவியப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களைப் பேணி இம்மாநாட்டில் மலையக ஓவியக் கண்காட்சியை நிகழ்த்தவிருப்பது மிகப்பெருஞ் சிறப்பாகும்.

கோ.நடேசய்யர் நடத்திய "வர்த்தகமித்திரன்" பத்திரிகை உட்பட நூற்றுக்கணக்கான மலையக நூல்களும், சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்படவிருப்பதாக அறிந்து மகிழ்ச்சியுற்றேன். உலக அரங்கில் மலையக இலக்கியம் பேசப்படுவதற்கு இம்மாநாடு முக்கிய புள்ளியாக அமையும் என்று நம்புகிறேன்.

இம்மாநாட்டினை நடத்துவதற்கு முன்னின்றுழைக்கும் லண்டன் விம்பம் அமைப்பினருக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன. விம்பம் அமைப்பினர் மலையக இலக்கிய மாநாட்டினை இனிவரும் ஆண்டுகளிலும் முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்று வேண்டுகிறேன்.

# மங்களம் உண்டாகட்டும்

(சிறுகதை)

எல்லோரும் அவசரமாக தங்கள் பணிக்காக ஓடுக்கொண்டிருந்த காலை நேரம். மும்பை தாராவி நேரு நகரில் வாடகை வீட்டில் தங்கியிருந்த ரவியிடம் அம்மா "மீனா உன் காதலி வீட்டிலிருந்து யாரும் எதுவும் கேட்க வரல். ஊரிலிருந்த நான் வந்து ஒரு மாசமாச்சு. இன்றைக்கு மத்தியானம் இரயிலில் ஊருக்குப் போகிறேன். எதிர் வீட்டிலிருந்து கிட்டு ஒரு நாளாவது வந்து பேசியிருக்கலாமில்லியா?" என்று கேட்டாள்.

"என்னம்மா. நாம் மாப்பிள்ளை வீட்டுக்கார நம்ம வந்து பேசணும்னு நெனச்சிருப்பாங்க."

"அவங்க வந்து பேசறதா தானே உன் லவ்வர் தேவி சொன்னதா சொன்னாய்."

"என்ன பிரச்சினையோ. தெரியல. நீ கௌம்பு. டிரெயினுக்கு நேரமாச்சு."

"அப்படீன்னா ஊரிலே போய் நான் வேற பொண்ணு பார்க்கவா?"

"ஒண்ணும் வேண்டாம். நான் அவங்களப்பார்த்துப் பேசி, ஊருக்கு வந்து உன்னையும் அப்பாவையும் பார்க்கச்சொல்கிறேன்" என்றவன் டாக்ஸி பிடித்து வி.டி. ஸ்டேஷனுக்கு வந்து அம்மாவை வழியனுப்பி வைத்தான்.

மறுநாள், ரவி தேவியைச் சந்தித்தபோது, "ஏன் தேவி உங்க அம்மா எங்க அப்பா கிட்டே வந்து பேசப்போறதா தானே சொன்ன. அப்புறம் என்னாச்சு." என்று கேட்டான் ரவி.

"வீட்டிலே என் தங்கச்சி எங்கேயோ மாட்டி கிட்டு...விடு ரவி. இப்ப என்ன செய்யலாம். பேசாம... ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா?"

"நான் வீட்டுல கடைசி பையன். எல்லோரும் என் கல்யாணத்த ஜாம் ஜாமுண்ணு நடத்தனும்மு எதிர்பார்க்கிறாங்க. நீ ஒண்ணு பண்ணு. நான் நாளைக்கு ஊருக்கு கௌம்புறேன். நான் தார நம்பர்ல உங்க அப்பாவை நாளை மத்த நாள் கூப்பிடுப் பேசச்சொல்லு." என்று தொலைபேசி எண் கொடுத்து விட்டு கிளம்பினான்.

ரவி ஊருக்கு வரும்போது வீடு திருமண களைக் கட்டியிருந்தது. பந்தல் எல்லாம் போட்டிருந்தது. 'யாருக்குத் திருமணம்' என யோசித்துக்கொண்டே வந்த போது "மாப்பிள்ளை வந்தாச்சு" என்ற ரவியின் மாமா (மீனாவின் தம்பி).

நேரக அம்மாவிடம் போய் "என்னம்மா யாருக்குக் கல்யாணம்?" என்றான் ரவி.

"எல்லாம் உனக்கும் உன் மாமா பொண்ணு திவ்யாவுக்குந்தான். சும்மா லவ்வு கிவ்வுண்ணு ஏதாவது சொன்ன... அப்புறம் நடக்கிறதே வேற. ஒழுங்கா திவ்யா கழுத்துல தாலிய கட்டிகிட்டு இங்கே உள்ள வெவசாயத்தைப் பாரு. இல்லை, நான் தூக்கில தொங்குவேன்." என்று அம்மா கத்திய போது அதிர்ந்து நின்றான் ரவி.

....................

**கவிமணி. இரஜகை நிலவன்,** மும்பை
....................
Philip George Chandran, M.A., M.H.M.
A-103, SWASTIK PARK, NEAR "H" WARD OFFICE
UMESH NAGAR, RETHI BUNDER ROAD
DOMBIVLI (WEST), THANE, MUMBAI – 421 202
MOBILE NO. 9920454827 -- E-mail: georgechandran1@gmail.com

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்
2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை
ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.
Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick
ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே
3 to 4 Star Hotel or Motel
a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
சொகுசு பேருந்து | தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour
CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




## காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

# FREE CLASSES

To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



**Sritharan Thurairajah**
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771
Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

LaCapitale IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. Assumption Life BMO Insurance

Are you getting Million Dollar advice?

# தோற்ற கட்சிகள் தொகுதி உடன்பாட்டை உருவாக்கினால் மட்டுமே அடுத்தமுறை பழமைவாதக் கட்சியை அகற்றுவது சாத்தியமாகும்!

- கனடா நக்கீரன்

கடந்த யூன் 02, 2022 இல் நடந்த 43 ஆவது ஒன்ரேறியோ மாகாண நாடாளுமன்றத் தேர்தலில் டக் போட் **(Doug Ford)** தலைமையிலுள்ள முற்போக்கு பழமைவாதக் கட்சி அமோக வெற்றியைப் பெற்று இரண்டாவது முறையும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அதற்கு ஒரு காரணம் ஒன்ரேறியோ வாக்காளப் பெருமக்கள் ஏன் தொல்லை, சும்மா இருப்பதே சுகம் என வீட்டோடு இருந்துவிட்டார்கள்.

நடந்து முடிந்த தேர்தலில் (2022) ஒன்ரேறியோ மாகாணம் வரலாற்றில் மிகக் குறைந்த வாக்குப்பதிவைப் பதிவு செய்துள்ளது. தகுதியான வாக்காளர்களில் வெறும் 44.7% வாக்காளர்களே வாக்களித்தனர். மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட 10.7 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்களில், வெறும் 4.8 மில்லியன் (44.7%) வாக்காளர்களே வாக்களித்துள்ளார்கள். கீழ் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 1 ஒரே பார்வையில் 2022, 2018 தேர்தல் முடிவுகளைக் காட்டுகிறது.



சென்ற தேர்தலைவிட இம்முறை பழமைவாதக் கட்சி 7 இருக்கைகளைக் கூடுதலாகப் பெற்றுள்ளது. சென்ற தேர்தலில் பழமைவாதக் கட்சி வேட்பாளர்களாக போட்டியிட்டு வெற்றிபெற்ற லோகன் கணபதி **(Markham - Thornhill)** மற்றும் விஜே தணிகாசலம் **(Scarborough - Rough River)** இம்முறையும் வெற்றிவாகை சூடியுள்ளார்கள். இந்த இரண்டு தொகுதிகளிலும் கணிசமான தமிழ் வாக்காளர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் புதிய சனநாயகக் கட்சியின் பலம் 40 இல் இருந்து 31 ஆகக் குறைந்துள்ளது. இதனை அடுத்தடுத்து மூன்று தேர்தல்களில் தோல்வியுற்ற புதிய சனநாயக கட்சியின் தலைவி அந்திரியா கோர்வாத் **(Andrea Horwath)** தலைமைப் பதவியில் இருந்து விலகியுள்ளார். அவரைப் போலவே 8 இருக்கைகளைக் கைப்பற்றிய தாராளமயக் கட்சித் தலைவர் ஸ்ரிவன் டெல் டுகா **(Steven Del Duca)** தனது சொந்தத் தொகுதியிலேயே **(Vaughan-Woodbridge)** பழமைவாதக் கட்சி வேட்பாளரிடம் 6,725 வாக்குகளால் தோற்றுப் போனார். அவருக்குக் கிடைத்த வாக்குகள் 12,615 (35.1%) மட்டுமே. தோல்வியைத் தொடர்ந்து இவரும் தனது தலைமைப் பதவியில் இருந்து விலகியுள்ளார். இவர் 2020 மார்ச் மாதம் நடந்த கட்சியின் தலைவர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஒன்ரேறியோ மாகாண நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2022

அட்டவணை 1

| கட்சி | 2022 | | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குகள் | % | இருக்கைகள் | வாக்களிப்பு | வாக்குகள் | % | இருக்கைகள் |
| முற்போக்கு பழமைவாத | 1,912,057 | 40.82 | 83 | | 2,326,524 | 40.5 | 76 |
| புதிய சனநாயக | 1,111,112 | 23.74 | 31 | | 1,929,966 | 33.6 | 40 |
| தாராளமய | 1,117,041 | 23.85 | 8 | | 1,124,346 | 15.6 | 7 |
| பசுமை | 279,152 | 5.96 | 1 | | 264,519 | 4.6 | 1 |
| சுயேட்சை | 38,655 | 0.55 | 1 | | 0 | 0 | 0 |
| மற்றவர்கள் | 236,429 | 5.12 | 0 | | 100,058 | 1.6 | 0 |
| வாக்காளர்கள் | 10,759,433 | | | | 10,109,000 | | |
| வாக்களித்தவர்கள் | 4,809,913 | 44.7 | | | 5,723,670 | 56.67 | |
| முன்கூட்டி வாக்களித்தவர்கள் | 698,609 | 6.8 | | | 1,066,545 | 9.92 | |
| மொத்த இருக்கைகள் | | | 124 | | | | 124 |

பொதுவாக தேர்தலில் ஒரு கட்சி தோற்றுப் போனால் தோல்விக்குப் பொறுப்பேற்று பதவி விலகுவது மேலை நாடுகளில் ஒரு அரசியல் மரபாக இருந்து வருகிறது. குறைந்த பட்சம் கட்சியின் தலைமைப் பதவியை நம்பிக்கை வாக்கெடுப்பின் மூலம் உறுதி செய்து கொள்கிறார்கள். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இப்படியான மரபு பொதுவாகப் பின்பற்றப்படுவதில்லை. தோற்றாலும் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காது கெட்டியாக பிடித்து வைத்திருப்பார்கள்.

மொத்த வாக்குகளில் 40.82% பெற்ற பழமைவாதக் கட்சி மொத்த 124 இருக்கைகளில் 83 இருக்கைகளில் (66.93%) வென்றிருக்கிறது. உண்மையில் 40.82% பெற்ற கட்சிக்கு 51 இருக்கைகள்தான் கிடைத்திருக்க வேண்டும். அதே போல் 23.74% வாக்குகள் பெற்ற புதிய சனநாயகக் கட்சிக்கு 19 இருக்கைகள்தான் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அந்தக் கட்சிக்கு 31 இருக்கைகள் கிடைத்திருக்கிறது. அதே சமயம் 23.85% வாக்குகளைப் பெற்ற தாராளமயக் கட்சிக்கு 8 இருக்கைகளைத்தான் கிடைத்திருக்கிறது. இதனால் மாகாண நாடாளுமன்றத்தில் அந்தக் கட்சி உத்தியோகபூர்வ தகைமையை இழந்துள்ளது.




புதிய சனநாயகக் கட்சி வேட்பாளர்கள் 33 தொகுதிகளில் கட்டுக்காசை இழந்துள்ளனர். இதில் ரொறன்ரோ பெருநகரப் பகுதியில் மட்டும் 24 வேட்பாளர்கள் கட்டுக்காசை இழந்துள்ளார்கள். புதிய சனநாயக கட்சி ஏற்கனவே சில கட்டுமானம் மற்றும் கட்டிடத் துறையில் உள்ள தொழிற்சங்கங்களின் ஆதரவை இழந்துள்ளது. தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் **Timmins, Hamilton East, Brampton East, Bramton Centre, Windsor Tecumseh** ஆகிய தொகுதிகளில் பழமைவாதக் கட்சியிடம் புதிய சனநாயகக் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளது. இதே சமயம் தாராளமயக் கட்சி கிட்டத்தட்ட பாதித் தொகுதியில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

பழமைவாதக் கட்சியின் அபார வெற்றிக்குக் முக்கிய காரணம் ஒரு தொகுதியில் ஆகக் கூடுதலான வாக்குகள் பெறும் வேட்பாளரே வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவதுதான். இதனை ஆங்கிலத்தில் **First past- the- post- system (FPTP)** என அழைக்கிறார்கள். தமிழில் கம்பத்தை முதலில் கடந்தவர் என அழைக்கலாம். மக்களாட்சி முறைமையில் காணப்படும் பலவீனங்களில் இதுவும் ஒன்று. 1970 இல் இலங்கையில் நடந்த தேர்தலில் அதிக எண்ணிக்கை வாக்குகளையும் வாக்கு விழுக்காட்டையும் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி படு தோல்வி அடைந்தது.

ஆகக் கூடிய வாக்குகளையும் வாக்கு விழுக்காட்டையும் பெற்ற ஐதேக வெறுமனே 17 இருக்கைகளை மட்டும் பெற்றது. ஐதேக யைவிட சற்றுக் குறைந்த வாக்குகளையும் விழுக்காட்டையும் பெற்ற எஸ்எல்எவ்பி 91 தொகுதிகளைக் கைப்பற்றியது. இந்த முரண்பாடு காரணமாகவே 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன முதலில் கம்பத்தைக் கடக்கும் தேர்தல் முறைமையைக் கைவிட்டு விகிதாசார தேர்தல் முறைமையை தனது 1978 இல் இயற்றிய அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தினார். இந்த விகிதாசார முறைமையின் கீழ் ஐதேக க்கு அதிக இருக்கைகள் கிடைக்கும் அதே நேரம் எந்தக் கட்சிக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காது என அவர் நம்பினார். 1977 முதல் ஆட்சியில் இருந்த ஐதேக 2004 இல் நடந்த தேர்தலில் தோற்றுப் போய்விட்டது. விகிதாசாரத் தேர்தல் முறை ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களிடம் விருப்பு வாக்குகளுக்கு கடுமையான போட்டியை உருவாக்குகிறது. இதனால் இரண்டு தேர்தல் முறைகளையும் கலந்து ஒரு கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டுவர வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. 2018 இல் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் 60% (5032) முதலில் கம்பத்தைக் கடந்த முறையிலும் 40% (3394) விகிதாசார முறையிலும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

2022 தேர்தல் பரப்புரையின் போது 4 முக்கிய கட்சிகளில் 3 மாகாணத்தின் தேர்தல் முறைமையை மாற்றுவதாக உறுதியளித்தன. ஆனால் பழமைவாதக் கட்சித் தலைவர் டக் போட் அதனை நிராகரித்து விட்டார். "இந்தத் தேர்தல் முறைமை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது. அது தொடர்ந்து செயல்படும்" என்று செய்தியாளர்களிடம் கூறினார். மத்தியில் பதவியில் இருக்கும் தாராளமயக் கட்சி அரசும் தேர்தல் முறைமையில் சீர்திருத்தத்தம் செய்யப்படும் என வாக்குறுதி அளித்தது. ஆனால் அதனை நிறைவேற்றத் தவறிவிட்டது.




மேலே கூறியவாறு இந்தத் தேர்தலில் பெரும்பான்மை வாக்காளர்கள் (55.3%) ஏன் வாக்களிக்கவில்லை என்ற கேள்விக்குப் பலரும் பலவிதமாக பதில் இறுக்குகிறார்கள்.

முதல் காரணம் இந்தக் கட்சிகளுக்கு இடையே சித்தாந்த அடிப்படையில் பெரிய வேறுபாடு இல்லை. இந்தக் கட்சிகள் முதலாளித்துவ சந்தைப் பொருளாதார கோட்பாட்டைப் பின்பற்றுபவை.

இரண்டு ஒன்ரேறியோ மாகாணத்தின் பொருளாதாரம் நிலையான பொருளாதாரம் **(stable economy)** ஆக இருக்கிறது. 2021 இல் பணவீக்கம் 6.9% (கனடா 6.8%) ஆக இருந்தது. வாகன எரிபொருள் நீங்கலாக நுகர்வோர் விலைக் குறியீடு **(CPI)** பெப்ரவரி மாதத்தில் 4.7% ஆக உயர்ந்தது.

இல்கையில் 1970 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

அட்டவணை 2

| கட்சி | வாக்குகள் | % | இருக்கைகள் |
|---|---|---|---|
| ஐதேக | 1,892,525 | 37.91 | 17 |
| எஸ்எல்எவ்பி | 1,839,979 | 36.86 | 91 |
| எல்எஸ்எஸ்பி | 433,224 | 8.68 | 14 |
| தமிழ் அரசுக் கட்சி | 245,727 | 4.92 | 13 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 169,199 | 3.39 | 6 |
| தமிழ்க் காங்கிரஸ் | 115,567 | 2.32 | 3 |
| எம்இபி | 45,571 | 0.09 | 0 |
| சுயேட்சைகள் | 249,006 | 4.99 | 2 |
| மொத்தம் | 4,991,798 | | 146 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 4,991,798 | | |
| செலுத்தப்பட்ட வாக்குகள் | 5,505,028 | | |

வாகன எரிபொருள் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. ஒரு லிட்டர் வாகன எரிபொருள் கடந்த சனவரியில் 1.50 டொலராக இருந்தது. இன்று 2.13 டொலராக அதிகரித்துள்ளது. உக்ரைன் மீதான உருசியாவின் படையெடுப்பை அடுத்து அதற்கு எதிரான பொருளாதாரத் தடைகாரணமாக எரிவாயு விலைகள் பல மாதங்களாக கணிசமாக உயர்ந்து வருகின்றன. மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மறுபுறம் கனடா பயன்படுத்தக்கூடியதை விட அதிக எண்ணெயை உற்பத்தி செய்கிறது. இதன் விளைவாக, கச்சா எண்ணெய்யின் குறிப்பிடத்தக்க நிகர ஏற்றுமதியாளராக கனடா உள்ளது. 2019 இல் கனடா ஒரு நாளைக்கு 3.7 மில்லியன் பீப்பா கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்தது. இதில், 98% அமெரிக்காவிற்கும், மீதமுள்ள 2% அய்ரோப்பா மற்றும் ஆசியாவிற்கும் சென்றது.

இன்னொரு காரணம் முக்கிய கட்சிகளிடையே பொருளாதார, அரசியல், சமூக சிக்கல்கள் பற்றிப் பேரளவில் வேறுபாடில்லை. மேலும் மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் ஊழல், பண வீக்கம், பணவிரயம், தாமதம், பொருட்களுக்குத் தட்டுப்பாடு பேரளவில் கனடாவில் இல்லை.

எது எப்படியிருப்பினும் டக் போட் அவர்களின் ஆட்சியை அகற்ற வேண்டும் என்றால் அடுத்த நான்கு ஆண்டு காலம் காத்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் புதிய சனநாயகக் கட்சியும் தாராளமயக் கட்சியும் தொகுதி உடன்பாட்டை உருவாக்கி தேர்தலைச் சந்தித்தால் மட்டுமே பழமைவாதக் கட்சியை அகற்றுவது சாத்தியமாகும்.



# கொஞ்சும் கனவுகளோடு நான்

(சிறுகதை)

இரயில் ஓடிக் கொண்டிருக்கிறது...நான் இன்னும் பழைய கனவுகளில் மிதந்து கொண்டிருக்கிறேன். டில்லிக்கு வந்து ஏறக்குறைய பதினைந்து வருடங்களாகி விட்டன. திருமணத்திற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னாலே மத்திய அரசு நிறுவனத்தின் ஒரு பகுத்திக்கு நேரடியாக மானேஜராக பதவி பெற்று வந்தேன். இங்கேயே திருமணம் முடித்து கவிதா மற்றும் பீட்டர் ஆகிய குழந்தைகளோடு, இன்னும் அழகான மனைவி ஸ்டெல்லாவோடு ஊரை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறேன். ஊரிலே மாதா கோவில் திருவிழா ஜாலியாக இருக்கும் என்று நினைக்கும் போதே உடம்பெல்லாம் மெய் மறந்து புல்லரித்துப் போனது.

கொடியேற்றம் அன்றைக்கே ஊரில் திருவிழா களை கட்ட ஆரம்பித்து விடும். காலையிலே சிறுவர்கள் சின்ன பாட்டில்களிலும் கண்ணாடி டம்ளர்களிலும் ஸாக்ரின் கலந்த சிவப்பு, பச்சை நிற சர்பத்தை விற்க ஒரு புறம் தொடங்கி விட, கோவிலின் அருகில் சில பாயாசக் கடைகளும் தொடங்கி விடும்.

குச்சி மிட்டாயும், சவ்வு மிட்டாயும் ஈக்கள் குழும சீனிக்கார தாத்தா கடையில் உருவாகும். ஊருக்குத் திருவிழாவிற்கு வந்த மலையாளத்து பாட்டம்மையிடமும் மாமாவிடமும், அத்தானிடமும் மாறி மாறி பணம் வாங்கி சர்பத்தும், குச்சி மிட்டாயும் தின்ற நினைவுகள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன.

சாயங்காலம் ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் கப்பி வழியாக நான்கு புறமும் பெரிய பெரிய வடக்கயிறும் கொடிமரத்தின் ஒருபக்கத்தை உயரே இழுத்து நிறுத்தி நான்கு பக்கமுள்ள பெரிய வேப்ப மரங்களில் கட்டி வைப்பார்கள்.

கொட்டு மேளத்தோடு மதிய நேரம் கழிந்த நேரத்திலிருந்து வீடு வீடாக கொடி எடுத்து வந்து திரும்ப மாதா கோயிலுக்கு கொண்டு செல்வார்கள்.

சாயங்காலம் பொழுது சாய ஊரே திரண்டு நிற்க வாண வேடிக்கைகள் முழங்க மக்களின் கரவொலி வானைப் பிளக்க பங்குத்தந்தை ஆலயக் கொடியை ஏற்றி வைத்து பின்னர் திருமறை உரை ஆற்றி ஆசீர்வாதம் பண்ணுவார்.

உடனே வீட்டிற்கு வந்து கோழிக்கறி உளுந்தஞ் சோறு சாப்பிட்டு விட்டு நடக்கப் போகும் சிறுவர்களின் நாடத்திற்காக ஓடும் போது வழியில் கட்டை உருட்டும் பகுதியில் கையில் இருந்த பத்து காசையும் ஆசையாக இழந்து விட்டு, ஆலய வளாகத்தில் நடக்கும் நாடகத்தை முன் வரிசையில் உட்கார்ந்து பார்க்க ஓடி வரும் ஆர்வம்.

ஒரு முறை நான் கூட பெண் வேடம் போட்டு முந்தானை விழுந்ததைக் கூட மறந்து வசனம் பேச, கூட்டம் முழுவதும் சிரிக்க, நான் பேந்த பேந்த விழிக்க இப்போதும் எனக்கு சிரிப்புதான் வந்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்"? என்றாள் ஸ்டெல்லா.

"பழைமைகளை நினைத்துப் பார்த்தேன்."

"அத்தைப் பெண்ணை விரட்டிய ஞாபகமா?"

"சீ! ஏன் ஸ்டெல்லா சொந்தஊரில் வேறு விஷயமே கிடையாதா?"

என் முகத்தில் இருந்த எரிச்சலைப் பார்த்து "நான் சும்மா தானே கிண்டல் பண்ணினேன். ஏன் கோபப் படுகிறீர்கள்?" என்றாள் மனைவி.

"அப்பா... ஊர் எப்படி இருக்கும்? அங்கே ரயிலெல்லாம் கிடையாதாமே" என்றான் பீட்டர்.

"ஆமாண்டா கண்ணு. ஊரிலே நெல் வயலும் தென்னந் தோப்பும் தான் நெறைய இருக்கு."

"தாத்தா பாட்டிக்கெல்லாம் உன்னை விட ரொம்ப வயசிருக்குமில்லே டாடி" என்றாள் மழலையில் கவிதா.

"ஆமாம் நீ போய் பிஸ்கட் சாப்பிடு" என்றேன்.

ரயில் ஓடிக் கொண்டிருக்கிறது. நான் திரும்பவும் பழைய நினைவுகளுக்குள் புகுந்தேன். நாடகம் முடிந்து தூங்கி எழுந்தால் இரண்டாம் திருநாள். பத்து நாளும் ஊரிலே பள்ளி விடுமுறை விட்டு விடுவார்கள். நாங்கள் கொண்ட குதுகலம் சொல்லி மாளாது. இரண்டாவது நாளிலிருந்து குடை ராட்டு அம்மாங்க (சிஸ்டர்) மடத்திற்கு வந்து விடும். பத்து காசு கொடுத்தால் குடை ராட்டில் அமர்த்தி இருபத்தைந்து முறைச் சுற்றுவான்.

கோயில் வாசலில் திரும்பவும் சர்பத்து பாயாசம் மிட்டாய் கடைகள் பிரசவமாகும். திரும்ப மாதா சபையார் இரண்டாம் நாள் நாடகம் போடுவார்கள். அக்கா நாடகத்தில் அடிக்கடி ஆண் வேஷம் கட்டி நடிப்பாள். அண்ணாவின் வேட்டியும் சட்டையும் போட்டுக் கொண்டு கண்மையை மூக்கிற்குக் கீழே மீசையாகப் போட்டுக் கொண்டு..இப்படி ஏழு நாள்கள் பறந்து போகும்.

தினம் வீட்டில் காலையில் ஆவி பறக்க இட்லி, தோசை, புட்டு, கொழுக்கட்டை, கருப்பட்டி காப்பி என ஒரே களேபரமாகத்தான் இருக்கும். வீடு முழுவதும் சொந்தக்காரர்கள் நிறைந்திருப்பார்கள். அப்பா வாழைத் தோப்பில் தினமும் நிறைய வாழை இலை அறுத்துக் கொண்டு வந்து போடுவார்கள். அம்மா முழுக்க முழுக்க அடுப்படியிலே வாசம் செய்வார்கள். மூன்று வேளையும் நன்றாக சாப்பிட்டு தினமும் நாடகம் பார்த்து... ஐயோ என்ன மகிழ்ச்சி. !!!!

எட்டாம் திருநாள் வந்தாலே வெளியூரிலிருந்து ஆட்கள் வந்து குமிய ஆரம்பித்து விடுவார்கள். காலையிலே திவ்ய நற்கருணை, சுற்று பிரகாரத்திற்காக இரதம் ஜோடிக்கப்படும். ஊரிலுள்ள இளைஞர்கள் அனைவரும் கன்னியாஸ்திரிகளுக்கு உதவி செய்து இரதத்தை பிரமாதமாக ஜோடிப்பார்கள்.

சாயங்காலம் ஆலயத்தைச் சுற்றி தேன் குழல் மிட்டாய் கடைகளும், கண்ணாடி வளையல், விளையாட்டு சாமான் கடைகளும் நிறைய ஆரம்பித்துவிடும். ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் திவ்ய நற்கருணை பவனி, சுத்தம் செய்யப் பட்டு இலை தழைகளால் ஜோடிக்கப் பட்ட தெருக்களை சுற்றி நான்கு மணி நேரமாக ஊர்வலமாக வந்து முடியும். திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

பின் ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து தேவசகாயம் பிள்ளை சரித்திரத்தை நடித்துக் காட்டுவார்கள்.

ஒன்பதாம் திருநாள் காலையில் புது நன்மை கொடுக்கப்படும். எல்லா சிறு பிள்ளைகளும் வெண்ணுடை தரித்து புது நன்மை வாங்க சாயங்காலம் ஆலயத்திற்கு வெளியே பெரிய அளவில் ஆசீர்வாதமும் பாடல் பலியும் நடைபெறும். இரவில் தேர்ப் பவனி வர பலரும் கள் குடித்தாலும் மிகவும் மகிழ்ச்சியாக தேவ அன்னைக்கு புகழ் பாடல் பாடி விடிய விடிய ஊரைச் சுற்றி வந்து தேரை கோவிலின் அருகில் நிறுத்துவார்கள். உடனடியாக தேரில் தேரில் விடியற் காலை பாடல் பலி பூஜை நடைபெறும். தொடர்ந்து கோவிலின் வெளி பிரகாரத்தில் பெரிய பூஜை நடைபெறும்.

மத்தியானம் தேர்ப் பவனி சுற்றி வர, கோவிலின் முன்னால் ஊரிலுள்ள இளம் பெண்கள் அனைவரும் வளையல் பொட்டு குப்பி வாங்கவர, இளைஞர்கள் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டே போக, கிண்டலும் கேலியும் கொஞ்ச நேரம் ஊரே மகிழ்ச்சியில் திளைத்து மூழ்கும்.

இரவில் இளைஞர்கள் சேர்ந்து வழங்கும் ஒப்பற்ற சமூக நாடகக் காவியங்களை காண பக்கத்திலுள்ள ஊர் மக்கள் எல்லாம் திரண்டு வருவார்கள்.

ஏறக்குறைய பதினைந்து வருடங்கள் கழித்து திரு-நாள் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி இரத்தத்தின் ஒவ்வொரு செல்லிலும் ஓடிக் கொண்டிருந்தது.

"ராஜன் நாகர்கோவில் ஸ்டேசன் வரப் போகிறது. இறங்குவதற்கு தயாராக இருங்கள்" என்றாள் மனைவி ஸ்டெல்லா.

பீட்டரும் கவிதாவும் புது உடைக்கு மாறியிருந்தார்கள். நான் பெட்டி படுக்கைகளை தூக்கிக் கொண்டு ஸ்டேசனில் இறங்கி மனைவி மக்களோடு நடந்தேன்.

காரில் ஊருக்குள் நுழைந்த போது ஆலய வளாகத்தில் நின்றிருந்த வேப்ப மரங்கள் எல்லாம் காணாமற் போயிருந்தன. வெறுமையாகத் தோன்றிய அந்த ஆலயமும் புது வடிவம் பெற்றிருந்தது. மாதாவின் சொரூபம் மென்மையாக புன்னகைத்துக் கொண்டிருந்தாலும் மரங்கள் இல்லாத ஆலய வளாகம் என் மனதில் முதன் முதலாக வெறுமையை உருவாக்கியது.

அப்பா மிக மகிழ்ச்சியாக வரவேற்றார்கள். "இப்பவாவது ஊருக்கு வழி தெரிந்ததே" என்றவாறு. அம்மா என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டார்கள். அக்காவும் குழந்தைகளும், அக்கா குழந்தைகளும் மகிழ்ச்சியடைய எங்களை வரவேற்று நாங்கள் என்ன வாங்கி வந்திருக்கிறோம் என்று ஆவலாய் காத்திருந்தார்கள்.

மறுநாள் காலை கோயில் வளாகத்தில் கொடியேற்று விழாவை கொண்டாட எந்த விஷேசமும் தெரியவில்லை. அக்கா பையன் ஜோசப் பள்ளிக்கூடத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான். "ஏன்டா ஜோசப் இன்றைக்கும் லீவு கிடையாதா? என்று கேட்டேன்.

"இல்லை மாமா. எங்களுக்கு பத்தாம் திருநாள் மட்டுந் தான் லீவு மாமா." என்று சொல்லிக் கொண்டே ஓடினான். கொடியேற்று விழா ஆலய வளாகம் இன்னும் களை கட்டவில்லை. எனக்குள் வெறுமையும் எரிச்சலும் வளர ஆரம்பித்தன. சர்பத், பாயாசக் கடைகளை தேடித் தேடி என்கண்கள் அலுத்து போயின.

சாயங்காலமும் யாரும் கொடி எடுத்து வைக்கவரவில்லை. திடீரென்று ராட்சஷ சைசில் ஒரு கிரேன் வர கொடி மரம் உயர்த்தப்பட்டது. கோயில் மணி அடிக்க ஒரு சிலரே ஆலயத்திற்கு வெளியில் நிற்க எந்த வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் கொடியேற்று விழா நடந்து முடிந்தது.

இரவில் நாடகம் போடுவார்களா என்று விசாரிக்கும் போது திடீரென்று ஒரு வேன் வேகமாக வர இரண்டு இளைஞர்கள் குழிதோண்டி கம்பு களை நாட்டி திரை கட்டப்பட்டது. கோயிலுக்கு கொடியேற்று விழாவிற்கு வந்ததை விட பத்து மடங்கு கூட்டம் 'அன்புள்ள ரஜினிகாந்த்' திரைப் படம் பார்க்க கூடியிருந்தனர்.

மறுநாள், அடுத்த நாள், என நாட்கள் தான் திரும்ப வர பகல் வேளைகளில் ஆலய வளாகத்தில் ஈக்களை விரட்ட கூட ஒரு ஆள் இல்லாமல் வெறிச்சோடி கிடக்க எனக்குள்ளே எரிச்சலும் கோபமும் வளர்ந்து கொண்டே போக தினமும் ஆலய வளாகத்தில் இரவில் ரஜினியும், கமலும், விஜயகாந்தும், கார்த்திக்கும், பிரபுவும் வந்து விட்டுப் போனார்கள்.

எட்டாம் திருநாள் திவ்ய நற்கருணை பவனி இரதத்தை இரண்டு கன்னியாஸ்திரிகள், மட்டுமே நின்று ஜோடித்துக் கொண்டிருந்தார்கள். தேர்ப்பவனியும் திவ்ய நற்கருணை பவனியைப் போல ஒரு மணி நேரத்திற்குள் நடந்து முடிய நான் வீட்டிற்குள்ளே இருக்க முடியாமல் ஒன்பதாம் திருநாள் இரவு ஆலயத்திற்கு முன்னால் வந்த போது என்னை அறியாமல் என் கண்களில் நீர் வடிந்தது. ஊரே தூங்கிக் கொண்டிருந்த வேளையில் நான் மட்டும் ஏன் அழுது கொண்டிருக்கிறேன் என்று எனக்கே புரியவில்லை.

பத்தாம் திருநாள் காலை........ பலி பூசை முடியவில்லை. பெரிய அளவில் நடந்த திருப்பலி முடிந்த பத்து நிமிடத்தில் கோவில் மைதானம் களையிழந்து போனது.

மதியம் தேரை தள்ளிக் கொண்டு போக ஆளில்லாமல் போக, ஆலய வளாகத்தில் வளையல் வாங்கிக் கொண்டிருக்கும் பெண்களை வேண்டு மென்றே இடித்துக் கொண்டே இளைஞர்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். ஒரு சில பெரியவர்கள் வழியில் நின்ற மாதா அன்னையின் தேரை இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

இரவில் சில இளைஞர்கள் சேர்ந்து 'ஒலியும் ஒளியும்' அமைப்பில் நாடகம் போட அதைப் பிடிக்காத ஒரு சில நண்பர்கள் எதிர்ப்பாக திடீரென்று சிவாஜியின் 'சிவந்தமண்' திரைப்படம் போட ஊர் மக்கள் சிதறி இங்கு மங்கும் ஓடி திரைப்படத்திற்காக இடம் பிடிக்க என் கால்கள் திடீரென்று தளர்ந்து போய் வீடு திரும்பின.

"ஏண்டா வந்து பத்து நாள் கூட நிற்கவில்லை. கிளம்பி விட்டாய்." என்றார் அப்பா.

"எவ்வளவு நாள் கழித்து ஊருக்கு வந்திருக்கிறாய் ராஜன். இன்னும் சில நாள் நின்று விட்டு போயேன்" என்றார்கள் அம்மா.


"இல்லை அம்மா எனக்கு வேலை இருக்கிறது. ஸ்டெல்லாவும் குழந்தைகளும் கொஞ்ச நாள் நின்று விட்டு டில்லிக்கு கிளம்புவார்கள்" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டேன்.

இரயில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஊரில் திருவிழா பார்க்க வேண்டும் என்ற ஆசையில் ஓடி வந்த நான்... என்னைப் பார்த்தே சிரிக்க ஆரம்பித்தேன். இனி எனக்கு திருநாள் பார்க்க ஆசை வருமா?, என்று மனதிடம் கேள்வி கேட்கிறேன்.

இரயில் ஓடிக் கொண்டிருக்கிறது. இம்முறை டில்லியை நோக்கி. நிலாவோடு டில்லி ஊரை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறேன்.

இரயில் ஓடிக் கொண்டிருக்கிறது. நிலாவும், நினைவும் கூடவே பயணம் கொண்டிருக்கிறது.

**கவிமணி. இரஜகை நிலவன்,** மும்பை
....................
Philip George Chandran, M.A., M.H.M.
A-103, SWASTIK PARK, NEAR "H" WARD OFFICE
UMESH NAGAR, RETHI BUNDER ROAD
DOMBIVLI (WEST), THANE, MUMBAI – 421 202
MOBILE NO. 9920454827 -- E-mail: georgechandran1@gmail.com



12

## கோடை கொடும்பனி

குளிர், வசந்தம், கோடை, இலையுதிர் என்று நான்கு பருவங்களும் எப்படி வந்தன எப்படிக் கடந்து போயின என்று தெரியாமல் காலம் கடுகி நடந்தது.

இந்த நாடுகளில் பருவ காலங்களை அது அதற்கேற்ப அனுசரித்துக் கொண்டாடுவது என்பது ஒரு நல்ல பக்கம். அதற்குள் வியாபாரம் ஒளிந்திருந்தாலும் இங்கு பருவங்களைக் கொண்டாடுதல் என்பது ஒரு பொதுப் பண்பாடாகவும் இருக்கிறது. எந்தக் கால நிலையிலும் உழைப்பு என்பதில் மக்களின் வீரியம் குறைந்து விடாது.

இந்த நேரத்தில் எங்கள் மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் முன்னால் வந்து நிற்கிறார்.

கோடை கொடும்பனி மழை குளிரை அஞ்சி
கோடிப் புறத்தினில் ஒதுங்கி விடலாமோ
ஆடை களைந்து தலை மீதினில் அணிந்தோம்
ஆழக் கடல் தயிர் எனக் கடைய வந்தோம்
ஏலேலம் ஏல வலை ஏலேலம் ஏலோ
ஏலேலம் ஏல வலை ஏலேலம் ஏலோ


கனடியச் சூழலில் என் பாடல் இப்படித் தொடர்கிறது.

வின்ரர் கடுங்குளிர் என்று விறைப்போமோ
வாரிக் குவிப்போம் வெண்பனிக் குவியலை
காலங் கடப்போம் கடும் உழைப்பாலே
கலங்கோம் கடுகளவும் சேர்ந்து மகிழ்ந்தாடுவோம்
ஏலேலம் ஏல வலை ஏலேலம் ஏலோ
ஏலேலம் ஏல வலை ஏலேலம் ஏலோ

அந்தந்தக் காலங்களுக்கு உரிய உடுப்புக்கள், விளையாட்டுக்கள் என்று குழந்தைகளின் குதூகலம் பெரிது.

ஆனால் இந்தக் கால மாற்றங்களில் குளிர்காலம் எனக்கு மிகவும் கடுமையான காலமாகவே கடந்து போகும். என் இதயமே. சொந்தச் சகோதரங்கள் போல - நல்ல நண்பர்கள் போல எப்பொழுதும் கொடுத்து வாங்கும் இறுக்கமான நிரந்தரமான உறவு உனக்கும் சுவாசப்பை எனும் நுரையீரலுக்கும் (Lungs) இருக்கிறது என்பது முன்பும் குறிப்பிடப்பட்டது...

அங்குதான் பிரச்சினை வருகிறது. நான் ஒரு ஆஸ்துமா (Asthma) நோயாளி. ம்.



ஒன்றாய்ப் பலவாய் பல்லுருவமாய்.. இன்னும் பலவாய் நோய்கள்...

இவற்றையெல்லாம் தாங்கும் சுகதேகி என்றும் என்னை சொல்லலாம்...

கடுங் குளிரால் ஏற்படும் ஒவ்வாமை (Alergy) நுரையீரலுக்குள் அதாவது சுவாசப்பையுக்குள் சளி அடைப்புக்களை உண்டாக்குவதால் விரும்புகிற மாதிரி போதிய பிராண வாயுவை இதயமே, நீ பெற்றுக் கொள்ள முடியாது போகின்றது.

பாட்டிலும் இசையிலும் அதிக விருப்பம் உள்ள ஒருவன்.

இந்தக் குளிர் காலங்களில் என் சுவாசத்திலிருந்து எப்போதும் ஒரு தம்புராவின் சுருதி கேட்டுக் கொண்டே இருக்கும் (Wheezing).

குளிர் கடுமையாகி சுவாசத்தை அடைக்கும் போது சுருதிப்பிழைகளை அது உண்டாக்கி விடும். இதயமே, போதிய பிராணவாயுவைப் பெறாமையால் பல பிரச்சினைகளுக்கும் நீ உள்ளாக வேண்டி ஏற்படுகிறது. இதுவே பல்வேறு பிரச்சினைகளை உனக்கு ஏற்படுத்துகிறது.

இதயச் செயலிழப்புக்கு கூட (Cogestive Heart Failure) இது காரணமாகி விடுகிறது.



ஒழுங்கற்ற இதயத் துடிப்பு (Irrecular Heart Beat) வேகமான இதயத்துடிப்பு (Rapid Heart Beat-Arrhythmia) மூளைக்கு போதிய குருதி போகாமல் இருப்பதால் உண்டாகும் விளைவுகள் என்று பல்வேறு விளைவுகள் கடுமையான ஆஸ்த்மாவின் தொடர் விளைவுகள் ஆகி விடுகின்றன.

சரி. குளிர்காலம்தான் இப்பிடி என்றால் வசந்த காலங்களில் என் வசந்தங்கள் எப்படி என்ற கேள்விகளும் கோடைகாலக் கொண்டாட்டங்கள் எல்லாம் எப்படி என்ற கேள்விகளும் இப்போது எழலாம்.

ஊரில் திருவிழாக்கள் வருவது போல கோடை வந்துவிட்டால் இங்கு தமிழர்களின் கலைவிழாக்கள் பெரும் அமளி துமளியாக நடைபெறும். ஒருபுறம் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் மறுபுறம் இரண்டுபட்ட ஊர்ச் சங்கங்கள், நாட்டுக்கு உதவுதல் - தேசிய போராட்டத்துக்கு உதவுதல் என்ற பெயரில் உலகத் தமிழர் அமைப்பு இன்னொருபுறம் முன்னாள் தொழில் சார் இந்நாள் சங்கங்கள் என்றெல்லாம் இவைகளின் பேரால் விழாக்கள் அமர்க்களப்படும்.

இந்தச் சங்கங்களைச் சார்ந் தோர் கேட்டுக் கொள்ளும் போது நானும் எனது துணைவியாரின் நடனக் கல்லூரி மாணவர்களும் இவற்றில் கலந்து கொள்வதுண்டு.

எனக்கென்று ஒரு முழு நேர நிரந்தர வேலை இல்லாத போதும் இவை எனது நேரங்களை விழுங்கின. சம்பளம் இல்லா உத்தியோகந்தான். என்றாலும் சந்தோசங்கள் உண்டு.

இதயமே உன்னை விட்டுவிட்டு எங்கேயோ போகிறேன் என்று நினைக்காதே. இந்தச் சந்தோசங்கள் எல்லாம் உன்னையும் சந்தோச மாக வைத்திருப்பதற்குத்தான்.

சதா வருத்தங்களை நினைத்துக் கொண்டிருந்தால் ஒன்றும் ஆகப்போவதில்லை.

இதயங்களின் இணைவுதான் காதல் அல்லது திருமணம் என்று சொல்லுவார்கள். இந்த இதயங்கள் ஆரோக்கியமாய் இருப்பது நல்லது.

கலியாணங்களை ஒழுங்குபடுத்தும் போது அறிவியலுக்கு ஒவ்வாத சாதகப் பொருத்தங்களை பார்ப்பதை விட்டு விட்டு திறந்த மனத்தோடு முக்கிய மருத்துவப் பிரச்சினைகள் இருந்தால் இருவரதும் நலன்கள் பற்றியும் கலந்துரையாடுவது நல்லது.

நான் சாதகப் பொருத்தம் பார்க்கவில்லை. நம்பிக்கையும் இல்லை. ஆனால் என் துணைவியாரின் குடும்பத்தினர் பார்த்தார்கள்.

எத்தனையோ வீதக் கணக்கில் பொருத்தம் என்றும் சொன்னார்கள்.

எந்த விண்ணனைக் கொண்டு சாதகம் பார்த்தாலும் நூறு வீதம் பொருந்தியிருந்தாலும் நிஜ வாழ்வில் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். இதற்கும் சாத்திரிமார் சாட்டுக்களை வைத்திருக்கிறார்கள்.

என் துணைவியாருக்கும் எனக்கும் இடையே ஏதோ பிரச்சினைகளாக்கும் என்று நீங்கள் நினைப்பது தெரிகிறது.

பிரச்சினைதான். கோடை காலத்தில் வீட்டில் குளிரூட்டி (Air Conditioner) பற்றிய பிரச்சினை.

அதென்ன பிரச்சினை...???



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



# நேற்று ஆடு, இன்று கோழி, நாளை ???????

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்

சரித்திர காலம் தொட்டே இந்திய இலங்கை கடற்பரப்பில் பாக்(கு) நீரிணை வழியாக கடத்தல் என்பது சர்வசாதாரணமாக இருந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பொருட்கள் கடத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று அப்போதிருந்த சென்னை மாகாண ஆளுநர், இந்தியாவின் பிரிட்டிஷ் அரசின் கவர்னர் ஜெனரலுக்கு கடிதம் எழுதிய வரலாறெல்லாம் உண்டு. இதற்கான ஆவணங்களை லண்டனிலுள்ள பிரிட்டிஷ் நூலகத்தில் காணலாம். இரு நாடுகளுக்கும் இடை-யேயான தூரம் மிகவும் குறைவு, நாட்டுப் படகுகளின் போக்குவரத்து அதி-கம், மீனவர்கள் அன்றாடம் கடலுக்குச் செல்கிறார்கள், இரு நாட்டு மீனவர்களும் கடத்தலுக்கு முகவர்களாக இருந்து நடுக்கடலில் பண்டமாற்று செய்கின்றனர் என்றெல்லாம் அந்த ஆவணத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

அந்த ஆவணங்களின்படி இந்தியாவிலிருந்து நறுமணப் பொருட்கள், மிளகு, மஞ்சள், நூல், துணி வகைகள், முத்து போன்றவையும், இலங்கையிலிருந்து மரகதம் மற்றும் மாணிக்க கற்கள், சினமன் எனப்படும் கருவாப்பட்டை போன்றவையும் பெருமளவில் கடத்தப்பட்டதை அறிய முடிகிறது. பின்னர் காலத்திற்கேற்ற வகையில் தங்கம், போதைப் பொருட்கள், தடை செய்யப்பட்ட பொருட்கள், இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது மருந்துகள், டீசல், வாகனங்கள் மற்றும் வாகனங்களின் உதிரிப் பாகங்கள் போன்றவை கடத்தப்பட்டன. அண்மைக்காலமாக இந்தியாவின் மேற்கே அரபிக் கடல் பகுதியில் தொடங்கி இந்து மகா சமுத்திரத்தின் தென் முனை வரை சர்வதேச அளவில் போதைப் பொருட்கள் கடத்தலுக்கான முக்கியப் பாதையாக இருக்கிறது என்று ஐ நாவின் போதை தடுப்பு அலுவலகமும் சர்வதேச பொலிஸ் அமைப்பான இண்டர்போலும் கவலையும் எச்சரிக்கையும் விடுத்துள்ளன. இதில் முக்கியமாக ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தல் குறித்த கவலைகளே அதிகமாகவுள்ளன.

ஆனால் இந்த வாரத்தில் கடத்தலில் பிடிபட்ட பொருட்கள் சற்று துணுக்குறச் செய்து பல கேள்விகளை எழுப்புகிறது. இலங்கையில் நெருக்கடிகள் அதிகரித்து வரும் வேளையில், இலங்கையில் இருந்து இந்தியா வழியாக ஆட்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருகிற சூழலில் மறுமார்க்கமாக இந்த கிழமை இலங்கை கடற்படையின் கண்களின் பட்டு பறிமுதல் செய்யப்பட்டவை ஆடுகளும் கோழிகளும். இந்த ஆடுகளும், கோழிகளும் எல்லை தாண்டும் தீவிரவாதிகளாகவே பார்க்கப்படுகின்றன.

இலங்கை அரசின் திட்டமிடப்படாத பொருளாதார கொள்கையின் காரணமாக நாடே அழிவுப் பாதையில் செல்வதனால் வாழ்வியலிற்காக கடல்கடந்து தப்பிச் செல்லும் நிலைமையில் மக்களின் மனநிலை காணப்படுகின்றது. இதற்காக பண வசதி ஏற்படுத்த முடிந்தோர் பெரிய நாடுகளிற்கும் முடியாதவர்கள் தமிழ் நாட்டிற்கும் தப்பிச் செல்கின்றனர். அதாவது தமது வசதிக்கேற்ற வாழ்வைத் தேடுகின்றனர்.

இதற்காக மக்கள் தமிழ் நாடு நோக்கிப் படையெடுக்கும் சூழலில் எஞ்சியிருப்போரின் வாழ்வாதார மேம்பாடு என்பதற்காக தற்போது ஆடு, மாடு, கோழிகளும் தமிழ் நாட்டில் இருந்து சட்ட விரோதமாக எடுத்து வரப்படுகின்றன. ஏற்கனவே மஞ்சள், பசளை, கிருமிநாசினிகள் என எடுத்து வரப்பட்டன. போர்க் காலத்தில் எரிபொருட்களும் எடுத்து வரப்பட்டன. தற்போது விலங்குகள், பறவைகளும் எடுத்து வரப்படுகின்றது.

கடந்த ஆண்டில் எறும்புத்திண்ணி முதல் பந்தயப் புறா வரைக்கும் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கும் கடத்தப்பட்டன. தற்போது வாழ்வியலிற்கான வாழ்வாதார மேம்பாடு கருதிய பொருட்கள் என்ற பட்டியல் பொருட்கள் கடத்தப்பட்டு தினமும் மன்னாரில் கடற்படையினரிடம் சிக்குகின்றன. அவற்றில் கடற்படையினர் தமது தேவைக்காக எடுத்துக்கொண்டது போக மற்றவை பிடிபட்டதாகக் காட்டப்பட்டு நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன.

சட்டத்திற்கு அப்பால் வயிற்றுப் பசிக்காகவும் வாழ்வாதார மேம்பாடு, அரிய வகை இனம் என்ற ரீதியில் ஆடுகள், கோழிகள் கடத்தப்பட்டாலும் இவற்றின் மூலம் பாரிய ஆபத்து இருப்பதாக தொழில்சார் வல்லுநர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப பீட உயிர் முறைமைகள் தொழில் நுட்பத் துறையின் துறைத் தலைவரான கார்த்திகேசு ஜெயவாணன் உதயனிடம் கருத்து தெரிவிக்கையில், “1987 ஆம் ஆண்டு ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்தபோது அதிலிருந்த சுமார் ஒரு லட்சம் படைக-ளின் உணவிற்காக இந்தியாவில் இருந்து பெருந்தொகை ஆடுகள் கப்பல்கள் மூலம் ஏற்றி வரப்பட்டன. அவ்வாறு ஏற்றி வரப்பட்ட ஆடுகளின் தாக்கம் 35 ஆண்டுகள் கடந்து இன்றும் போக்க முடியவில்லை. அதாவது விஷச்செடியான பாதீனியம் இந்திய ஆடுகளின் மூலமே எமது பகுதியில் பரவியது” என்றார்.



இதேநேரம் அந்த ஆடுகளினால் தமது மக்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்பட்டது என்றும் ஜெயவாணன் கூறுகி-றார். “அதாவது 1987ஆம் ஆண்டுவரை இலங்கையின் விலங்குகளில் இல்லாத கோமாரி என்னும் நோய் வடக்கு கிழக்கில் உள்ள கால்நடைகளிற்குப் பரவி 45 ஆயிரம் வரையிலான ஆடுகளும் இறக்கக் காரணமாக இருந்தன. எனவே இவற்றையும் ஞாபகம் வைத்து எவ்வாறான அரிய வகை விலங்குகள் எடுத்து வரப்பட்டாலும் ஒரு மாத காலம் எமது நாட்டு விலங்குகள் அருகில் வராமல் தனிமைப்படுத்தி விலங்கு வைத்திய நிபுணர்களின் ஆலோசனையின் பின்பே கிரமங்களில் நடமாட விட வேண்டும். ஏனெனில் சட்டபூர்வமாக கொண்டு வந்தால் அவை விலங்கு தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு உட்பட்டு சோதனையின் பின்பே உள்ளே அனுமதிக்கப்படுவது வழமையாகும்” என்று தெரிவித்தார்.

அனைத்தையும் ஒப்பு நோக்குகின்றபோது சட்டத்திற்கும் அப்பால் உரிய முறைமையில் கொண்டு வரும் விலங்குகள், பறவைகள்தான் பாதுகாப்பானது ஏனையவையில் அதாவது இவ்வாறு திருட்டுத்தனமாகக் கொண்டு வரப்படுபவற்றில் ஆபத்துக்களே அதிகம் என்றும் அவர் மேலும் கருத்து வெளியிட்டார்.

இலங்கையில் நிலவும் கொடிய பொருளாதார நெருக்கடி நிலை-மையின் காரணமாகப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவும் இலங்கையில் தட்டுப்பாடான பொருட்கள் என்னும் பெயரில் தமிழ்நாட்டில் இருந்து எடுத்துவரப்படும் பொருட்களிலும் ஆபத்து சூழ்ந்திருப்பதாகவே துறை சார் வல்லுநர்கள் சுட்டுக் காட்டுகின்றனர்.

இதேநேரம் இவ்வாறான உயிரினங்கள், பொருட்கள் அகப்படுகின்றபோதும் நூற்றுக் கணக்கான கிலோ கஞ்சா மட்டும் எவ்வாறு உள்ளே எடுத்து வரப்பட்டு இளம் சந்ததிகள் சீரழிக்கப்படுகின்றனர் என்பதற்கு எவரிடமும் பதில் கிடையாது.

இலங்கையின் பொருளாதார நிலவரம் தொடர்பாகப் பிரதமரே கட்டியம் கூறிவிட்ட காரணத்தால் உண்மையில் இவ்வாறான கடத்தல்கள் மேலும் அதிகரிக்கவே செய்யுமே அன்றி குறைவடையாத போதிலும் கடற்படையினரின் கண்காணிப்பினால் ஓரளவு குறைக்க முடியும் என ஆட்சியாளர்கள் நம்புகின்றனர்.

இதேநேரம் ஆடுகளை ஏற்றிவந்தனர் என மன்னாரில் ஓர் படகோட்டியும் இவற்றைக் கடத்தினர் என்ற பெயரில் ராமேஸ்வரத்தில் ஒருவரும் இனம் காணப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடத்தல் விஷயங்கள் இவ்வாறு இருக்க, எடுத்து வரப்பட்ட ஆடுகளும் கோழிகளும் பாரம்பரிய சண்டைக்களிற்கு பயன்படுத்தும் இனங்களாகவே காணப்படுவதோடு எடுத்து வரப்பட்ட ஆடுகள் சுமார் 3 லட்சம் ரூபாவும் கோழிகள் 20 ஆயிரம் ரூபாவும் உள்ளூர் சந்தை நிலவரமாகக் காணப்படுவதாக இந்த துறையில் நாட்டமுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.



இதேநேரம் மன்னரில் பிடிபட்ட ஆடிகளின் உடல்நிலை, நோய் நிலை தொடர்பில் ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்னார் நீதிமன்ற கட்டளையிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டுச் சட்டங்களின்படி இரு நாடுகளுக்கு இடையே உயிர் பொருட்கள் கடத்தப்படுவது குற்றமாகும். இதில் செடி கொடிகள், கால்நடை, அரிய விலங்குகள், இரசாயன உயிரிகள் போன்றவை அடங்கும். இவை கடத்தப்படுவது முற்றிலும் தடை செய்யப்பட்டிருந்தாலும், ஏதாவது காரணங்களுக்காக ஒரு நாட்டிற்குள் எடுத்துவர வேண்டுமென்றால், உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, பரிசோதனைகளுக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்படும்.

உதாரணமாக ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு விமானத்தினுள் வழங்கப்படும் உணவான ஆப்பிள், வாழைப்பழம் போன்றவற்றைக் கூட எடுத்துச் செல்ல முடியாது. அரை டொலர் மதிப்பில்லாத ஆப்பிள் பழத்தை எடுத்துச் சென்றவர்களுக்கு ஆஸ்திரேலிய சுங்கத்துறையினர் விமான நிலையத்தில் நூறு டொலர்கள் வரை அபராதம் விதித்ததும், வீட்டுத்தயாரிப்பு என்று கூறி எடுத்துவரப்பட்ட கருவாட்டில் சில கிருமிகள் இருந்தன என்று கூறி அதை எடுத்துவந்த வியட்நாம் பெண்ணொருவருக்கு ஆஸ்திரேலியாவில் நுழைய வாழ்நாள் தடை விதிக்கப்பட்டத்தையெல்லாம். ஆனால் கடவுச் சீட்டோ அல்லது உரிய விசாவோ இன்றி படகில் எல்லை தாண்டி இலங்கையினுள் நுழைந்துள்ள இந்த ஆடு மற்றும் கோழிகளை என்ன செய்வது என்பதே இப்போதுள்ள பெரிய கேள்வி!

## கடந்தவையும் கடப்பவையும் (34)

- உமா மோகன்

*உக்ரைன் யுத்தம் உக்கிரம் தான் - அதையொரு*
*பக்கமாக வைத்து விட்டு பழையபடி*

*அந்த பள்ளிக்குள் செல்லுவோம் மெள்ளமாய் - புதிதாய்*
*வந்த பிள்ளைக்கு நல்லபடி உபசரிப்பு - ஏன்?*

*மதிய உணவுக் காலம் அது*
*புதிய ஆளாய் உலவியதால் எதிலும்*

*உரிமை எடுக்க தயக்கம் கொஞ்சம்*
*புதுமை அல்ல பழகியதே இடப்பெயர்வால்,*

*அடிக்கடி பள்ளிகள் மாறும் பிள்ளைகட்கு - பல*
*நெருக்கடிகள் வருவது வழமை தானே - ஆனாலும்*

*அங்கிருந்த மாணவர்கள் எல்லோரும் நல்லவர்கள்*
*பெண்கள் அன்றி ஆண்களும் தான் - அதிலும்*

*'பூஸ்' எனும் பட்டப்பெயர் கொண்ட ஒருவர்*
*நேராக அதிகம் அவர் பேசமாட்டார்*

*மதிய உணவு வேளைகளில் அதை*
*பெறுவதற்கு ஆர்வமின்றி இருந்தாலும் அக்கறையாய்*

*தேடிவந்து கொடுப்பதை ஒரு கடமையென*
*வாடிக்கையாய் செய்வதில் மனநிறைவு அவருக்கு*

*வாங்கி அதை உண்பதற்கு கூச்சம்தான் - ஆனாலும்*
*அங்கு தருவதை வேண்டாம் எனச்சொல்வாரில்லை*

*வாசனைச் சுண்டலும் தேனொழுகும் பானுமென*
*போசனம் அன்றன்றைக்கு வகுத்தபடி மாறிவரும்*

*அத்தனையும் சத்துணவு, இல்லாத பிள்ளைகட்கு*
*எத்தனை உத்வேகம் கொடுத்திருக்கும் அன்று*

*மெத்தக் கொழுப்புடையோர் வீண்விரையம் செய்ததாலோ*
*அத்தனையும் நின்றுபோச்சு சில காலம் - மீண்டும்*

*உலகம் உதவ மறுபடி வந்தது - இன்று*
*சிறுவர் பிரிவினர் மட்டுமே நலனுற - அன்று*

*போன மதிய உணவுமுறையதை இன்றும்*
*காண முடியிது கொஞ்சமேனும் - முடியுமா*

*உவகையோடு உணவு கொடுத்தோனைக் காண்பதற்கு?*
*சிவனே என்று அவன் இருப்பான்*

*சிலநாட்கள் கழிந்தபின் தான் அவன்*
*சிவலோகம் போனான் என அறிந்ததுண்டு*

*பரீட்சையும் எடுக்கவில்லை, அன்று அவன்*
*போரிற்காய் ஆயுதமும் ஏந்தவில்லை - பசுவின்*

*சுபாவம் கொண்ட அவன் - அதற்கு*
*உணவளிக்க புல் தேடிச் சென்றபோது*

*'செல் பட்டுச் சின்னாபின்னம் ஆகிவிட்டான்' - இந்த*
*சொல் கேட்டு நின்றநாளை மறப்பதில்லை - அப்*
*பள்ளியை நினைக்கும் வேளை.....*

# ஜீவன் முக்தி 583

*(சென்ற வார தொடர்ச்சி...)*

என்னுடைய அனுபவத்தில் இருந்து சொல்கிறேன் 'இயந்திரங்களை வைத்தே எல்லாவற்றையும் அளவிட முடியாது.'

நம் தீர்க்கத்தைத் தாண்டிய சத்தியங்களைத் தாண்டிய விஞ்ஞானத்தால் புரிந்து கொள்ள முடியாது. மூன்று காலத்திலும் விழிப்புணர்வை வைப்பதைப் பற்றி எப்படி விஞ்ஞானத்தால் புரிய வைக்க முடியும்? விஞ்ஞானத்தால் புரிந்து கொள்ள முடியாது

மூன்று காலத்திலும் உங்களின் விழிப்புணர்வை வைத்தீர்கள் என்றால் எதையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை வந்து விடும். உங்களின் மனத்தையும் உணர்வையும் ஏற்றுக்கொள்வீர்கள். பிரம்மாண்டமான ஏற்றுக் கொள்ளும் தன்மை வந்துவிடும். உங்களோடு நீங்கள் போட்டுக் கொள்கிற சண்டை நின்று போகும்.

அது நின்றாலே நீங்கள் மிகப்பெரிய விடுதலை பெறுவீர்கள். உங்கள் சக்தி வேறு ஒரு திசையை நோக்கி பொங்கிக்கொண்டு இருக்காமல் சண்டையிடாமல் தனக்குள்ளேயே உதித்த இடத்திலேயே ஒடுங்கிவிடும்.

இந்தச் சத்தியத்தை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். எந்த எண்ணம் வந்தாலும் அது எந்தக் காலத்தோடு தொடர்புடையது என்று கண்டுபிடியுங்கள் அது எந்தக் காலத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும் அதில் விழிப்புணர்வோடு இருங்கள். கடந்த காலமாக இருந்தாலும் அதனோடு விழிப்புணர்வாக இருங்கள். எதிர்காலமாக இருந்தாலும் அதனோடும் விழிப்புணர்வாக இருங்கள். அவ்வளவுதான்.

எத்தனை எண்ணங்கள் வந்தாலும் அதனோடு இருங்கள். எதையும் அடக்காதீர்கள். அழிக்காதீர்கள். மறுக்காதீர்கள். நிகழ்காலத்திற்கு வரமுயற்சி செய்யாதீர்கள். இதைச் செய்யச் செய்ய ஆனந்தம் ஊற்றெடுக்கும். நீங்கள் உதிக்கக் காரணமாயிருந்த பூரணத்துவத்திற்குள் ஒடுங்குவீர்கள்.

இந்தச் சொற்பொழிவைக் கேட்டு முடித்ததும் ஒரு அன்பர் இப்படிக் கேட்டார் 'பிரமிப்பாக இருக்கிறது இதுவரை நாங்கள் கேட்டிராத சத்தியம் இது.

இதுவரை நிகழ்காலத்தில் இருங்கள் என்றுதான் நாங்கள் கேட்டிருக்கிறோம். இப்பொழுது நிகழ்காலத்தில் இருப்பது சாத்தியமில்லாதது என்று கேட்கிறோம். ஏன் இந்த இரண்டுவிதமான பதில்கள்?'



காரணம் இரண்டுவிதமான நிலைகளில் இருப்பவர்களுக்கும் சொல்லவேண்டிய பொறுப்பு என்னிடம் இருக்கிறது.

எப்போதுமே இரண்டு பதில்கள் உண்டு. ஒன்று சமூக ரீதியான பதில். இன்னொன்று ஆழ்ந்த தேடுதல் உடையவர்களுக்கான பதில் பக்தர்களுக்கான பதில்.

நிகழ்காலத்திலேயே வாழுங்கள் என்பது இறந்த காலத்தின் பிடியிலிருந்தும் எதிர்காலத்தின் உசுப்பல்களிலிருந்தும் உங்களைக் காப்பாற்றி மன ஆரோக்கியத்தைத் தருவதற்கான பதில். முதல் நிலையிலிருப்பவர்களுக்கான பதில் மற்றும் தீர்வு.

நீங்கள் ஞானத்தைத் தாண்டிய ரசத்தைத் தேடும் தீவிரமான பக்தராக இருந்தால் உங்களுக்கான பதில்தான் நிகழ்காலத்தில் வாழ்வதென்பது சாத்தியமேயில்லாத பொய்

இந்த இரண்டையும் சொல்ல வேண்டிய பொறுப்பு என்னிடம் இருப்பதினால் இரண்டையும் சொல்கிறேன். எந்த நிலையில் இருக்கிறீர்களோ அந்த நிலைக்கு தேவையான சத்தியத்தை எடுத்துக்கொண்டு மேம்படுங்கள்.

**ஞானிகளின் ரகசியம்**

- **ஞானிகள் அதிசயங்களை நிகழ்த்துவார்களா? நான் செல்வந்தனாக வேண்டும்**


  ஞானிகள் அதிசயங்களை நிகழ்த்துவது இல்லை. ஞானிகளின் சாந்நித்யத்தில் அதிசயங்கள் தானாகவே நிகழ்கின்றன.

- **ஞானிகள் தவறே செய்ய மாட்டார்களா? அவர்களின் செயல்கள் எதைக் குறிக்கிறது?**

  சரி, தவறு என்ற விதிகளெல்லாம் சாதாரண மனிதர்களுக்குத்தான். 'நான்' எனும் அகங்காரத்திலிருந்து பிறக்கும் செயல்கள் நல்லதாகவே தோன்றினாலும், அதனால் சிறிதளவாவது தீமை உண்டாகும். எண்ணங்களற்றவர்கள் ஞானிகள். ஞானியின் செயலால் ஒருவர் இறக்க நேரிட்டாலும் அதனால் நன்மையே நிகழும்.

  ஒரு ஜென் ஞானி இவ்வாறு சொல்லியிருக்கிறார், "ஒரு ஞானி கொலை செய்தாலும் அச்செயல் அந்த ஞானியின் ஆழ்ந்த கருணையின் வெளிப்பாடே!" எண்ணமற்ற நிலையில் இருந்து செய்யும் செயல்கள் அனைத்தும் நிச்சயமாக நன்மையைத்தான் தரும்.

## நாரதரே ஞானத்தைத் தாண்டிய ரசத்தை தேடியவர்தான்





நாரதரை மட்டும் அல்ல பலரையும் ஈர்த்த ஒன்று இந்த ஞானத்தைத் தாண்டிய ரசம். நாரதர் ஒரு ஞானி அனுபூதிமான். நிகழ் காலத்திலேயே வாழ முயற்சி செய்தவர் நாரதர். அதில் சில துளிகள் வெற்றியும் கண்டவர்.

ஏழு சரீரங்களில் உள்ள எல்லா சம்ஸ்காரங்களையும் சுத்திகரிக்க முயற்சி செய்தவர். அதிலும்கூட வெற்றியைக் கண்டவர். நிகழ்காலத்திலேயே வாழ முயற்சித்து வாழ்ந்தார் ஏழு உடல்களை ஆரோக்கியமாக்கியும் பார்த்தார். அப்படிப் பார்த்த பின்புகூட அவரிடம் ஏதோ ஒரு ரசம் இல்லாதிருப்பதை மிக அது அவரை மிகவும் வருத்தியது.

இந்த நிலையைத்தான் அதாவது பட்டறிவின் இயலாத் தன்மை என்று அழைப்பார்கள்.

அதனால்தான் முன்னோர்கள் வெறும் ஞானம் மட்டுமே போதாது ஞானத்தைத் தாண்டிய ரசமும் தேவை என்று சொல்கிறார்கள். இதை உணர்ந்து காடு மேடெல்லாம்அதைத் தேடி அலைந்து, அந்த ரசத்தை அனுபவித்த பின்னரே நாரதர் பூர்ண திருப்தியை அடைந்தார்.

அனுபவிக்கும் விதமே அடையப்படும் அந்த தருப்தியை நிர்ணயிக்கிறது. மயான அமைதி வேறு. பூங்காவன கொண்டாட்டம் வேறு.



நிகழ்காலத்திலேயே வாழ முயற்சி செய்யும்போது, நீங்கள் காலச்சக்கரத்திலேயே வாழ்கிறீர்கள்.

வெறுமனே ஞானமடைவதால் அமைதியை அடையலாம். ஞானத்தை அடையலாம். மற்றவர்களுக்குப் போதிக்கலாம். ஆனால் கொண்டாட்டமான வெளிப்பாடு இருக்காது. கொண்டாடுவது இன்னும் அருமையான வெளிப்பாடு. புத்தர் அடைந்த ஞானமும் கிருஷ்ணர் அடைந்த ஞானமும் ஒன்றுதான். ஆனால் அவர்களின் வெளிப்பாட்டை ஒன்று என்று சொல்ல முடியாது.

நாரதரைப் போன்று பலர் இருக்கிறார்கள். 'பல வருடமாக நான் தவம் செய்கிறேன். எனக்கு எல்லாச் சாஸ்திரங்களைப் பற்றியும் நிறையவே தெரிகிறது. இருந்தும் எதையோ இழக்கிறேனே?' என்று சொல்பவர்கள் இவர்கள். இவர்கள் அடையவேண்டியது ஞானத்தைத் தாண்டிய ரசம்.

**நிகழ்காலத்தில் இருப்பது சாத்தியமல்லல!**

இந்தச் சொற்பொழிவைக் கேட்டு முடித்ததும் ஒரு அன்பர் இப்படிக் கேட்டார், "பிரமிப்பாக இருக்கிறது இதுவரை நாங்கள் கேட்டிராத சத்தியம் இது.

இதுவரை 'நிகழ்காலத்தில் இருங்கள்' என்றுதான் நாங்கள் கேட்டிருக்கிறோம். இப்பொழுது 'நிகழ்காலத்தில் இருப்பது சாத்தியமில்லாதது' என்று கேட்கிறோம்.

ஒரு கேள்விக்கு எப்போதுமே இரண்டு விதமான பதில்கள் உண்டு. ஒன்று சமூக ரீதியான பதில். இன்னொன்று ஆழ்ந்த தேடுதல் உடையவர்களுக்கான பதில், பக்தர்களுக்கான பதில்.

இந்த இரண்டு விதமான நிலைகளில் இருப்பவர்களுக்கும் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு என்னிடம் இருக்கிறது.

"நிகழ்காலத்திலேயே வாழுங்கள்." என்பது, இறந்த காலத்தின் பிடியிலிருந்தும் எதிர்காலத்தின் உசுப்பல்களிலிருந்தும் உங்களைக் காப்பாற்றி, மன ஆரோக்கியத்தைத் தருவதற்கான பதில். முதல் நிலையிலிருப்பவர்களுக்கான பதில் மற்றும் தீர்வு.

அதே நீங்கள் ஞானத்தை தாண்டிய ரசத்தைத் தேடும் தீவிரமான பக்தராக இருந்தால், உங்களுக்கான பதில்தான் "நிகழ்காலத்தில் வாழ்வதென்பது சாத்தியமேயில்லாத பொய்."

இந்த இரண்டையும் சொல்ல வேண்டிய பொறுப்பு என்னிடம் இருப்பதினால், இரண்டையும் சொல்கிறேன். உங்கள் நிலைக்குத் தேவையான சத்தியத்தை எடுத்துக்கொண்டு மேம்படுங்கள்.

## ஒரு ஞானியை விடவும் கொடுத்து வைத்தவர்கள்

நம். நம்முடைய வாழ்க்கையில் மனத்திற்கு முக்கியத்துவமே கொடுப்பதில்லை. அதாவது ஆனந்தமயமான மனத்தை வடிவமைப்பதற்கு நாம் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

நம் வாழ்க்கையில் எல்லாவிதமான துக்கத்திற்கும் ஆனந்தத்திற்கும் மனம் ஒரு மிகப்பெரிய காரணம் என்று நாம் நினைத்தே பார்ப்பதில்லை.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அதெப்படி மனத்தை ஆனந்தமயமான மனமாக வடிவமைக்க முடியும் என்று!

முடியும்! நிச்சயம் முடியும்!



அப்படி வடிவமைப் பதைத்தான் ஞானத்தைத் தாண்டிய ரசம் என்கிறோம்.

நிஜத்தைச் சொல்ல வேண்டுமானால் ஆனந்தமயமான மனத்தை வைத்து வாழ்பவர் ஒரு ஞானியைவிட ஆனந்தமயமான வாழ்வை வாழ்வார்.

ஞானி குரு என்பவர்கள் கரும்பாக மாறியவர்கள்.

ஆனால் ஞானத்தைத் தாண்டிய ரசத்தில் வாழ்பவர்கள் அந்தக் கரும்பின் இனிப்பை ருசிக்கும் எறும்புகள். எனவேதான் இப்படிச் சொல்வோம். "கரும்பைவிட எறும்புகளே கொடுத்து வைத்தவை. ஆனந்தமயமான மனத்தை ஒருவர் வடிவமைப்பதாலேயே அவர் தம்மை ஒரு கோபிகையாகக்கூட எளிதில் மாற்றிவிட முடியும்."

ஒரு உதாரணத்திற்கு...

நீங்கள் மருத்துவராக இருக்கிறீர்கள். உங்களுடைய தம்பி பொறியியல் வல்லுனராக இருக்கிறார். உங்களுடைய அண்ணன் வழக்கறிஞராக இருக்கிறார் என்றால் காரணம் என்ன?

மூன்று பேருக்கும் இருக்கிற வேறு வேறுவிதமான மனம் அவ்வளவுதான். உங்களுடைய மனம் மருத்துவ தொழிலைச் செய்வதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. உங்கள் அண்ணனுக்கு வழக்கறிஞர் தொழில் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. உங்கள் தம்பியின் மனம் இன்ஜினியர் தொழில் செய்வதற்காகப் பயிற்றுவிக்கப்பட்டு இருக்கிறது.

மனம் எப்படிப் பயிற்றுவிக்கப்பட்டு இருக்கிறதோ அப்படித்தான் வாழ்க்கை நடக்கிறது. நீங்கள் நினைக்கிறீர்கள் ஒரு வழக்கறிஞருக்கும் பொறியாளருக்கும் மருத்துவருக்கும் இருக்கும் வித்தியாசம் தொழிலில் உள்ள வித்தியாசம் என்று. 'தொழில்' அல்ல 'மனமே' வித்தியாசம்.

முக்கியமான ஒரு விஷயம் மனம் வித்தியாசப்படுவதால்தான் அவர்களுடைய செயல்முறைகள் வித்தியாசப்படுகின்றன. அதுபோலவே உங்கள் வாழ்க்கையில் மனம் வித்தியாசப்படும் பொழுது செயல்முறைகள் வித்தியாசப்படும்.

அதைப்போன்றே நீங்கள் வாழ்க்கையில் துக்கமுடையவர்களாக வாழ்கிறீர்களா மந்தமானவராக வாழ்கிறீர்களா இல்லை உற்சாகம் உடையவராக வாழ்கிறீர்களா என்பதும் வேறுபடும். இது மூன்றும் வேறு வேறுநிலைகள். நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எந்த நிலைக்கு வேண்டுமானாலும் போகலாம்.

இந்த மூன்று நிலைக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால் 'உங்களுடைய மனம்தான்'.

இன்ஜினியருக்கும் லாயருக்கும் இருக்கிற வித்தியாசம் என்னவோ அதேதான் ஆனந்தமாக இருப்பவருக்கும் துக்கமாக இருப்பவருக்குமான வித்தியாசம்.

துக்கமாக இருக்கிறவர்கள் "ஆனந்தமாக வாழ்பவர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள்" என்று நினைத்துக்கொள்கிறார்கள். கிடையாது!

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆனந்தமாக இருப்பது என்பது "ஒரு தெளிவான பயிற்றுவிக்கும் முறை".

இப்பொழுது பொறியாளராக இருக்கிறவர்கள் டாக்டர் எல்லாம் அதிர்ஷ்டம் செய்தவர்கள் என்று நினைப்பதில்லையே. அது மிகத்தெளிவான பயிற்றுவிக்கும் முறை. யாருக்கு வேண்டுமானாலும் சாத்தியக் கூறாகக்கூடிய ஒரு பயிற்றுவிக்கும் முறை!

அதேபோன்று ஆனந்தமாக வாழ்வது அதற்கான மனத்தைப் படைப்பது என்பதும் சாத்தியமாகக் கூடிய ஒரு வாழ்க்கை முறைதான். ஞானத்தையும் தாண்டிய ரசம் என்பதும் பூலோகத்தில் சாத்தியமாக்கப் படக்கூடிய ஒன்றுதான். இன்னும் சொல்ல வேண்டுமானால் பூமியில் மட்டும்தான் அது எளிதில் சாத்தியம்.

கனடிய செய்திகள்
Canadian News

# கலாநிதி வசந்தகுமார் கனடிய தமிழர் சமூகத்தின் ஒரு விசேட அடையாளமாகத் திகழ்ந்தவர்

## ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவிப்பு






"எம் மத்தியில் பல ஆளுமைகள்க நிறைந்தவராகவும் சமூகப்பற்றும் அனுபவப் பகிர்விற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட்டவருமான கலாநிதி வசந்தகுமார் கனடிய தமிழர் சமூகத்தின் ஒரு விசேட அடையாளமாகத் திகழ்ந்தவர். அவருடைய இழப்பினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு எமது சமூகம் நீண்ட போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியிருக்கும்".

இவ்வாறு, கனடாவில் பல ஆண்டு காலம் வாழ்ந்த வண்ணம் பல்வேறு துறைகளில் பிரகாசித்தவராக விளங்கியவரும் பொறியியலாளரும் "கொம்பியுரெக்" (Computek) தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் நீண்ட கால ஆலோசகராக விளங்கியவருமான கலா-நிதி தாம் வசந்தகுமார் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றிய கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் வர்த்தகப் பிரமுகருமான சாந்தா பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் திரு கென் கிருபா மற்றும் தற்போதைய உப-தலைவர் திரு அரிகரன் ஆகியோர் தொகுத்து வழங்கிய இந்த அஞ்சலி நிகழ்வில் பலர் உரையாற்றினர். அனைவரது உரைகளும் கலாநிதி வசந்தகுமார் அவர்களின் ஆளுமைகளைப் பறைசாற்றியவையாகவும் அவரது இழப்பு தமிழ்ச் சமூகத்திற்கு பாரிய நஸ்டத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை எடுத்துச் சொல்லுகின்றவையாகவே இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அங்கு அஞ்சலியுரையாற்றுகையில். ஆமரராகி விட்ட கலாநி-தி தாம் வசந்தகுமார் அவர்கள் வர்த்தகம் தொழில்நுட்பம் தலைமைத்துவம் ஆகிய துறைகளில் மட்டுமல்ல தமிழ்க் கலை-கள் தமிழரின் பண்பாடு ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்தியது மட்டுமல்லாது தனது பிள்ளைகளுக்கும் தமிழ் மொழி மீது பற்றையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த அரும்பாடு பட்டார். இதன் காரணமாகவே அவர் ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் நன்கு அறிந்த ஒருவராக விளங்கினார் என்றார்.

இறதியில் கலாநிதி தாம் வசந்தகுமார் அவர்களின் புதல்வர் கலாநிதி சேரன் அவர்கள் பதிலுரையாற்றினார். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு என்ற தலைப்பில் கனடாவில் நடைபெறவுள்ள தமிழ் மொழி வாரம் — 2022



தமிழ் மொழியின் வாழ்வே தமிழரின் வாழ்வு என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள தமிழ் மொழி வாரம் தொடர் நிகழ்வுகள் கனடாவின் ரொறன்ரோ மாநகரிலும் அதனை அண்டியுள்ள ஏனைய சிறு நகரங்களிலும் நடைபெறவுள்ளன. 26-06-2022 அன்று ஆரம்பமாகவுள்ள இந்த தமிழ் மொழி வாரம் தொடர் நிகழ்வுகளை நடத்துவதன் நோக்கங்கள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் ஆகியவை தொடர்பாக கனடாவில் உள்ள தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அறியத்தரும் நோக்குடன் 3ம் திகதி வெள்ளிக்கிழமை கனடா தமிழ்ச் சங்கத்தின் தலைமையகத்தில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

கனடா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு சுப்பிரமணியம் இராசரத்தினம் மேற்படி நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

மேற்படி தமிழ் மொழி வாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அமைக்கப்பெற்ற செயற்குழுவின் அங்கத்தவர்கள் பலரும் அங்கு கலந்து கொண்டு விபரங்களைப் பகிர்ந்து கொண்டனர். அங்கு கலந்து கொண்ட ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பத்திரிகைகளின் பிரதம ஆசியர்களும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

கனடா உதயன் பத்திரிகையின் சார்பில் அதன் பிரதம ஆசிரியரும் "யுகம்" வானொலி மற்றும் நினைவுகள்.கொம் ஆகிய ஊடகங்களின் நிறுவனர்களும் அங்கு கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து சந்திப்புக்களில் கலந்து கொண்டு செயற்பாடுகளில் பங்கெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு அனைவரும் சம்மதம் தெரிவித்தனர்.

இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

தமிழ் மொழி வாரம் - 2022
June 26th - July 2nd, Toronto, Canada
Inline image
தமிழ்மொழி வாரம்
தமிழ்மொழி வாரத்தினைச் சிறப்பாக முன்னெடுப்பதடற்காகச் செயற்குழு கூடி எடுத்த முடிவுகளிற் சில:

1. தமிழ்மொழி வாரம் 2022 இல் யூன் 26 முதல் யூலை 2 வரை இடம்பெறும்.
2. ஊடகங்கள் வாயிலாகப் பின்வரும் நோக்கில் பரப்புரையை மேற்கொள்ளல் சிறந்ததென நம்புகிறோம். (தமிழ் மொழியில் புலமையான, ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் கற்ற மாணவர்களின் பங்கு உங்கள் நிகழ்ச்சிகளில் தேவையாயின் நாங்கள் உங்களுக்கு அவர்களின் தொடர்புகளை எடுத்து தருவோம்.)

அ) புலம்பெயர் நாடுகளில் ஒருவர் தமிழ்மொழியைக் கற்பதால் ஏற்படும் நன்மைகள்:
அ) தனிப்பட்ட முறையில்
ஆ) குடும்பத்தில்
இ) தன் இனத்தில்
ஈ) வாழும் சமூகத்தில்
ஆ) கனடாவில் தமிழ்மொழி கற்றலின் பயன்கள்
இ) தமிழ்மொழியைக் கற்காவிட்டால் ஏற்படும் தீமைகள்
ஈ) குழந்தைகளும் மொழி கற்றலும்
உ) வீட்டு மொழியைத் தமிழ்மொழியாக வைத்திருப்பதால் ஏற்படும் குடும்ப மேம்பாடு
ஊ) தமிழ்மொழியின் சிறப்பியல்புகள்
எ) தமிழ் வரலாறு
ஏ) தமிழ்மொழி வழியே பண்பாடு
ஐ) தமிழர் வாவியலில் தமிழ்மொழியின் பங்கு
ஒ ) தமிழ்மொழி கற்பது கடினமா?

(இந்த இடத்தில், எங்கள் படிமுறை தமிழ் என்ற கற்பித்தல் முறை முக்கிய பங்களிக்கிறது. வழமையாக தமிழை முதல் மொழியாக கற்பிக்கும் முறையில் 247 எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்பிப்பார்கள். ஆனால் நாங்கள் புரிந்துகொள்ளவேண்டிய விடையம் என்ன வென்றால், தமிழ் என்பது அசைகளை அத்திவாரமாக கொண்டு உருவாக்கப்பட்ட மொழி. ஆதலால் அந்த புரிதலோடு தமிழில் உள்ள 28 ஒலிகள் எப்படி அசைகளாகின்றன என்பதை கற்பிப்பது முக்கியம். இரண்டாம் மொழியாக தமிழைக் கற்கும் மாணவர்களுக்கு, மொழி இயல் வாயிலாக மொழியை கற்றல் இலகுவாக இருக்கும். இவ் வழியில் கற்பிப்பது தான் படிமுறை தமிழ் என்னும் புதிய கற்பித்தல் முறையின் நோக்கம்.)

ஓ) தமிழ்மொழி கற்பித்தலில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் கடமைகள்.
ஔ) தமிழர் கலைகள்

மேற்கூறப்பட்ட நோக்கில் ஆக்கங்களைத் தயாரித்து வெளிப்படுத்தல். மேலும், தமிழ் மொழி வரம் நடைபெறும் வாரத்தில், தமிழ் மொழி வாரச் சிறப்பிதழாகத் தங்கள் பத்திரிகையை வெளியிடல்.

3. வானொலிகள், தொலைக்காட்சிகள்:
அ) நாள்தோறும் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கில் நிகழ்ச்சிகளை யூன் 26 - யூலை 2 வரை குறைந்தது 30 நிமிடங்களாவது நடத்துதல்.
ஆ) யூன் 26 - யூலை 2 வரைநடைபெறும் நிகழ்ச்சிகளை முழுமையாக ஒலி, ஒளி பரப்புதல்.
4. தமிழ்மொழி வாரத்தின் மாலை நேர நிகழ்ச்சிகளைப் பின்வரும் நிறுவனங்கள் பொறுப்பு ஏற்று நடத்துதல்.

திகதி & நேரம்: யூன் 28வா, 2022
இரவு 7 மணி முதல் 9 மணி வரை
நிகழ்ச்சி: வல்லுநர்கள் உரையாடல் மற்றும் பார்வையாளர்களோடு கேள்வி பதில்
இடம்: Pickering High School
180 Church Street North, Ajax, ON L1T2W7 Canada

திகதி & நேரம்: யூன் 30வா, 2022
இரவு 7 மணி முதல் 9 மணி வரை
நிகழ்ச்சி: வல்லுநர்கள் உரையாடல் மற்றும் பார்வையாளர்களோடு கேள்வி பதில்
கனேடியத் தமிழ் சங்கம்
இடம்: 2370 Midland Avenue, A8 Scarborough ON M1S 5C6

திகதி & நேரம்: யூலை 2னெ, 2022
மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை
நிகழ்ச்சி: நிறைவு நாள் மேடை நிகழ்ச்சி + பரிசளிப்பு விழா
இடம்: Mary Ward CSS
3200 Kennedy Rd, Scarborough, ON M1V 3S8

தொடர்புகொள்வதற்கு:
இலக்கம்: (416) 869 - 8252
மின்னஞ்சல்: Info@padimuraitamil.com

# இவ்வார ராசிபலன்

**10-06-2022 வெள்ளி தொடக்கம் 16-06-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். காதல் கை கூடும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் தரும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப்போடவும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். ஆணவத்தை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். நல்ல நேரத்தையும், நன்மையான காலத்தையும் உண்மையாக சந்திக்கக்கூடிய காலம். மௌன விரதம் இருப்பது நல்லது. தொடுத்த வெற்றியை சந்திப்பீர்கள்.
*வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* K,F




**ரிஷபம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். ஆதாயம் மிகுதியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோக உயர்வு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஏராள நன்மைகள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை அடையும் காலம். எதிரிகள் தொல்லைகள் குறையும். தனவரவு அதிகரிக்கும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனைகள் அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். காசு, பணம் சேர்க்கை அதிகரிக்கும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். ஏற்றங்கள் அதிகரிக்கும் காலம். பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். ஆதாயம் பெருகக்கூடிய காலம். கல்வியால் செலவு ஏற்படும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கம் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை.
*வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,4,3,2*
*அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,A




**மிதுனம்:** உழைப்பால் மதிப்பு சேரும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு உண்டு. நன்மதிப்பு பெருகும். பாராட்டுக்கள் கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கசந்த காலம் விலகும். வசந்த காலம் உருவாகும். வலிமையான காலமாக அமையும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப்பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். சுப காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்புத்தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் வருகை பாராட்டுக் கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பயணம் நன்மைத் தரும். அச்சத்தைத் தவிர்ப்பது நல்லது. உச்சத்தை அடையும் காலம் ஏற்படும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை ஏற்படும். உறவினரால் தொல்லை ஏற்படும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். சாதனை நிகழ்த்தக்கூடிய காலம். மேன்மைகள் அதிக அளவில் பெருகும் காலம்.
*வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3*
*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* B,X




**கடகம்:** சவாலான விஷயங்களை சமாளிக்கும் வாரம். சினத்தை தவிர்ப்பது நல்லது. பணச்சேர்க்கை உண்டு. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். மன சந்தோஷம் கூடும். மருத்துவச் செலவு கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். காரிய அனுகூலம் தரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வெற்றி கிடைக்கக்கூடிய காலம். நல்லவராக இருப்பீர்கள். வல்லவராக வாழ விரும்புவீர்கள். கனவுகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். தகுதியோடும், மிகுதியோடும் வாழக்கூடிய காலமாக அமையும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. குதூகலம் சேரும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். தீய எண்ணம் விலகும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். திடீர் தனவரவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். மரியாதையான குணம் அதிகரிக்கும். இனிய நட்புக்கள் உருவாகும். பெரிய வெற்றி கிடைக்கும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,1,9*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,K




**சிம்மம்:** எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும் வாரம். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். தர்மச் சிந்தனை மேலோங்கும். வெற்றிகள் குவியும். எதிரிகள் உதிரியாவார்கள். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிறப்புக்களை சந்திப்பார்கள். கஷ்ட காலங்கள் விலகும் காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். திடீர் வரவுகள் உண்டு. ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


சேரும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். மங்களச்செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரிய வெற்றி கிடைக்கும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். நன்மைகள் பெருகும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 4,7,9,2*
*அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* K,P





**கன்னி:** நினைத்தது நடக்கும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். கலை ஆர்வம் பெருகும். உடல் உஷ்ணம் உண்டாகும். விபரீத போக்கு மாறும். பூர்வீக சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். துன்பங்கள் விலகும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனைத் திறன் அதிகரிக்கும். கஷ்ட காலங்கள் விலகி அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பூர்வீக சொத்து கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதாரம் வளர்ச்சி பெருகும். மிகையான நன்மை கிடைக்கும். ஆறு வகையான செல்வங்கள் அமைதியாக கிடைக்கும் காலம். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு.
*வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* V,A




**துலாம்:** இல்லம் வளர்ச்சி அடையும். கலையான தோற்றமும், கனிவான பேச்சும் அவசியம். தெளிவான சிந்தனையால் மலிவான நட்புக்கள் விலகும். தந்தையால் நலம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழும் காலம். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அகலும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இனிய வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. தெய்வ கடாட்ஷம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கைப்பொருள் களவுப்போகும். விவசாயம் லாபம் தரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9*
*அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* C,Z




**விருச்சிகம்:** மரியாதை உயரும் வாரம். நடுத்தரமான நன்மைகள் அடுத்தடுத்து கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டாகும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். வெகுமதிகள் சேரும். உடல்நிலையில் அக்கறை தேவை. சினம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைவழி தொல்லை தீரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. திருப்பங்கள் நிறைந்த வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. கர்ஜனையோடு வலம் வரக்கூடிய காலம். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* X,H




**தனுசு:** பிரயாணம் பெருமை தரும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். பணவரவு அதிகரிக்கும். தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் அற்புதமான காலம். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்னல்கள் அகலும். குடும்ப தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 7,2,4,8*
*அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R.I

***(தொடர்ச்சி _30_ பக்கம்)***

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த பாரத் நெட் திட்டத்தின் சிறப்பம்சங்கள் என்னென்ன?


தமிழகத்தின் அனைத்து கிராமப் பஞ் சாயத்துகளும் பாதுகாப்பான மற்றும் விரைவான இணைய சேவைகளைப் பெறவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையேயான தகவல்தொழில்நுட்ப திறன் இடைவெளியைக் குறைக்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ள இத்திட்டம் உதவிடும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் , தமிழகத்தில் ரூ.1,627.83 கோடி மதிப்பீட்டிலான பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் வாயிலாக **(TANFINET)** கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முத்தலகுறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் பணியினை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (ஜூன் 9)தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:› "பாரத்நெட்" திட்டம் என்பது, தமிழகத்தில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் "கண்ணாடி இழை கம்பி வடம்" மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டமாகும்.› இத்திட்டம், தமிழக அரசின் "தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் **(TANFINET)**" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.› இத்திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் 1 **Gbps** அளவிலான அலைக்கற்றை அனைத்து 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும்




வழங்கப்படும்.› இத்திட்டம் நான்கு தொகுப்புகளாக **(A, B, C & D)** பிரிக்கப்பட்டுள்ளது.› தொகுப்பு கில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, சென்னை **(NOC)**, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் உள்ளன.› தொகுப்பு நில் கடலூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நீலகிரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன.› தொகுப்பு சில் நாகப்பட்டினம், தஞ் சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாமக்கல், கரூர், கோயம்பத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்கள் உள்ளன.› தொகுப்பு ல் கன்னியாகுமரி, மதுரை, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும் செயல்படவுள்ளது.› இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மின்னணு (டிஜிட்டல்) சேவைகள், இணையவழி கல்வி **(e-Education)**, தொலை மருத்துவம் **(Tele Medicine)**, இணையதள இணைப்பின் மூலம் வழங்கப்படும் சேவைகளான **Triple Play Services** (தொலைபேசி, தொலைக்காட்சி - இணையம்) ஆகியவற்றை வழங்க இயலும்.› மேலும், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், அதிவேக இணையதள சேவையினைப் பெறுவதன் மூலம் கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும்.› அதோடு, புதிய ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார நிலை மேன்மையடையவும் இத்திட்டம் வழி வகுக்கும்.› தமிழகத்தின் அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளும் பாதுகாப்பான மற்றும் விரைவான இணைய சேவைகளைப் பெறவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையேயான தகவல்தொழில்நுட்ப திறன் இடைவெளியைக் குறைக்கவும் இத்திட்டம் உதவிடும்.இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் நீரஜ் மித்தல், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எ.கே.கமல் கிஷோர், முதன்மை தொழில்நுட்ப அலுவலர் எ.ராபர்ட் ஜெரார்ட் ரவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# 'ஆன்லைன் சூதாட்டங்கள்; இன்னும் எத்தனை உயிர்களை காவுவாங்க திமுக அரசு காத்திருக்கின்றது?' சீமான் கேள்வி



இணைய வழி சூதாட்டங்களைத் தடைசெய்யாமல் இன்னும் எத்தனை உயிர்களைக் காவுவாங்க திமுக அரசு காத்திருக்கின்றது? தாயை இழந்து, தந்தையை இழந்து இன்னும் எத்தனை, எத்தனை குழந்தைகள் பரிதவிக்க திமுக அரசு காரணமாகப் போகின்றது? என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: " சென்னை மணலியைச் சேர்ந்த தங்கை பவானி இணையவழி சூதாட்டத்திற்கு அடிமையாகி, லட்சக்கணக்கில் பணத்தை இழந்த விரக்தியில் தற்கொலை செய்துகொண்ட செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன்.

இணையவழி சூதாட்டங்கள் விரைவில் தடைசெய்யப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்து ஐந்து மாதங்களாகியும், இதுவரை தடை செய்யாமல் காலங்கடத்தி வரும் திமுக அரசின் மெத்தனப்போக்கே தற்போது தாய் பவானியை இழந்து அவரது இரு குழந்தைகள் பரிதவிக்க முதன்மை காரணமாகும்.குறுக்குவழியில் அதிகப் பணம் ஈட்டுவதற்கான ஆசையைத் தூண்டி இளைஞர்களை மாய வலையில் விழவைக்கும் இணையவழிச் சூதாட்ட செயலிகள், தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமின்றி நாடு முழுவதுமுள்ள இளைய தலைமுறையினரின் எதிர்காலத்திற்குப் பேராபத்தாக மாறி நிற்கிறது.

இணையவழி சூதாட்டங்களால் பொருள் இழப்பு, நேர இழப்பு மட்டுமின்றி வாழ்வின் முன்னேற்றப் பாதையிலிருந்து இளைய தலைமுறையினரைத் திசைமாற்றுகிறது. மேலும், நேர்மை, உண்மை, துணிவு, தன்னம்பிக்கை உள்ளிட்ட அடிப்படை மனித நற்பண்புகளை அழித்து, இளம் வயதிலேயே தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு மன அழுத்தத்திற்கு ஆளாக்கி, அவர்களின் வாழ்வினையே பாழ்படுத்துகிறது என்பதும் வலிமிகுந்த உண்மையாகும்.இதனை உணர்ந்தே நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், சமூகநல ஆர்வலர்களும் வைத்த தொடர் கோரிக்கையை ஏற்று, இணையவழி சூதாட்டங்களுக்குத் தடைவிதிக்க, கடந்த அதிமுக ஆட்சியின்போது அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அதன்பின், இணையவழி சூதாட்ட கும்பல்கள் நீதிமன்றம் மூலம் தடை நீக்கம் பெற்றபோதிலும், அடுத்த ஆறு மாதத்திற்குள் வலுவான சட்டம் இயற்றி, முறையாகத் தடைசெய்யுமாறு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழக அரசிற்கு, உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் கடந்த ஜனவரி மாதம் 6ஆம் தேதி சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் இணையவழி சூதாட்டங்கள் தடை செய்யப்படும் என்று உறுதியளித்தார். உயர்நீதிமன்றம் விதித்த காலக்கெடு பிப்ரவரி மாதத்துடன் முடிவடைந்த நிலையில், முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்து ஐந்து மாதங்களாகியும், இன்றளவும் இணைய வழி சூதாட்டங்களைத் தடை செய்ய மறுத்துவருவது திமுக அரசின்மீது மிகப்பெரிய ஐயத்தை ஏற்படுத்துகிறது.

ஆட்சிக்கு வந்தவுடன் இணையவழி சூதாட்ட விளையாட்டுகளை நிரந்தரமாகத் தடைசெய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த திமுக, யாருடைய நலனுக்காக இன்று வரை தடை செய்ய மறுத்து ஏமாற்றி வருகிறது? என்ற கேள்வியும் மக்கள் மனதில் எழுகிறது.இதுவரை இளைஞர்கள் மட்டுமே பலியாகிவந்த நிலையில், தற்போது தங்கை பவானி போன்ற இளம்பெண்களும் பலியாகும் கொடுமைகள் அரங்கேறிய பிறகும் திமுக அரசு தொடர்ந்து மௌனம் காப்பது சிறிதும் மனச்சான்றற்ற கொடுங்கோன்மையாகும். இணைய வழி சூதாட்டங்களைத் தடைசெய்யாமல் இன்னும் எத்தனை உயிர்களைக் காவுவாங்க திமுக அரசு காத்திருக்கின்றது? தாயை இழந்து, தந்தையை இழந்து இன்னும் எத்தனை, எத்தனை குழந்தைகள் பரிதவிக்க திமுக அரசு காரணமாகப்போகின்றது?

ஆகவே, மக்களின் நலத்தில் அணுவளவாயினும் அக்கறை இருக்குமாயின், குடும்பங்களைச் சீரழிக்கும் இணையவழி சூதாட்ட விளையாட்டுகளை நிரந்தரமாகத் தடைசெய்ய உடனடியாக வலுவான தடைச்சட்டம் இயற்ற வேண்டுமென்று தமிழக அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# தேசிய அளவில் தமிழக உணவுப் பாதுகாப்பு துறை முதலிடம்: மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா விருது வழங்கினார்

தேசிய அளவில் தமிழக உணவுப் பாதுகாப்பு துறை முதலிடம்: மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா விருது வழங்கினார்உணவுப் பாதுகாப்புக்கான செயல்பாடுகளில் தேசிய அளவில் தமிழக உணவுப் பாதுகாப்பு துறை முதலிடம் பிடித்துள்ளது. இதற்காக, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, தமிழக உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் செந்தில்குமாருக்கு விருது வழங்கினார்.இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், நாடு முழுவதும் உள்ள மாநில உணவுப் பாதுகாப்புத் துறைகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து, ஆண்டுதோறும் விருது வழங்குவது வழக்கம்.

இந்நிலையில், 2021 22ம் ஆண்டுக்கான உணவுப் பாதுகாப்பு துறையின் செயல்பாடுகளை, உணவுப் பாதுகாப்பு குறியீடு மூலம் இந்திய உணவுப் பாதுகாப்பு, தர நிர்ணய ஆணையம் மதிப்பீடு செய்தது. இதில், தேசிய அளவில் தமிழகம் முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட "**eat right challenge**" என்ற போட்டியில், நாடு முழுவதும் இருந்து 150 மாவட்டங்கள் பங்கேற்றன. அதில், தமிழகத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள், சிறந்த செயல்பாட்டுக்கான விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டன.

இதையடுத்து, டெல்லியில் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் சார்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில்,மத்திய சுகாதாரத் துறை அமைச்சர்மன்சுக் மாண்டவியா, தமிழக உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் செந்தில்குமாரிடம், தமிழகம் முதல் மாநிலமாகத் தேர்வுசெய்யப்பட்டதற்கான விருது, சிறப்பாக செயல்பட்ட 11 மாவட்டங்களுக்கான விருதுகளை வழங்கினார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வென்மேரி அறக்கட்டளையின் "வென்மேரி" ஆளுமைகளுக்கான உயரிய விருதுகள் வழங்கும் விழா

மேற்படி விருதுகள் வழங்கும் விழா ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என வென்மேரி அறக்கட்டளையினர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அறியத்தந்துள்ளனர்.

தாயக தமிழ் ஆளுமைகளுக்கான உயரிய விருதுகள்.தமிழரின் புகழ் தரணி எங்கும் பரவ சாதனையாளரை இனங்காட்டுங்கள் அவர் புகழ் உலகறியச் செய்வோம். மறைந்துள்ள ஆளுமைகள் மலரும் நேரம். வென்மேரி அறக்கட்டளையின் உன்னத பணி.




## இவ்வார ராசிபலன்

(_28_ பக்கத் தொடர்ச்சி)

**மகரம்:** உன்னதம் நிறைந்த வாரம். உலோகத்தொழில் உயர்வு தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பயணம் லாபம் தரும். எண்ணிய காரியம் கைகூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதார்த்தமான சிந்தனையில் ஏறுமுகம் காணக்கூடிய ஆறுதலான காலமாக அமையும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைவாற்றல் பெருகும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. எடுத்த காரியத்தில் ஏற்றம் கிட்டும். படித்த கல்விக்கு உத்தியோகம் கிடைக்கும். உபயோகமான காலம். புதிய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பூமி சேர்க்கையுண்டு. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அதிகாரம் உயரும். எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G

**கும்பம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். மகிழ்வான நிகழ்வுகளை சந்திக்கக்கூடிய சந்தோஷமான காலம். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும்.
பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எண்ணிய காரியம் கைகூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். மன உற்சாகம் அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி ஏற்படும். வழக்குகளால் தொல்லை உண்டு. இயந்திர தொழிலால் லாபம் உண்டு. கடன் தொல்லைகள் குறையும். கூட்டுப் பிரார்த்தனையில் மோசடி ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். புண்ணிய ஸ்தலப் பயணம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நல்லோர் நட்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். சிறப்புக்கள் சேரும். தன்மானத்தோடு வாழும் காலம். தராள குணம் மேலோங்கும். போட்டி, பொறாமைகள் விலகி நன்மைகள் பெருகும். வீரியத்தோடு செயல்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஹயத்துவார், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R

**மீனம்:** பணிவான பேச்சு அவசியம் தரும் வாரம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். கனத்த வருமானத்தை ஈர்த்துக் கொள்ளும் காலம். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவி வாய்ப்பு வரும். பணியில் உயர்வு உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடும். சொத்துச் சேர்க்கை உண்டு. அறிமுகம் இல்லாதவர்கள் மூலமாக ஆதாயம் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். செல்வமும், புகழும் சேரும். பணியில் கண்டிப்பு அவசியம். கல்விச்செலவு கூடும். வழக்கு முடிவிற்கு வரும். பக்குவமான பேச்சு அவசியம். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மிகையான நன்மை கிடைக்கக் கூடிய மிக அற்புதமான காலம். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். தாய் வழி உறவில் ஆதாயம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V

# தலைமன்னாரில் இருந்து இந்தியாவிற்கு கடத்திச் செல்ல இருந்த உயர் ரக ஆடுகள் 5 மீட்பு



தலைமன்னார் ஊர்மனை கடற்கரை பற்றைக்காட்டு பகுதியில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உயர்ந்த ரக 5 ஆடுகள் தலைமன்னார் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (9) இரவு தலைமன்னார் கிராமம் கடற்கரை பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் உயர்ந்த ரக ஆடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடப்பதை அவதானித்த தலைமன்னார் கடற்படையினர் குறித்த ஆடுகளை மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த உயர் ரக 5 ஆடுகளில் நான்கு ஆண் ஆடுகளும், ஒரு பெண் ஆடும் உள்ளடங்குகின்றன. குறித்த உயர் ரக ஆடுகள் இந்தியாவுக்கு கடத்தி செல்லப்படும் நோக்கில் கால்கள் கட்டப்பட்டு கிடந்ததன் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஆடுகளை காணவில்லை என்றும் குறித்த ஆடுகள் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருப்பதை அறிந்து உரிமை கோரியுள்ளார். இதனையடுத்து புதன்கிழமை (8) மன்னார் நீதி மன்றில் குறித்த சம்பவத்தை தலைமன்னார் பொலிஸார் முற்படுத்தினர்.

இதன் போது உரிமையாளரின் ஆவணங்களை பரிசீலித்த நீதவான் ஆவணங்களில் தெளிவில்லாத தன்மை குறித்து சரியான ஆவணங்களை நீதிமன்றிற்கு முற்படுத்துமாறும் அது வரை ஆடுகள் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பில் பராமரிப்பை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டதை அடுத்து குறித்த ஆடுகள் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு பராமரிக்க பட்டுகின்றது.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

# "ஆக்கிரமிப்புகளை ஜூன் 10 — க்குள் இடிக்கவும்"

## பங்காரு அடிகளாருக்கு எதிரான வழக்கில் உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

இந்தியா செய்திகள் India News



மேல்மருவத்தூரில் நீர் நிலைகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடிக்கச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதையடுத்து வருவாய்த் துறையினர் வருகின்ற 8-ம் தேதி அந்த கட்டிடங்களை இடிக்க உள்ளனர். ஆதிபராசக்தி சித்தர் பீடத்திற்குச் சொந்தமான அறக்கட்டளை மூலம் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனை, வணிக பயன்பாட்டுக் கட்டிடங்கள் உள்ளிட்டவை மேல்மருவத்தூர், கீழ்மருவத்தூர், சோத்துப்பாக்கம் ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலான கட்டிடங்கள் அரசு நீர்நிலை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருப்பதாக அப்பகுதியைச் சேர்ந்த ராஜா என்பவர் கடந்த 2018-ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். உயர் நீதிமன்றத்தில் ராஜா தாக்கல் செய்துள்ள மனுவில், ஹஹமேல்மருவத்தூர், கீழ்மருவத்தூர், சோத்துப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான நீர்நிலைப் பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறக்கட்டளைக்கு சொந்தமான பள்ளிகள், கல்லூரிகள், திருமண மண்டபங்கள், வணிகக் கட்டிடங்கள், வாகன நிறுத்துமிடம், சித்தர் பீடத்தின் சில பகுதிகள் என எல்லாமே அரசு புறம்போக்கு நிலங்களிலும், நீர்நிலைகளிலும் கட்டப்பட்டிருக்கின்றன. மேல்மருவத்தூர் ஏரியில் அடிகளார் திருமண மண்டபத்தின் பெரும்பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. ஏரியிலேயே கார் பார்க்கிங், கட்டணக் கழிப்பிடம், ஜெனரேட்டர் அறை உள்ளிட்டவை வருவதால் அடிகளார் திருமண மண்டபத்திற்கு தடையில்லா சான்று பெறவில்லை. ஆனால் அந்த திருமண மண்டபம் பல வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது. சோத்துப்பாக்கம் நீர்நிலைகளில் வீடுகளும் கடைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றி மீண்டும் பழைய நிலைக்கு நீர்நிலைகளைக் கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து பல்வேறு தரப்பினர்களிடம் இருந்து ராஜாவுக்குக் கொலை மிரட்டல்கள் வந்தன. ஆனாலும் நீர் நிலைகளை அகற்றுவதற்காகத் தீவிரமாக அவர் போராடி வந்தார். இந்த நிலையில் கடந்த 22.03.22 அன்று மேல்மருவத்தூர் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஏப்ரல் மாதத்திற்குள் இடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால், வருவாய்த்துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றாமலேயே இருந்தனர். இந்நிலையில் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடம் சார்பாக ஆக்கிரமிப்புகளை இடிக்கத் தடை உத்தரவு பிறப்பிக்க கோரி மனு செய்தனர். ஏற்கெனவே பிறப்பித்த நீதிமன்ற உத்தரவின்படி ஆக்கிரமிப்புகளை இடிக்காத காரணத்தினால் ஜூன் 10-ம் தேதிக்குள் ஆக்கிரமிப்புகளை இடித்துவிட்டு, 15-ம் தேதி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என அரசுத் தரப்பிற்கு உயர் நீதிமன்றம் கடுமையான உத்தரவு பிறப்பித்தது. அதன்படி, வரும் ஜூன் 8-ம் தேதி மேல்மருவத்தூர் ஏரி நீர்நிலைப் பகுதிகளில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டு உள்ள 13 குடியிருப்பு வீடுகள் மற்றும் அடிகளார் திருமண மண்டபத்தின் சில பகுதிகளை அகற்றச் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல் நாத் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து ஜூன் 8-ம் தேதி பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மேல்மருவத்தூர் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட உள்ளன.

# மீண்டும் (மீ டு) பாதக புகார் சொல்லும் சின்மயி



பிரபல பின்னணி பாடகியான சின்மயி பாதக துன்புறுத்தலுக்கு எதிராக தொடர்ந்து பேசி வருகிறார். இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கவிஞர் வைரமுத்து மீது பாதக குற்றச்சாட்டை வைத்து திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினார். இதையடுத்து "மீ டு" என்ற ஹேஷ்டேக்கை பயன்படுத்தி திரையுலகைச் சேர்ந்த பல பிரபலங்களும் தங்களுக்கு நடந்த பாதக தொந்தரவுகளை குறித்து சொல்ல ஆரம்பித்தனர். அதன்பிறகு பாதக ரீதியாக பாதிக்கப்படும் பெண்கள் மீ டு விவகாரத்தில் சட்ட மாற்றம் வேண்டும் என்று சின்மயி தொடர்ந்து தனது கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில் தற்போது தனது கீச்சகப் பக்கத்தில் கர்நாடக இசைக் கலைஞர் ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான மாணவி குறித்து பதிவிட்டுள்ளார். அதில் தன்னிடம் இசை கற்றுக்கொள்ள வந்த மாணவி ஒருவரை கர்நாடக இசை கற்பிக்கும் ஒருவர் பாதக ரீதியாக துன்புறுத்தி உள்ளார். பாதிக்கப்பட்ட மாணவியும் அவரின் பெற்றோரும் தயவுசெய்து இதை இப்போது பகிர வேண்டாம் என்று சொல்கிறார்கள். குழந்தைகளை இதுபோன்ற வகுப்புக்கு அனுப்பும் போது பெற்றோர்கள் பாதுகாப்பாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அந்த கர்நாடக இசைக்கலைஞர் யார் என்று தெரியாத நிலையில் இவரின் பதிவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

வசந்தி சிவராஜா
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு


நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.
தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077
MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga
SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7
HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto
RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill
NORTH YORK OFFICE
288 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

மலேசிய மடல்

# போதைப்பொருள், கொலை, இடையறா வன்முறை: இதுதான் கமலஹாசனின் 2–ஆவது விக்ரம

## நடிப்பிலும் ஒரு நடிப்பு என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜூன் 05:

கண்களுக்கு பசுமையையும் எண்ணத்திற்கு வெண்மையையும் கொஞ்சம்கூட அளிக்காமல், முழுக்க முழுக்க இருள்சூழ்ந்த வன்முறைக் காவியமாக உருவாகியுள்ள புதிய விக்ரம் படம், விட்டில் பூச்சிகளைப் போன்ற இளம் இரசிகர்களுக்கு வேண்டுமானால் "வேற லெவல்" ஆக இருக்கலாம்.

ஆனால், உலகில் உள்ள அத்துணை ஆயுதங்களையும் காட்டிக் கொண்டு, படம் முழுக்க இரத்தக் கவிச்சை அடிக்கும் பயங்கரவாதத்தை முன்னிறுத்தி, போதைப் பொருளைப் பயன்படுத்துவது ஆண்மைக்கு அழகு என்பதைப் போல சித்தரித்துக் கொண்டு இப்பொழுது தமிழர் வாழும் நிலமெல்லாம் படமெடுத்து ஆடும் இந்த விக்ரம் படத்தில், சிந்தனைக்கான சிறு அம்சம்கூட சிறிதளவும் இல்லை;

தமிழ் நாட்டின் தொலைக்காட்சி ஊடகம், கோடம்பாக்கம், தின மலர்-குமுதம்-ஆனந்த விகடன் உள்ளிட்ட பார்ப்பன ஊடகத்துடன் சேர்ந்து தமிழ் இளைஞர்களும் தொடர்ந்து உச்சரிக்கும் சொல்லாடல்களான வேற லெவல், சைக்கிள் கேப், டிப்சோ டிப்ஸ், ஃப்லெக்சியோ ஃப்லெக்சி என்பதெல்லாம் என்ன தமிழ் என்று புரியவில்லை.

இந்த நூற்றாண்டுக்குள் அடியற்றுப் போகும் மொழிகளில் தமிழ் மொழியும் இடம்பெற்றுள்ளது என்று ஐநா மன்றத்தின் யுனெஸ்கோ மன்றம் எச்சரித்தது உண்மைதான் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது.

திரைப்பட வாய்ப்பு மங்கிய நேரத்தில் கமலஹாசன் ஆரம்பித்த மக்கள் நீதி மய்யம், பல செய்திகளை சொல்லாமல் சொன்னது கமலஹாசனின் ஆழ்மனதில் பொதிந்துள்ள அம்சம் யாவும் வெளிப்படவும் அது துணை புரிந்தது.

அவரின் கட்சியின் பெயரில் உள்ள மையம் என்னும் சொல்லில் முதல் எழுத்தான மகர ஐகாரமான "மை" என்பதற்குப் பதிலாக "ம"கர உயிர்மெய் எழுத்தையும் "ய்" என்னும் மெய்யெழுத்தையும் பயன்படுத்தும்படி கமலஹாசனுக்கு சொல்லிக் கொடுத்த தமிழ் மேதை எதுவென்று தெரியவில்லை.

தொல்காப்பியர் வகுத்துள்ள தமிழ் நெடுங்கணக்கில் இடம்பெற்றுள்ள 247 எழுத்துகளில் ஒன்றான "மை" என்னும் உயிர்மெய் எழுத்தை கொலை செய்ய கமலஹாசன் யார்? முதலில், மையம் என்பதே தமிழ்ச் சொல்ல அல்ல;

அதைப்போல, வகைதொகையின்றி கொலைச் சம்பவகள், அதுவும் கழுத்தை அறுத்து கொலை செய்யும் காட்சிகள் இடம்பெற்றுள்ள திரைப்படமான விக்ரம் என்ற சொல்லும் தமிழ் அல்ல;

பொதுவாக, கோடம்பாக்கத்துக் கூட்டம் தமிழ்க் கொலை புரிய ஆரம்பித்து நெடுங்காலம் ஆகிறது.

ஏபிசிடி, ஆம்பள, மாஸ்டர், மஞ்சப்பை. ஆர்.ஆர்.ஆர்., கூர்கா, கே.ஜி.எஃப்., ஜாக்பாட், ராட்சசி, சாகோ, ரம்மி, சிக்சர், பிகில் என்றெல்லாம் நூற்றுக் கணக்கான தமிழ்த் திரைப் படங்கள் வேற்றுமொழி பெயர்களில் தயாரிக்கப்படுகின்றன.

இவற்றில் பிகில் என்பது பெருங்கேவலமான சொல். அது, எந்த மொழியிலும் இல்லாத சொல். ஊதல் என்னும் பொருள் கொண்ட 'Whistle' என்ற ஆங்கிலச் சொல்லைதான் பிகில் என்று கொச்சை நடையில் பயன்படுத்துவது, படிப்பறிவில்லாத அல்லது அரியாத சிலரின் வழக்கச் சொல்லாக இருந்தது.

இத்தகைய கேவலமான பிகில் என்னும் சொல், கமலஹாசன் போன்ற நடிகர்களின் பாடல் காட்சிகளிலும் இடம்பெற்ற நிலையில், அதையே ஒரு திரைப்படத்திற்கு பெயர் வைத்த கோடம்பாக்கத்து போக்கிரிக் கூட்டம், தமிழ் மொழிக்கு அப்பட்டமான கேடு விளைவித்து வருகிறது.

ஆண்பிள்ளை என்பதைத்தான் வளைத்து நசுக்கி "ஆம்பள" என ஒரு சிலர் பேசுவதுண்டு அதையே ஒரு படத்திற்கு தலைப்பாக வைப்பதும் அதைப்போல மஞ்சள் பை என்பதை பேச்சு நடையில் சொல்லும் "மஞ்சப்பை" என்பதையும் ஒரு படத்திற்கு பெயராக வைத்ததெல்லாம் கோடம்பாக்கத்தைச் சேர்ந்த தமிழரும் தமிழரல்லாதாருமான கூத்தாடிக் கூட்டம் கொட்டமடுத்துப் புரியும் அப்பட்டமான தமிழ்க் கொலை.

இதில் வேடிக்கை என்றால், மஞ்சள் பை என்பதன் திரிபுவடிவமான மஞ்சப்பை என்பதை, அண்மையில் நெகிழிப் பைகளை விளக்கி, துணிப் பைகளைப் பயன்படுத்தும்படி பொதுமக்களை ஊக்கப்படுத்துவதற்காக இன்றைய தமிழ் நாட்டு அரசு நடைமுறைப்படுத்திய திட்டத்திற்கும் "மஞ்சப்பை" என்று பெயர் வைத்தது இன்னும் கொடுமையானது.




துணிப் பையின் அடையாளமான மஞ்சள் பையை, மஞ்சள் பை என்று சொல்வதில் இந்தப் பாழாய்ப் போனவர்களுக்கு என்ன சிக்கல் என்று தெரியவில்லை. இதன் தொடர்பில், கொடைக்கானலில் வடிவமைக்கப்பட்ட மஞ்சள் பை மலர் வடிவமைப்பில்கூட, "மஞ்சப்பை" என்றுதான் இருந்தது.

இவ்வாறாக, திரைப்படத்தின் பெயர், வசனம், பாடல் என அனைத்துக் கூறுகளிலும் தமிழைக் கொலைச் செய்ய துணிந்துவிட்ட கோடம்பாக்கத்துக் கூட்டத்தில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத வேற்றுமொழிக் காரர்களுக்கு தமிழர்களும் துணை போவது இன்னும் வேதனையானது!

ஃபிளிம் காட்டியே பிளிம் காட்டியே ஃபீலிங் ஏத்தாதே என்று பாடல் எழுதிய பிண்ணாக்குக் கவிஞன், அதை மனமுருகிப் பாடிய தெருவோரப் பாடகன், இசை அமைத்த புறம்போக்கு இசை அமைப்பாளன், இப்பாடலுக்கு ஆட்டம் போட்ட மேனி மினிக்கிகள், இதற்கான காட்சிகளை எடுத்த இயக்குனன், படத் தயாரிப்பாளன் உட்பட அத்துணை பேரும் நாசமாய் போகட்டும்.

கோடம்பாக்கத்தில் மட்டும் நில நடுக்கம் ஏற்பட்டு, அந்த இடமே அடையாளம் தெரியாமல் அழிந்து போகட்டும் இந்தத் தமிழ்க் கொலைக் கூட்டமும் ஒழியட்டும்.

இல்லாவிட்டால், திரைப்பட வாய்ப்பு மங்கிய நிலையில், ஆட்டமும் பாட்டமும் ஓய்ந்து, மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதியில்கூட வெற்றிபெற முடியாமல் அரசியலிலும் மொத்துப்பட்டு, கடைநிலைக்கு சென்றபின், இளைஞர்களை மயக்குவதற்காக போதைப் பொருளையும் துப்பாக்கையையும் வெடிகுண்டுகளையும் காட்டியபடி கழுத்தைட்யும் கால் நரம்பையும் அறுத்து வரிசையாக கொலை செய்யும் காட்சிகளைக் கொண்டு ஆயிரம் விக்ரம்-களைத் தயாரிப்பது கோடம்பாக்கத்தில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிப்பவர்கள் பகவத் கீதையை படிக்க வேண்டும் என்றும் இட ஒதுக்கீட்டுக்கு இடமில்லை என்றும் சொன்ன கன்னட மொழிபேசும் சூரப்பா போன்றவர்களுக்கு ஆதரவு அளித்த கமலஹாசன் கலைஞர் மு.கருணாநிதி இறந்தபின்னும் அவரை சக்கர நாற்காலி என்று குத்தலாக விமர்சனம் செய்துவிட்டு பின்னர் 2 நாட்கள் கழித்து அறிவாலயம் சென்று மண்டியிட்டு வந்த கமலஹாசன் தமிழக இளைஞர்களின் மனதில் நஞ்சை விதைக்கிறார்.

படத்தை படமாக பார்க்க வேண்டும்; அத்துடன் நிறுத்திக் கொண்டு விமர்சனம் செய்யக்கூடாதென்று சொல்பவர்களுக்காக.. .,

படத்தைப் பார்த்துவிட்டு வெளியேவரும் விட்டில் பூச்சி இளைஞர்க் கூட்டம், "செம்ம", "படம் சூப்பர்", "நல்லா செஞ்சிருக்காங்க", "ரொம்போ இண்ட்ரஸ்டிங்கா இருக்கு" என்றெல்லாம் சொல்லும் விமர்சனம் மட்டும் இனிக்குமோ?




கமலின் இந்த 2-ஆவது விக்ரம் படம் வெளிவந்த பின், எத்தனை பேர் குதிகால் நரம்பு அறுக்கப்பட்டு சாகப் போகிறார்களோ தெரியவில்லை.

எல்லாவற்றுக்கும் நாளைய சமுதாயம் திர்ப்பு சொல்லும்.

கமலஹாசன் நடித்த வறுமையின் நிறம் சிவப்பு, அன்பே சிவம் ஆகிய திரைப்படங்களை இந்திய பொதுவுடைமைக் கட்சிகள் கொண்டாடியதை புரிந்துகொள்ள முடி-கிறது; தணிக்கை வாரியம் அனுமதி தராததால் வேறு பெயரில் வெளியான சண்டியர், தசாவதாரம், சலங்கை ஒலி, 16 வயதினிலே, குணா, கல்யாண ராமன், அபூர்வ சகோதரர்கள், ஆடுபுலி ஆட்டம், நிழல்கள், அபூர்வ ராகம் உள்ளிட்ட படங்களை வரிசையாக பார்த்த ரசிகர்களுக்கு, நான் உட்பட ஒருவித மயக்கம் இருந்தது உண்மைதான். கலைக்காக தன் வாழ்வை ஈகம் செய்து விட்டாரோ என்ற எணணமும் தோன்றியது;

எல்லாம் நடிப்பிலும் ஒரு நடிப்பு என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**

# தமிழகத்தில் ரூ.20 கோடியும் உலக அளவில் ரூ.48 கோடியும் விக்ரம் திரைப்படம் முதல்நாளில் வசூல்



கமல்ஹாசன் நடிப்பில் வெளியான "விக்ரம்" திரைப்படம் இந்திய அளவில் ரூ.32 கோடி-க்கு அதிகமாகவும், உலக அளவில் மொத்தமாக ரூ.48.68 கோடி அளவிலும் வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல்ஹாசன், பஹத் பாசில், விஜய் சேதுபதி உள்ளிட்டோர் நடிப்பில் ஜூன் 3 திரையரங்குகளில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது "விக்ரம்" திரைப்படம். அனிருத் இசையமைத்திருக்கும் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் சூர்யா நடித்திருக்கிறார். படம் வெளியான முதல் நாளே ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. தமிழத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் நேற்று ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தன. மேலும், தமிழக அரசு சார்பில் படம் வெளியான நாளிலிருந்து 3 நாட்களுக்கு சிறப்பு காட்சிகளை திரையிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், "விக்ரம்" திரைப்படம் ஒரேநாளில் தமிழ்நாட்டில் மட்டும் 20.61 கோடி ரூபாய் வசூலித்து சாதனை படைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆந்திரா, தெலங்கானாவில் ரூ.3.74 கோடியும், கர்நாடகாவில் ரூ.3.96 கோடியும், கேரளாவில் ரூ.5.10 கோடியும் வசூலாகியுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்தியாவில் ரூ.32 கோடியை கடந்த இந்தப் படத்தின் வசூல், உலக அளவில் ரூ.48.68 கோடியை எட்டியுள்ளது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு நடிகர் கமல்ஹாசனை திரையில் காணவேண்டும் என்ற ஆவலும், 4 முன்னணி நடிகர்களின் நடிப்பும், லோகேஷ் கனகராஜின் இயக்கமும் படத்திற்கான ஆவலைத் தூண்டியிருக்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டு வெளியான படங்களில், தற்போதைய நிலையில் அதிக வசூலை குவித்த பட வரிசையில் "விக்ரம்" திரைப்படம் 3-வது இடத்தை பிடித்துள்ளது. முதல் இடத்தில் உலக அளவில் ரூ.61 கோடி வசூல் படைத்து விஜய் நடித்த "பீஸ்ட்" திரைப்படமும், இரண்டாவது இடத்தில் ரூ.50 கோடி வசூலுடன் அஜித்தின் "வலிமை" திரைப்படமும் உள்ளது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்த நாட்களில் விக்ரம் வசூலைப் பொறுத்து, இந்தப் பட்டியல் மாறலாம்.

உ
சக்திமயம்



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 22வது ஆண்டு விழாவும் (2022)

ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் - டொரொன்ரோ
3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8
e-mail: sakthi1226@gmail.com Tel: 416-293-1226 Fax: 416-293-1215





கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

அம்பிகை அடியார்க்ளே!

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து திகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவளம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி (ஸ்ரீகனகதுர்க்கா) அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் வைகாசித் திங்கள் 22ம் நாள் (04.06.2022) சனிக்கிழமை பூஷ நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 8:30 மணிக்குள் துவஜாரோகத்துடன் (கொடியேற்றத்துடன்) ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மகாபெரியவாள் பரிபூரண அநுக்கிரஹத்துடன் கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

# பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் 2022

| | |
|---|---|
| 03.06.2022 வெள்ளி<br>உபயம்<br>திருமதி. சுலோச்சனா கிருஸ்ணமூர்த்தி | காலை 7:00 விக்னேஸ்வர பூஜை அனுக்ஞை கணபதி ஹோமம் 108 சங்காபிஷேகம் கும்ப பூஜை அங்குரார்ப்பணம் ரக்ஷபந்தனம்<br>9:30 வசந்த மண்டப பூஜை<br>10:00 பூர்வாங்க பூஜை அபிஷேகம் சமஸ்த தேவதா ஆவாஹனம்<br>மாலை 5:00 கிரஹ சாந்தி வாஸ்து சாந்தி மிருத்யுசங்கிரணம் |
| 04.06.2022 சனி | 11:25 துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும் |

## நிகழ்ச்சி நிரல் மற்றும் பிரம்மோத்ஸவ உபயதாரர்கள்

| | Day & Date | Utsavam / Utsava Vahanam | Morning Maha utsava Sponsors | Evening Maha utsava Sponsors |
|---|---|---|---|---|
| 1 | June 04 - Sat. | சிம்மவாகனம் | திரு. செல்வகுமார், திரு பரராஜசிங்கம் பொன்னுத்துரை குடும்பங்கள் | திரு. R. K. மூர்த்தி குடும்பம் |
| 2 | June 05 - Sun. | ஓங்கார வாகனம் | திரு. சத்யேந்திரன் குடும்பம் | திரு. சுதாகர் குடும்பம் |
| 3 | June 06 - Mon. | சூரியபிரபாவக் காட்சி | திரு. கைலாசபிள்ளை குடும்பம் | திரு. திருமதி செந்தூரன் கங்கா குடும்பம் |
| 4 | June 07 - Tue. | சந்திரபிரபாவக் காட்சி | திரு. அனுராக் குடும்பம் | திரு. திருமதி பிருந்தவன் குடும்பம் |
| 5 | June 08 - Wed. | நாகவாகனம் | திரு. சினனத்துரை குடும்பம் | திரு. நாதன் தியாகராஜன் குடும்பம்<br>திரு. சுஜி சபாநாதன் குடும்பம் |
| 6 | June 09 - Thu. | மயில்வாகனம் | திரு. வசந்தன் ராஜா ஐயா குடும்பம் | திரு. கணேஸ்வரன் குடும்பம் |
| 7 | June 10 - Fri. | கப்பல் திருவிழா | திரு. திருமதி செந்தூரன் குடும்பம் | திரு. திருமதி மோகன் மதி குடும்பம்<br>திரு. திருமதி கௌரி தவபாலசிங்கம் |
| 8 | June 11 - Sat. | அன்னவாகனம் | திரு. தி திருக்கேஸ்வரன் குடும்பம் (ரஞ்சனி சட்ட அலுவலகம்) | திரு. லோகேந்திரலிங்கம் குடும்பம் |
| 9 | June 12 - Sun | மஞ்சத் திருவிழா | திரு. தில்லையீசன் குடும்பம் | திரு. திருமதி குகநாதன் குடும்பம் |
| 10 | June 13 - Mon. | கஜ(யானை)வாகனம் | திரு. திருமதி சிவசோதிநாதன் குடும்பம் | திரு. தியாகராஜன் குடும்பம் |
| 11 | June 14 - Tue. | சிவலிங்க வழிபாடு<br>கைலாச வாகனம் | திரு. திருமதி சிவலிங்கம் குடும்பம் | திரு. தவபுத்திரன்,<br>திரு. சிறீஸ்கந்தராஜா குடும்பங்கள் |
| 12 | June 15 - Wed. | பூந்தண்டிகை | திரு. லிங்கேஸ்வரன் குடும்பம் | திரு. முத்துக்குமாரு<br>திரு. ஜெகதீஸ்வரன்,<br>திரு. சந்திரகுமார்<br>திரு. லோகேஸ்வரன் குடும்பங்கள் |
| 13 | June 16 - Thu. | வேட்டைத்திருவிழா | திருமதி தில்லைநாயகி குடும்பம் | திரு. குணசேகர் குடும்பம் |
| 14 | June 17 - Fri. | சப்பறத்திருவிழா | திரு. கனகரத்தினம் குடும்பம் | திரு. மகாலிங்கம் குடும்பம் |
| 15 | June 18 - Sat. | தேர்த்திருவிழா | திருமதி யோகேஸ்வரி குடும்பம் | திரு. கமலநாதன் குடும்பம்<br>(ஊஞ்சல் பிராயசித்த அபிஷேகம்) |
| 16 | June 19 - Sun. | தீர்த்தத் திருவிழா | திரு. குமரகுருபரன் குடும்பம்<br>சூர்ணோற்சவம், தீர்த்தம்<br>யாக கும்பாபிஷேகம் | திரு. விஜயராஜா குடும்பம்<br>கொடியிறக்கும் வைபவம் |
| 17 | June 20 - Mon. | பூங்காவனம் | திரு. சிவகுமார் குடும்பம்<br>(Suruthy Takeout & Catering) | பூங்காவனம் |
| 18 | June 21 - Tue. | பிராயச்சித்த அபிஷேகம் | திரு. கந்தசாமி கிரிசாந்தன் குடும்பம் | வைரவர் மடை |

### காலை

8:45 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:45 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

### குருமார்கள் விபரம்:

ஆலய ஸ்தாபகர் பிரதமகுரு வேத கலா பூஷணம், ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாத சந்திரமௌலி சாஸ்த்திரிகளின் நல்லாசியுடன்

மகோற்சவ பிரதம குரு: சிவகாம ப்ரவீண சிவஸ்ரீ சுரேந்திர சிவாச்சாரியார் (சுரேன் ஐயா)
ஆலய குரு: ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாதன் சேதுராமன் சர்மா (ஸ்ரீ சுரேஷ் ஐயா),
அனந்தநாராயணசர்மா (கார்த்திக்), அனுராக் ஜம்பநாதசர்மா, சிவஸ்ரீ சாரங்கன் சுரேந்திரசர்மா,
சிவஸ்ரீ ஹரிஹரக்குருக்கள், பிரம்மஸ்ரீ மகேஷ்பாபு, ப்ரம்மஸ்ரீ. சர்வ லோகேஸ்வரக்குருக்கள் (ஈசன் ஐயா),
மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

மங்கள இசை: சிவமயம் குழுவினர்
நித்திய புஷ்ப அலங்காரம் - பரந்தாமன் ஐய சாயி மலர்க்களஞ்சியம்

### மாலை

5:00 மணிக்கு கும்ப பூஜை
5:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6:00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8:00 மணிக்கு வெளிவீதி வலம்வருதல்
8:45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்ஙனம் ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்த்திரிகள்

# எங்கள் தெய்வங்களின் 25ம், 19ம் ஆண்டு நினைவலைகள்

'சீவியத்திலும் எம்மை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதிருங்கள்'



அன்பும், பண்பும். பாசமும், அறிவும் கொண்டு
எம்மை ஆளாக்கிய தெய்வங்களே!
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
நீங்கள் எங்களை எந்நாளும் நேசிக்கும் பண்போடு வாழ்ந்து
நாம் கண்ட நாயகன், நாயகியாய் வீற்றிருந்து எங்களுக்கு
வளம் விதைத்தவர்களே
அருகில் நீங்கள் இல்லாவிட்டாலும் எப்போதும், எங்கிருந்தாலும்
ஆசியை வழங்கி பூத்தூவி வாழ்த்துவீர்கள்

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்
மற்றும் பூட்டப்பிள்ளைகள்

## திருமதி. பேபி மார்ட்டின் - திரு. மார்ட்டின்

(சில்லாலை)


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# அன்பின் தொனி - 654

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன ஜனம்**

**1. இஸ்ரவேலர் கன்றுக்குட்டியை வார்ப்பித்து வணங்கினார்கள்**

மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித் ததோ அறியோம், ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள். அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள், பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ, எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள், அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத் துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன், இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு, உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

**- யாத்திராகமம் 32: 1-10**

**2. பாகால்களைச் சேவித்தார்கள்**

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார். கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது, மிகவும் நெருக்கப்பட்டார்கள். **- நியாயாதிபதிகள் 2: 11-15**

**3. வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டனர்**

எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய கையின்கீழிருந்த தங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் பாவஞ்செய்து, அந்நிய தேவர்களுக்குப் பயந்து நடந்து, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளின் வழிபாடுகளிலும் இஸ்ரவேல் ராஜாக்களின் வழிபாடுகளிலும் நடந்துகொண்டிருந்தார்கள். செய்யத்தகாத காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இரகசியத்தில் செய்ததுமன்றி, காவல்காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான பட்டணங்கள்மட்டுமுள்ள தங்கள் ஊர்களிலெல்லாம் தங்களுக்கு மேடைகளையும் கட்டி, உயரமான சகல மேட்டின்மேலும் பச்சையான சகல மரத்தின்கீழும் தங்களுக்குச் சிலை-களையும் விக்கிரத் தோப்புகளையும் நிறுத்தி, கர்த்தர் தங்களை விட்டுக் குடி விலக்கின ஜாதிகளைப்போல, சகல மேடைகளிலும் தூபங்காட்டி, கர்த்தருக்குக் கோபமுண்டாகத் துர்க்கிரியைகளைச் செய்து, இப்படிச் செய்யத்தகாது என்று கர்த்தர் தங்களுக்குச் சொல்லியிருந்தும், நரகல-ான விக்கிரகங்களைச் சேவித்து வந்தார்கள். நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும், என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பினதுமான நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள் ஞானதிருஷ்டிக்காரர் எல்லாரையுங்கொண்டு இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் திடச்சாட்சியாய் எச்சரித்துக்கொண்டிருந்தும், அவர்கள் செவிகொடாமல், தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற்போன கடினக் கழுத்துள்ள தங்கள் பிதாக் களைப்போல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, அவருடைய கட்டளைகளையும், அவர் தங்கள் பிதாக்களோடே பண்ணின அவருடைய உடன்படிக்கையையும், அவர் தங்களுக்குத் திடச்சாட்சியாய்க் காண்பித்த அவருடைய சாட்சிகளையும் வெறுத்துவிட்டு, வீணான விக்கிரகங்களைப் பின்பற்றி வீணராகி, அவர்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களைப்போல, செய்யவேண்டாமென்று கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டு விலக்கியிருந்த ஜாதிகளுக்குப் பின்சென்று, தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு, பாகாலைச் சேவித் தார்கள். அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப் போட்டார்கள். ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார், யூதாகோத்திரமாத்திரமே மீதியாயிற்று. **- 2 ராஜாக்கள் 17: 7-18**

*தொடரும்...*

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1001



**மேலதிக தகவல்களுக்கு:**
**திருமதி.வசந்தா நடராசன்** B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயம்
## நீராவியடி, யாழ்ப்பாணம்

*“ நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி*
*கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”*

கடையிற்சுவாமிகள் சுவாமிகள், 1891 ஆம்ஆண்டு, கரவருடம், புரட்டாதித் திங்கள் சதயநட்சத்திரத்தில், மகாசமாதி அடைந்தார்கள். 1900 ஆம் ஆண்டு, கடையிற் சுவாமிகளுடைய சமாதிச் சிவாலயம் ஆகம விதிகளுக்கமைக அமைக்கப்பட்டது. சிவனுக்கும் அம்மைக்குமுரிய கோயில்கள், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், சண்டேசுவரர் சந்நிதானம், தீர்த்தக்கிணறு என இக்கோயில் சகல பரிமாணங்களுடனும் அமைக்கப்பட்டது. இங்கு எழுந்தருளியுள்ள சிவலிங்கம், புண்ணிய நதியாகிய கங்கையில் இருந்து எடுக்கப்பட்டது. அவ்வாறே இந்தியாவின் தலைசிறந்த சிற்பாச்சாரியர்களால் செதுக்கப்பட்ட அம்பாள், விநாயகர். முருகன், சண்டேசுவரர் உற்சவமூர்த்தி முதலிய திருவுருவங்களோடு, கடையிற் சுவாமிகளின் திருவுருவச்சிலையும் கொண்டுவரப்பட்டு, முதலாவது குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இவ்வாறு சிறப்பாக ஆரம்பிக்கப்பட்ட சமாதிச் சிவாலயம், பலவருடங்கள் சரியான முறையிலே பராமரிக்கப்படாது காணப்பட்டது. இந்நிலையில் 1975 ஆம் ஆண்டின் பின்னர் இச்சிவாலயம், அயலவர்களின் உதவியாலும், ஊர் இளைஞர்களின் முயற்சியாலும் மீண்டும் புனரமைக்கப்பட்டது. இவ்வாறு புனரமைக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 11 ஆம் நாள், குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன்பின்னர் ஒழுங்கான முறையிலே பூசைகள் இடம் பெற்று, வருடாந்த உற்சவமும் கொண்டாடப்பட்டது. இதன்பின்னர் 2001 ஆம் ஆண்டிலும் மற்றுமொரு குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றுள்ளது. இதன்பின்னர் ஆலயத்தில் சிறப்பான முறையிலே பூசைகளும், விழாக்கள் இடம்பெற்றுள்ளன.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற குடமுழுக்குப் பெருவிழாவின் பின்னர், வருடாந்த அலங்கார உற்சவம், வருடந்தோறும் ஆனிமாதம், உத்தரட்டாதி நட்சத்திரத்தில் ஆரம்பமாகும். இத்தினத்தில் 1008 சங்காபிஷேகம், விசேட திரவிய ஹோமம் ஆகியவற்றோடும், சிறப்பான பூசைகளோடும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, அம்பாள் சமேதரராக சுவாமியின் திருவுலா இடம்பெறும். மணவாளக்கோல உற்சவத்துடன் ஆரம்பித்து, தொடர்ந்து பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். பதினோராவது நாள், சிவலிங்கப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும், ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கு ருதுசாந்தி வைபவமும் கொண்டாடப்படும். இதேதினம் மாலையில், ஸ்ரீ வாலாம்பிகை அம்பாள் சமேத வைத்தியநாதப்பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்று, மறுநாள் வைரவசாந்தியுடன் உற்சவம் நிறைவுறும்.

கடையிற்சுவாமிகளின் சமாதிதினம், புரட்டாதி மாத சதயநட்சத்திர நாளாகும். இத்தினத்தன்று சுவாமிகளுக்கு விசேட வழிபாடுகள் இடம்பெறும். இத்தினத்தில் கடையிற்சுவாமிகளின் மண்டைதீவு அன்பர்களால் பாடல்கள்பாடப்பட்டு, குருபூசை தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, அன்று மதியம் மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

இவ்வாலயத்திலே மகாசிவராத்திரி, பிரதோஷவிரதம், பங்குனித்திங்கள், ஆடிப்பூரம், ஆவணிஞாயிறு, புரட்டாதிச்சனி, நவராத்திரி, கௌரிவிரதம், கந்தசஷ்டி, பிள்ளையார்கதை, திருவெம்பாவை போன்ற விரதங்கள் சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றன. மகாசிவராத்திரி சிவனுக்குரிய சிறப்புநாளாக இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது. இரவு நான்கு சாமப்பூசைகளும் ஹோமம் வளர்க்கப்பட்டு விசேடமானமுறையில் கும்பபூசை இடம்பெற்று, வில்வஅர்ச்சனை செய்யப்பட்டு பூசைகள் சிறப்பாக நடைபெறும். அதிகாலை வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி உலாவருவதுடன் மகாசிவராத்திரி விரதம் பூர்த்தி அடையும்.

இவ்வாறே புரட்டாதி மாதத்தில் இடம்பெறும் நவராத்திரி நாட்களில் அம்பாளுக்கு விசேட அலங்காரங்கள் செய்யப்பட்டு, கொலுவைத்து கும்பம்வைத்து, நவதானியம் விதைத்து பத்தாம்நாள் விஜயதசமியன்று விரதபூர்த்தி இடம்பெறும். இவ்வாறே முருகனுக்குரிய கந்தசஷ்டிவிரதமும் சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் ஆரம்பமாகும் பிள்ளையார்கதை விரதகாலத்தில் இருபத்தொரு நாட்களும் விநாயகப்பெருமானுக்கு, சிறப்பு அறுகு அர்ச்சனை நடைபெற்று பிள்ளையார்கதை படிக்கப்படும்.

இவ்வாறாக கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயத்திலே, எம்பெருமானுக்குரிய முக்கிய விரதங்களும், விழாக்களும், அம்பாளுக்குரிய விரதங்களும் விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. சைவசமயிகளால் கடைப்பிடிக்கப்படும் ஏனைய விரதங்களும், விழாக்களும், இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுவதோடு, இச்சமாதிச் சிவாலயம் கடையிற்சுவாமிகளின் அருளால், பலவழிகளிலும் மேலோங்கிக் காணப்படுகின்றது. அன்பர்கள் கடையிற்சுவாமிகள்மீது கொண்ட பற்றுதல் காரணமாக அவரது இயற்பெயர் மறைந்து, மக்கள் நாவில் இடம்பெற்ற கடையிற்சுவாமிகள் என்ற திருநாமத்தோடு திகழ்கின்றார். இவ்வாறான சமாதிச் சிவாலயங்கள் சக்திமிக்கவை. இவற்றைப்போற்றுவதும், பாதுகாப்பதும் ஒவ்வொரு இந்துக்களின் தலையாய கடனாகும்.

*“கடலிலே திரியும் ஆமை கரையிலேறி முட்டையிட்டுக்*
*கடலிலே திரிந்தபோது ரூபமானவாறுபோல்*
*மடலுளே இருக்கும் எங்கள் மணியரங்கசோதியை*
*உடலுளே நினைந்து நல்ல உண்மையானது உண்மையே.”*

*வளரும்...*

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பலவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS "Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1366 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 10, 2022

# மணமகன் கஜதாஸ் - மணமகள் கஸ்துரி ஆகியோர் இணைந்த திருமணம் கடந்த 27-05-2022 அன்று சிறப்பாக நடைபெற்றது





திரு. திருமதி கணேசலிங்கம் தம்பதியின் புதல்வர் மணமகன் கஜதாஸ் அவர்களுக்கும் **Amma Pawn Brokers** உரிமையாளர் கிருஸ்ணகோபால் தம்பதியின் புதல்வி மணமகள் கஸ்தூரி அவர்களுக்குமான திருமணம் கடந்த 27-05-2022 அன்று வெள்ளிக்கிழமை நோர்த் யோர்க் நகரத்தில் உள்ள திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. **Mardi Gras Banquet Services** நிறுவனத்தின் ஜெயாசந்திரன் வெற்றியாளர்கள் இந்த திருமண வைபவம் மற்றும் விருந்துபசாரம் ஆகியவற்றை சிறப்பாக நடத்தினர்.

மேற்படி திருமணத்தை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தனது சக சிவாச்சாரியப் பெருமக்களோடு இணைந்து சிறப்பாக நடத்தினார். அவரோடு சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களும் பங்கெடுத்தார்.

அழைப்பின் பேரில் நூற்றுக்கணக்கானவர்கள் சமூகமளித்து மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர். மணமக்களுக்கு கனடா உதயன் நிறுவனத்தின் வாழ்த்துக்களும் அன்று பகிரப்பெற்றன.

# கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ்' பிரதிகளை சுவிற்சலாந்து வாழ் இலக்கிய நண்பர்களுக்கு நேரடியாக வழங்கிய 'உதயன்' (பாஸ்டர்) சோதி



கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய நண்பர்கள் சிலருக்கு கனடாவில் அந்தப் பிரதிகள் வழங்கப்பெற்று வருகின்றன.

ஆனால், தற்போது அதன் பிரதிகள் கடல் தாண்டிச் சென்றும் சிலரிடம் கையளிக்கப்பெற்றுள்ளன. சுவிற்சலாந்து வாழ் இலக்கிய நண்பர்களான திருவாளர் "கல்லாறு "சதீஸ் மற்றும் பொலிகை ஜெயா ஆகியோர்க்கும் இந்தப் பிரதிகள் இன்று வழங்கப்பெற்றன.

தற்போது சுவிற்சலாந்து நாட்டிற்கு தனது குடும்ப உறுப்பினர்களோடு பயணித்துள்ள எமது "உதயன்" (பாஸ்டர்) சோதி அவர்கள் மேற்படி இரண்டு இலக்கிய நண்பர்களுக்கும் இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை கையளிப்பதையும் அவருக்கு இலக்கிய நண்பர்கள் இருவரும் இணைந்து பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதையும் காணலாம்.

# உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ்' பிரதிகள் கனடாவில் ஆதரவு வழங்கிய நண்பர்கள் சிலருக்கு நேரடியாக வழங்கப்பெற்றன












கனடா உதயன் "இலங்கைச் சிறப்பிதழ்" வெளிவருவதற்கு பல வழிகளில் ஆதரவு வழங்கிய நண்பர்கள் சிலர் கடந்த 29-05-2022 அன்று நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில் நேரடியாகக் கலந்து கொள்ள இயலவில்லை. சிலர் பிரதிகள் மேடையில் வழங்கப்பெற்றபோது அங்கு இருக்கவில்லை.

எனவே உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சில நண்பர்களுக்கு இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை நேரடியாகக் கையளித்து வருகின்றார்

அந்த வரிசையில், இங்கு காணப்படும் படங்களில் கணக்காளரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள், மோட்கேஜ் மற்றும் வீடு விற்பனை முகவர் யூட் ஞானேந்திரன் அவர்கள், **Royal LePage Ignite Realty Brokerage** நிறுவனத்தின் பிரபல வீடு விற்பனை முகவரும் நண்பருமான உதயன் சிவராஜா அவர்கள், நண்பரும் சமூக சேவையாளருமான விசு கணபதிப்பிள்ளை அவர்கள், **MAJESTIC CITY** தமிழர் அங்காடி நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் கிறிஸ் சிவக்கொழுந்து அவர்கள் ஆகியோர்க்கு "கனடா உதயன்" இலங்கைச் சிறப்பிதழ்" பிரதிகளை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கையளிப்பதைக் காணலாம்.

# போதைப்பொருள், கொலை, இடையறா வன்முறை! இதுதான் கமலஹாசனின் 2 - ஆவது விக்ரம்

## நடிப்பிலும் ஒரு நடிப்பு என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது




*-நக்கீரன் - கோலாலம்பூர்*

கண்களுக்கு பசுமையையும் எண்ணத்திற்கு வெண்மையையும் கொஞ்சம்கூட அளிக்காமல், முழுக்க முழுக்க இருள்சூழ்ந்த வன்முறைக் காவியமாக உருவாகியுள்ள புதிய விக்ரம் படம், விட்டில் பூச்சிகளைப் போன்ற இளம் இரசிகர்களுக்கு வேண்டுமானால் 'வேற லெவல்'-ஆக இருக்கலாம்.

ஆனால், உலகில் உள்ள அத்துணை ஆயுதங்களையும் காட்டிக் கொண்டு, படம் முழுக்க இரத்தக் கவிச்சை அடிக்கும் பயங்கரவாதத்தை முன்னிறுத்தி, போதைப் பொருளைப் பயன்படுத்துவது ஆண்மைக் அழகு என்பதைப் போல சித்தரித்துக் கொண்டு இப்பொழுது தமிழர் வாழும் நிலமெல்லாம் படமெடுத்து ஆடும் இந்த விக்ரம் படத்தில், சிந்தனைக்கான சிறு அம்சம்கூட சிறிதளவும் இல்லை.

*(உள்ளே விபரமான செய்தி 32ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றெடுத்த வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker
Homelife/Future Reality Inc., Brokerage